விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

வலம்புரி
Valampurii
E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 26 செவ்வாய்க்கிழமை (09.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 052

# வேண்டாம் சர்வதேசம்; படையினரை பாதுகாப்போம்


## மகிந்த தலைமையில் கையெழுத்து வேட்டை ஆரம்பம்

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் சர்வதேச நீதி மன்றம் வேண்டாம்-படைவீரர்களை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் பத்து இலட்சம் கையெழுத்து பெறும் நடவடிக்கை நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கையெழுத்து சேகரிக்கும் நோக்குடன் நேற்று புறக்கோட்டை சம்புத்தாலோக விகாரையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த

24ஆம் பக்கம் பார்க்க





## தமிழர்களின் அபிலாசைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்

### அமைதியாக சுஷ்மா அழுத்தம்!

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தால் உரு வாக்கப்படவுள்ள புதிய அரசியலமை ப்பு, சிறுபான்மையினரான தமிழ் மக்களின் அபிலாசைகள் உறுதிப் படுத்தப்படுவதாக இருக்கவேண் டும் என புதுடில்லி எதிர்பார்ப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், இலங்கை அரசா ங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

அவர் இந்த தகவலை அமைதி


24ஆம் பக்கம் பார்க்க



சர்வதேச நீதிமன்றம் தேவையில்லை என்ற கோசத்துடன் பொது மக்களிடம் கையொப்பம் பெறும் ஆரம்ப நிகழ்வு கொழும்பு கோட் டையில் உள்ள விகாரை ஒன்றில் நேற்று மகிந்த மற்றும் கோத்தா வின் முதல் கையொப்பங்களுடன் ஆரம்பமானது. அவ் வேளை யில் அங்கு ஒரு கறுப்பு நாய் யாரும் எதிர்பாராத வகையில் மேடை யில் பிரசன்னமாகியிருந்தது.

## 'சர்வதேச பொறிமுறை தேவையில்லை'

### ஐ.நா ஆணையாளரிடம் சுமங்கல தேரர்



23ஆம் பக்கம் பார்க்க

## ஹூசைன்-கூட்டமைப்பு இன்று சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள ஐ.நா ஆணையாளர்செயிட் அல்ஹுசைனை இன்றைய தினம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் இரா.சம்பந்தன் தலைமையில் சந் திக்கவுள்ளனர்.

குறித்த சந்திப்பானது இன்று

24ஆம் பக்கம் பார்க்க

## நாடளாவிய டெங்குத் தாக்கத்தில் யாழ்.மாவட்டம் 2ஆவதாக பதிவு

### கட்டுப்படுத்த பணிகள் தீவிரம்

(கொழும்பு)

நாட்டில் டெங்குநோயாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்ட மாவட்டங்களில் இரண்டாவது மாவ ட்டமாக யாழ்.மாவட்டமும் முதலா வதாக கொழும்பு மாவட்டமும் பதி வாகியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நுள ம்பு பெருகுவதற்கு ஏதுவான இடங் களை ஒருவார காலத்துக்குள் துப் புரவுசெய்யாவிடின் குறித்த பகுதிக ளின் உரிமையாளர்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் எச்சரித்து ள்ளார்.

யாழ்மாவட்டத்தில்டெங்குநோயின தாக்கம் அதிகமாக காணப்படுவ தன் காரணமாக அனைத்து தரப்

24ஆம் பக்கம் பார்க்க

## சரத் பொன்சேகா எம்.பியாக நியமனம்



(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் இரா ணுவத் தளபதியும், ஜனநாயக கட்சி யின் தலைவருமான பீல்ட் மார்ஷல சரத் பொன்சேகா, ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நிய

24ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றில் படையினரை முன் நிறுத்த முயற்சி!

### அரசையும் ஐ.நா ஆணையாளரையும் சாடினார்-கோத்தா

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற பய ங்கரமான போரை தமது உயிரை யும் உடல் அங்கங்களையும் தியா கம் செய்து முடிவுக்கு கொண்டு வந்த எமது படைவீரர்களை இந்த அர சாங்கம் சர்வதேச போர்க்குற்ற விசா ரணை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல முயற்சிக்கின்றது என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்து ள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் சர்வதேச நீதிமன்றம் வேண்டாம். எமது படை வீரர்களைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் பத்து இலட்சம் கையெழுத்து பெறும் நடவடிக்கை நேற்று திங்கட்கிழமை புறக்கோட்டை சம்புத்தாலோக விகாரையில் ஆர ம்பித்து வைக்கும் நிகழ்வில் கல ந்து கொண்டு செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோது முன் னாள் பாதுகாப்பு செயலாளர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் செய்தி

24ஆம் பக்கம் பார்க்க

## சிங்க லே பேரணி; நீதிமன்றம் தடை!


(கொழும்பு)

சிங்க லே தேசிய அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வாகன ஊர்வலம் மற்றும் கூட்டம் என்பன வற்றுக்கு நீதிமன்றத்தில் பொலி ஸார் இடைக்காலத் தடை உத்தர வொன்றைப் பெற்றுள்ளனர்.

பண்டாரவளையிலிருந்து பதுளை நோக்கி வாகனப் பேரணியில் வந்து நேற்றுமுன்தினம் மாலை முதிய ங்கன ரஜமகா விகாரையில் கூட்ட மொன்றை நடத்த சிங்க லே அமை ப்பு தயாராகி வருவதாக பொலிஸா

24ஆம் பக்கம் பார்க்க

## பேருந்து விபத்து; சிகிச்சை பலனின்றி சிறுவன் உயிரிழப்பு



23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொனிபொஸ் பெரேராவின் இடமாற்றம் இரத்து!



(கொழும்பு)

படைத்தரப்பின் வன்னிப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபொஸ் பெரேராவின் இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இவர் படைத்தலைமையகத்தில் பொது அதிகாரிகளுக்கான பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளதாக கடந்த மாதம் 9ஆம் திகதி படைத்தளபதி அறிவித்திருந்தார்.

இந்நிலையில், மேஜர் ஜெனரல் பொனிபொஸ் பெரேராவின் இடமாற்றம் தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், இதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அதேவேளை, படைத்தரப்பின் யாழ். தலைமையகத்தின் புதிய தளபதியாக இராணுவச் செயலராகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, பொறுப்பேற்றுள்ளார். (செ-12)

# கோழிக் கழிவுகளை கொட்டிய குற்றத்துக்காக ஒருவர் கைது

## "ரூ.10 ஆயிரம் தண்டமும் சிறைத்தண்டனையும் விதிப்பு"

பொது இடங்களில் இறைச்சிக்காக வெட்டப்பட்ட கோழிகளின் கழிவுகளை கொட்டிய குற்றத்துக்காக குற்றவாளி ஒருவருக்கு ரூபாய் 10 ஆயிரம் தண்டமும் ஒரு வருட கால ஒத்திவைக்கப்பட்ட கடுழிய சிறைத தண்டனையும் வழங்கி மல்லாகம் நீதவான நீதிமன்ற நீதிபதி ஏ.யூட்ஸன் தீர்ப்பளித்துள்ளார்.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த சில நாட்களாக வீதிகள் மற்றும் பொது இடங்களில் கோழி கழிவுகள் கொட்டப்பட்டு பாரிய சுகாதார சீர்கேடுகள் இடம்பெற்று வருவதாக பொது மக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

இதற்கான காரணத்தை கண்டுபிடித்து தடுக்கும் நோக்குடன் தெல்லிப்பளை மற்றும கீரிமலை பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து அப்பகுதி இளைஞர்களை ஒன்றிணைத்து நேற்று முன்தினம் இரவு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது வீதியால் வந்த நபர் ஒருவர் சுமார் 60 கிலோவுக்கு மேற்பட்ட இறைச்சிக்காக வெட்டப்பட்ட கோழிகளின் கழிவுகளை வீதியில் கொட்டுவதற்கு முற்பட்ட போது கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இளைஞர்களால் குறித்த நபர் பிடிக்கப்பட்டு தெல்லிப்பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மல்லாகம் நீதிமன்றில் தெல்லிப்பளை பொலிஸாரினால் நேற்றையதினம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதவானால் ரூபாய் 10 ஆயிரம் தண்டப்பணமும் 5 வருடகால ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடுழிய சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்துள்ளார். (செ-9)

# 376,711 பேருக்கு புதிதாக வாக்குரிமை

(கொழும்பு)

2015ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் 3 இலட்சத்து 76 ஆயிரத்து 711 பேர் புதிதாக வாக்களிப்பதற்கு தேர்தல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

2014ஆம் ஆண்டில் 15மில்லியன் 44 ஆயிரத்து 490 பேர் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

2015ஆம் ஆண்டில் 15மில்லியன் 421 ஆயிரத்து 201பேர் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதன்படி 3இலட்சத்து 76 ஆயிரத்து 711 பேருக்கு புதிதாக வாக்குரிமை கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த முறை வாக்காளர் இடாப்பில் கம்பஹா மாவட்டத்தில் அதிகளவான வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 16 இலட்சத்து 81 ஆயிரத்து 887 பேர் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் மிகவும் குறைந்தளவான வாக்காளர்கள் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (செ-12)

# 7 கிலோ கஞ்சா; ஒருவர் கைது!

(கொழும்பு)

கொழும்பு பொரளை பிரதேசத்தில் 7 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அருகில் உள்ள தனியார் வங்கி ஒன்றுக்கு அருகில் சந்தேகம் படும்படியாக காணப்பட்ட ஒருவரை சோதனையிட்ட போது அவரிடம் இருந்து 7.74 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 26 வயதான ஹபராதுவ, பிட்டதுவ பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அவர் இன்று மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்து பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்(செ-12)

# இணையவழி வி.மு கற்கைநெறி 14-ம் திகதி தெரிவுப் பரீட்சை

இணையவழி வியாபார முகாமைத்துவ மாணிக் கற்கைநெறியின் ஆறாவது அணியைத் தெரிவு செய்வதற்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 14-02-2016 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவபீட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இது ஒரு மணித்தியால பொது உளச்சார்பு பரீட்சையாக அமையும். இதற்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 10.02. 2016 வரை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் உதவிப் பதிவாளர் (021 222 3610) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் யாழ் பல்கலைக்கழகம் அல்லது இணைப்பாளர் இணையவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி யாழ் பல்கலைக்கழகம் (021 222 1106) ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு இணையவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறியின் இணைப்பாளர் பேராசிரியர் க.தேவராஜா அறியத்தந்துள்ளார். (ந)

# வழித்தட அனுமதிச் செய்தி; பஸ் உரிமையாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற தனியார் பஸ் ஒன்று வழித்தட அனுமதிப்பத்திரம் இன்மையால் சாவகச்சேரி பொலிஸாரால் இடைமறிப்புச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான செய்தி கடந்த 5-ம் திகதி வலம்புரியில் வெளிவந்திருந்தது.

இச் செய்தி தொடர்பில் பஸ் உரிமையாளர் கருத்துத் தெரிவிக்கையில், அன்றைய தினம் குறித்த வழித்தட அனுமதியின் மூலப்பிரதி தம்வசம் இருந்திருக்கவில்லை எனவும் அம் மூலப்பிரதி கொழும்பில் இருந்ததாகவும் தெரிவித்துள்ளதுடன் தமது வாகனத்திற்கான வழித்தட அனுமதிப்பத்திரத்தையும் அவர் வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வந்து காண்பித்துள்ளதுடன் பொலிஸாரிடமும் அதன் பிரதியை காண்பித்து நிலைமையை சுமுகமாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# திருட்டுத் தேங்காயை உடைத்து அளிக்கும் சாபம் பலிக்காது

## மகிந்த அணிக்கு ரணில் கிண்டல்

(கொழும்பு)

திருட்டு தேங்காயினை கொண்டு இறைவனை நாடுவதில் பயனில்லை. தேசிய அரசாங்கத்தினூடாக நாம் முன்னெடுக்கும் வேலைத் திட்டத்தினை முடக்குவதற்கு நாம் எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். குருநாகல், குளியாப்பிட்டிய பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினருடன் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக தேங்காய் உடைப்பதாயின் நாடுபூராகவும் உள்ள அரச தோட்டங்களில் விலைக்கு வாங்கி பத்து இலட்சம் தேங்காய்களாவது உடையுங்கள். அதன் ஊடாக தென்னை பயிர்ச் செய்கையாளர்களின் வருமானம் அதிகரிக்கும். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு நாம் பூரண ஆதரவினை நல்குவோம். அதற்கு மாறாக அரச தோட்டங்களில் தேங்காய் திருட வேண்டாம். திருட்டு தேங்காயினை கொண்டு இறைவனை நாடுவதில் பயனில்லை. தேசிய அரசாங்கத்தினூடாக நாம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தினை முடக்குவதற்கு நாம் எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (செ-12)

# தங்கச் சங்கிலி அபகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் வீதியால் சென்றுகொண்டிருந்த இளைஞன் ஒருவனின் 3 பவுண் தங்கச் சங்கிலியை சாதுரியமாக அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று காலை 10.30 மணியளவில் யாழ்.வீரமாகாளி அம்மன் கோவிலடியில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாரிடம் பிரஸ்தாப இளைஞனால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிளின் இலக்கம் அவதானிக்கப்பட்டு பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டபோதும் ஆரம்ப விசாரணையில் குறித்த மோட்டார் சைக்கிளின் இலக்கம் போலியானது என தெரியவந்துள்ளது. (செ-11)


**கொள்வனவு** தொடர்பு 0773127498

ஊர்ச்சேவல் மட்டும் 1000/= மேல் கொள்வனவு செய்யப்படும். ஊர்ப்பேடு, ஊர்க்குஞ்சு, கல்பேட், வான்கோழி என்பன நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும். (3543)

தாசன் பாம்
158/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

**விற்பனைக்கு**

புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் கோயில் றோட் பிள்ளையார் கிறேசர், 3 ஏக்கர் காணி வீடு (சகல வசதிகளுடன்) விற்பனைக்குண்டு. (3539)

தொடர்புகளுக்கு: 0770489674

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரி ஆய்வுகூட உதவியாளர் திருமதி ஜெயக்குமாரி அசோகன் அவர்களின் அன்புத் தந்தையார்

நாகமுத்து ஜெயராஜசிங்கம்

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைந்தோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (3544)

யா/ அச்சுவேலி மத்திய கல்லூரிச் சமூகம்

**கண்ணீர் அஞ்சலி**

எமது நிறுவனத்தில் பணியாற்றிய
சோமசுந்தரம் சுந்தரேஸ்வரன்



அவர்களின் மரணச்செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! (C-3724)

ஊழியர்கள்
கஜமுகன் ஹாட்வெயார்
147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# யுத்தக் குற்றங்கள் இடம்பெறவில்லை

## கோத்தபாய கூறுகிறார்



(கொழும்பு)

**யுத்த காலத்தில் இராணுவ வீரர்களால் எந்த யுத்தக்குற்றங்களும் இழைக்கப்படவில்லை என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அத்துடன் இந்த அரசாங்கமும், அரசாங்கத்தைச் சார்ந்தவர்களும் யுத்த காலத்தின் போது இராணுவ வீரர்கள் குற்றமிழைத்ததாகக் கூறி இராணுவ வீரர்கள் மீது குற்றஞ் சுமத்துவதோடு, அவர்களை சர்வதேச நீதிமன்றுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையில் நாம் இதற்கு ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் கோத்தபாய கூறியுள்ளார்.

கொழும்பில்நேற்று இடம்பெற்று வரும் இராணுவ வீரர்களுக்கு ஆதரவு தெரிவித்து கையொப்பம் இடும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த அரசாங்கமானது புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் அமைப்புகளின் கருத்துக்களுக்கு அடிபணிந்து செயற்படுவதாகவும் குறிப்பிட்ட அவர், இந்தப் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பணத்திலேயே விடுதலைப் புலிகள் இராணுவத்திற்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்ததாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பக்கபலமாக செயற்பட்டவர்கள் நாங்கள் அதேபோல் இந்த நாட்டில் நீண்டகாலம் நிலவிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தியவர்களும் நாங்களே என கோத்தபாய இதன்போது தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் பதவியேற்று ஒருவருடம் பூர்த்தியடைந்த நிலையில் இந்த நாட்டு மக்களுக்கு இந்த புதிய அரசாங்கம் என்ன செய்தது? என்றும் கோத்தபாய ஊடகங்களை நோக்கி கேள்வி எழுப்பினார்.

இந்த அரசாங்கம் பேசுவதற்கு பயிற்சி அளித்து ஒருவரை அனுப்பியுள்ளதாகவே அவரது வருகையை நாம் கருதும் இதேவேளை சாதாரணமாக 2 அல்லது 3 நாட்களில் அவரின் வருகை எதை சாதித்து விடப் போவது என்றும், அவர் எதை முழுமையாக தெரிந்துகொண்டு செல்லப் போகிறார் என்றும் எமக்கு தெரியவில்லை என்றும் கோத்தபாய ராஜபக்ஷ இதன் போது தெரிவித்தார். (இ)

## ஜெனிவா தீர்மானம் குறித்து இரகசிய கடிதம் -ஜீ.எல்.பீரிஸ்



இலங்கைக்கு எதிரான ஜெனிவாத்தீர்மானத்தை செயற்படுத்துவதற்காக மேலை நாடுகள் மற்றும் இந்தியாவிற்கும் அரசாங்கம் இரகசிய கடிதங்கள் அனுப்பியுள்ளதாக முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள மனித உரிமை ஆணையாளரிடம் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் தலைவர்களின் கையெழுத்து இடப்பட்ட கடிதம் ஒன்றை கையளிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில, மனித உரிமை ஆணையாளரின் இலங்கை விஜயத்திற்கு பின்னர் அமைச்சரின் தலைமையில் ஒன்றிணைந்த ஊடக சந்திப்பொன்றை நடத்துமாறு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு சவால் விடுத்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## அரசியல் பாடநெறியைக் கற்பதற்கு அமெரிக்கா சென்ற அமைச்சர் ஹாசிம்

விசேட அரசியல் பாடநெறி ஒன்றை கற்பதற்காக அமைச்சர் கபீர் ஹாசிம் அமெரிக்காவின் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே அமைச்சரை இந்த பாடநெறிக்காக அனுப்பியுள்ளதாக பிரதமரின் அலுவலகத்தின் தகவல்கள் கூறுகின்றன. அமைச்சர் ஹாசிம் கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்கா புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அரச நிறுவனங்கள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான இந்த பாடநெறி 10 நாட்களுக்கு கற்பிக்கப்படுவதுடன் பல நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான அரசியல்வாதிகள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு மாத்திரமே இதற்கான அனுமதி வழங்கப்படுகிறது. (இ)

## கசிப்பு, கோடா வைத்திருந்த கணவன், மனைவி கைது!

கசிப்பு மற்றும் கோடா என்பவற்றுடன் கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துன்னாலை வேம்படிப் பகுதியில் நேற்று முன்தினம் நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போதே கணவன். மனைவி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸார் மேற்படி பகுதியில் தேடுதல் ஒன்றை நடத்தியிருந்தனர். இதன் போது ஒன்றரை லீற்றர் கசிப்பினையும் 7லீற்றர் கோடாவினையும் பொலிஸார் கைப்பற்றியிருந்ததுடன் அதனை வைத்திருந்த இருவரையும் கைது செய்தனர். (இ-5-60)

## மகிந்தவின் யோசனையே தேசிய அரசாங்கம்-நிமால்



தேசிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் யோசனையே என்று, போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அஹங்கமயில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தேசிய அரசாங்கம் என்றொரு கருப்பொருளை ஒரு சிறந்த மனிதரே அறிமுகப்படுத்தினார். அவர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆவார். அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு முன்னரே இந்தக் கருப்பொருளை அறிமுகப்படுத்தி விட்டார்" என்று அவர் தெரிவித்தார்.

"ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றாகச் சேர வேண்டும் என்று ஐ.தே.கவின் 17 உறுப்பினர்கள் உள்ளடங்கலாக தேசிய அரசாங்கத்தை உருவாக்குவோம் என்று அவர் பரிந்துரை செய்தார். ஆனால், எமது கட்சி உறுப்பினர்கள் பலருக்கு அது ஞாபகத்தில் இல்லை" என்று அவர் தெரிவித்தார். (இ)

## இலங்கை பசுமைக் கட்சிக்கு தடை

இலங்கை பசுமைக் கட்சிக்கு தேர்தல்கள் ஆணைக்குழு தடை விதித்துள்ளது.

இதுவரை காலமும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளில் ஒன்றாக திகழ்ந்த பசுமைக் கட்சியை, தேர்தல்கள் ஆணைக்குழு தடை செய்துள்ளது. தேர்தல்கள் ஆணைக் குழுவினால் கோரப்பட்டிருந்த தகவல்களை பசுமைக் கட்சி வழங்கத் தவறியுள்ளது.

தகவல்களை வழங்கத் தவறியுள்ளமையினால் பசுமைக் கட்சி தடை செய்யப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

பசுமைக் கட்சி ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளின் வரிசையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். டாக்டர் பிரசன்ன குரே இந்த கட்சியின் செயலாளராக திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## என்னையும் விரைவில் கைது செய்வார்கள்

### அம்பாந்தோட்டையில் நாமல் புலம்பல்



அரசாங்கம் விரைவில் தம்மையும் கைது செய்யலாம் என்று அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும் அதனை தடுக்க தாம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை ஹுனுகம் வெஹர என்ற இடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய நாமல், அரசாங்கத்தினால் பொதுமக்களை திருப்திப்படுத்த முடியாமல் போயுள்ளது. எனவேதான் அரசியல் பழிவாங்கல்களை முன்னெடுத்துள்ளது என்றும் நாமல் தெரிவித்தார்.

பழிவாங்கல் நடவடிக்கையாகவே தமது சகோதரர் யோஷிதவும் கைது செய்யப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

## சர்வதேச பாடசாலைகளை கண்காணிக்க விரைவில் புதிய சட்டதிட்டங்கள் அறிமுகம்

### கல்வி அமைச்சர் தகவல்



சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்வது தொடர்பில் புதிய சட்ட திட்டங்கள் அறிமுகப்படுத் தப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான சட்ட மூலமொன்று மிக விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. சர்வதேசப் பாடசாலைகள் தொடர்பில் இதுவரை எந்தவொரு சட்டதிட்டமும் காணப்படாதுள்ளது.

ஏற்கனவே உள்ள முறையின் கீழ் நினைத்தவர்கள் எல்லாம் பதிவு செய்து சர்வதேச பாடசாலைகளை ஆரம்பிக்கும் நிலை காணப்படுகின்றது. இதற்கான சட்ட மூலம் தயாரிக்கும் போது சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் கருத்துக்கள் கலந்தாலோசனை செய்யப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

### மக்கலமின் பிரியாவிடை ஒரு நாள் போட்டி

# ஆஸியின் சலசலப்புகளுக்கு மத்தியில் தொடரை வென்றது நியூஸிலாந்து



பிரண்டன் மக்கலமின் பிரியாவிடை ஒரு நாள் போட்டியாக அமைந்த ஹமில்டன் ஒரு நாள் போட்டியை 55 ஓட்டங்களால் வெற்றி கொண்ட நியூஸிலாந்து அணி, 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றி, ஆஸியின் சச்சரவுகளுக்கு மத்தியில் அணித் தலைவர் மக்கலமை வெற்றிகரமாக வழியனுப்பி வைத்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில்



வென்ற ஆஸி அணித் தலைவர் ஸ்மித் முதலில் நியூஸிலாந்தை துடுப்பாட அழைத்தார். இதன்படி களமிறங்கிய நியூஸிலாந்து 45.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து246 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

247 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 94/2 என்று நன்றாகவே விரட்டி வந்தது.

ஆனால் லெக்ஸ்பின்னர் சோதி 19ஆவது ஓவரில் ஸ்மித் (21), மக்ஸ்வெல் (0) ஆகியோரை அடுத்தடுத்து வீழ்த்த அவுஸ்திரேலிய சரிவு தொடங்கி 191 ஓட்டங்களுக்கு முடிந்தது. இதன்மூலம் தொடரை 2:1 என்று தொடரை கைப்பற்றிய நியூஸிலாந்து, அவுஸ்திரேலியாவின் 7 ஒருநாள் தொடர் வெற்றிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

**மிட்செல் மார்ஷ் அவுட் சர்ச்சை**

மிட்செல் மார்ஷ் 42 பந்துகளில் 41 ஓட்டங்களை எடுத்திருந்த போது, 34ஆவது ஓவரில் ஹென்றி பந்தில் அவரிடமே பிடி கொடுத்தார். லேசான முறையீடு மட்டுமே எழுந்தது. பந்து தரையில் பட்டு வந்ததாக நினைத்த நடுவர் ஆட்டமிழப்பு கொடுக்கவில்லை. ஹென்றியும் அடுத்த பந்தை வீச தயாராகி விட்டார், ஆனால் மைதானத்தின் பெரிய திரையில் காண்பிக்கப்பட்ட ரீ-ப்ளேயில் பந்து மட்டையில் பட்டு மார்ஷின் பூட்ஸில் பட்டு மட் ஹென்றியிடம் பிடியானது தெரிய வந்தது.

முதலில் ஆட்டமிழப்பு வழங்காத நடுவர், பெரிய திரை ரீ-ப்ளேயை பார்த்து 3ஆவது நடுவரை அழைத்தது சர்ச்சைக்குள்ளானது. இதற்கிடையில் அவுஸ்திரேலிய-நியூஸிலாந்து வீரர்களிடையே சிலபல வார்த்தைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. கடைசியில் சரியான தீர்ப்பு தான் வெளியானது, ஆனால் பெரிய திரையைப் பார்த்துவிட்டு 3ஆவது நடுவரை அழைத்தது இப்போது சர்ச்சையாகியுள்ளது.

முன்னதாக கவாஜா, வோர்னர் 5 ஓவர்களில் 39 ஓட்டங்களை அதிரடியாகச் சேர்த்தனர். வோர்னர் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழநதார். இவர் ஆட்டமிழந்தவுடன ஓட்ட விகிதம் குறைந்தது. ஆனாலும் 11.2 ஓவர்களில் ஸ்கோர் 75 ஓட்டங்களை எட்டிய போது 36 பந்துகளில் 4 பவுண்டரிகள், 2 சிக்சர்களுடன்44 ஓட்டங்கள்எடுத்த கவாஜா பிரேஸ்வெல் ஆட்டமிழந்தார்.

அதன் பிறகுதான் 19ஆவது ஓவரில் லெக் ஸ்பின்னர் ஐ.எஸ். சோதி, ஸ்மித், மக்ஸ்வெல் ஆகியோரை ஒரே ஓவரில் வீழ்த்தினார். 94/4 என்பதிலிருந்து பெய்லி

சர்ச்சைக்குள்ளான சம்பவம்



(33), மிட்செல் மார்ஷ் (41) ஸ்கோரை 153 ஓட்டங்களுக்குக் கொண்டு சென்றனர். அதன்போது பெய்லி, ஹென்றியின் ஆட்டமிழநதார். பிறகு 9 ஓட்ட எண்ணிக்கை 164 ஆக இருந்த போதுதான் மிட்செல் மார்ஷின் சர்ச்சைக்குரிய ஆட்ட மிழப்புத் தீர்ப்பு வந்தது. மத்யூ வேட் 17 ஓட்டங்களில் மில்னிடம் ஆட்டமிழந்தார். அவுஸ்திரேலியா 191 ஓட்டங்களுக்குச் சுருண்டது.

நியூஸிலாந்து தரப்பில் ஹென்றி 3 கோரி அண்டர்சன், சோதி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

**நியூஸிலாந்து இன்னிங்ஸ்**

நியூஸிலாந்து துடுப்பாட்டம் செய்ய அழைக்கப்பட்டவுடன் சரவெடி ஆட்டத்தை தொடங்கினர் மக்கலமும், கப்திலும். இவர்கள் இருவரும் இணைந்து 9.3 ஓவர்களில் 84 ஓட்டங்களை விளாசினர். ஹேஸ்டிங்ஸின் இன்ஸ்விங்கரை பவுலர் தலைக்கு மேல் நேராக தூக்கி பவுண்டரியுடன் தொடங்கினார் மக்கலம். அடுத்த பந்தே மேலேறி வந்து மிட்விக்கெட்டில் பளார் ஷொட் அடித்து அடுத்த பவுண்டரியை அடித்தார். கப்தில்.

பிறகு ஹேசில்வுட்டின் ஒரு ஓவரில் கப்தில் மிட்விக்கெட்டில் ஒரு சிக்சரையும், ஒரு பவுண்டரியையும் அடித்தார். 8ஆவது ஓவரில் மீண்டும் வேகப்பந்து வீச்சாளர் போலண்ட் மக்கலமிடம் சரியாகச் சிக்கினார். கவரில் ஒரு பவுணடரியுடன், நகர்ந்து கொண்டு ஒரு லோங் ஓஃப் சிக்ஸ், பிறகு இறங்கி வந்து ஸ்கொயர் லெக்கில் பிளிக் சிக்ஸ் என்று 16 ஓட்டங்களை அந்த ஓவரில் விளாசியதோடு, ஒருநாள் போட்டிகளில் 200ஆவது சிக்சரை அடித்தார் மக்கலம்.

இப்படியே 27 பந்துகளில் 6 பவுண்டரி 3 சிக்சருடன் 47 ஓடடங்கள் விளாசிய மக்கலம் மிட்செல் மார்ஷ் பந்தை சுழற்றி அடிக்க முயன்று பிடி கொடுத்து வெளியேறினார். அவரது கடைசி ஒரு நாள் போட்டியில் 47 ஓட்டங்களை தன் பாணியில் விளாசிவிட்டு ஆட்டமிழந்தார் மக்கலம்.

வில்லியம்சன் 18 ஓட்டங்களில் போலண்ட் பந்தில் போல்ட் ஆக 61 பந்துகளில் 4 பவுண்டரிகள் 3 சிக்சர்களுடன் 59 ஓட்டங்கள் எடுத்த கப்தில் லெக்ஸ்பின்னர் ஸாம்பா பந்தில் ஆட்டமிழந்தார். ஹென்றி நிகோல்ஸ் 18 ஓட்டங்களில் ஹேசில்வுட்டிடம் ஆட்டமிழந்தார்.

28.4 ஓவர்களில் 171/4 என்று இருந்தது நியூஸிலாந்து. அதன் பின்வரிசையாக விக்கெட்டுகள் சரிய கடைசி 7 விக்கெட்டுகளை 75 ஓட்டங்களுக்கு இழந்து இறுதியில் 45.3 ஓவர்களில் 246 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பந்துவீச்சில் ஆஸி சார்பில் ஹேசில்வூட் அருமையாக வீசி 45 ரன்களுக்கு 2 விக்கெட்டுகளையும் மிட்செல் மார்ஷ் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக ஒரே ஓவரில் ஸ்மித், மக்ஸ்வெலை வீழ்த்தி வெற்றியை நியூசிலாந்து அணி பக்கம் திருப்பிய லெக் ஸ்பின்னர் சோதி தேர்வு செய்யப்பட்டார். (க)

# மரண அறிவித்தல்

## பார்த்தீபன் சுவஸ்திகன்

(மாணவன் – பொஸ்கோ வித்தியாலயம்)



பார்த்தீபன் சுவஸ்திகன் (மாணவன்-பொஸ்கோ வித்தியாலயம் தரம் 1) 08.02.2016 திங்கட்கிழமை இரவு அகால மரணமானார்.

அன்னார் செல்வராசா பார்த்தீபன் (முகாமையாளர்-இலங்கை வங்கி, நல்லூர்)-ஹம்சா பார்த்தீபன் தம்பதியரின் அன்பு மகனும் மாரிமுத்து செல்வராசா (ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர் Former District Co-ordinator FAO), திருமதி ஜெயராணி செல்வராசா, நாகலிங்கம் ஜெகத்குருதாஸ் (ஓய்வுபெற்ற மருந்தாளர் – யாழ்.போதனா வைத்தியசாலை, மருந்தாளர் காகில்ஸ் பூட் சிற்றி – சுன்னாகம்), காலஞ்சென்ற புஸ்பவதி ஜெகத்குருதாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் செல்வராசா உமாசங்கர் (மக்கள் வங்கி – சங்கானை), திருமதி துளசிதா உமாசங்கர் (மக்கள் வங்கி பல்கலைக்கழக கிளை-திருநெல்வேலி), திவ்யா கெகத்குருதாஸ் ஆகியோரின் பெறாமகனும் உமாசங்கர் ரோஹினின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் சேச் லேன், கொக்குவில் மேற்கு கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

**சேச் லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

(3546)

தகவல்:
**செல்வராசா பார்த்தீபன் (தந்தை)**

### 11 தங்கத்துடன் 61 பதக்கங்கள்

# தெற்காசிய போட்டிகளில் 2ஆம் இடத்தில் இலங்கை




இந்தியாவின் குவாஹாத்தியில் இடம்பெற்று வரும் 12ஆவது தெற்காசிய போட்டிகளில் இலங்கைக்கு நேற்றையதினம் தங்கம், வெள்ளி பதக்கங்கள் கிடைத் துள்ளது.

100 மீற்றர் நீச்சல் போட்டியில் (Back Stroke) மற்றுமொரு தங்கப் பதக்கத்தை இலங்கை சார்பில் கிமிகோ ரஹீம் பெற்றுக் கொண்டார்.

ஏற்கெனவே இவர் இப்போட்டியின் 200 மீற்றர் பிரிவிலும் தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார்.

பெண்களுக்கான 75 கிலோ கிராம் எடை பிரிவுக்குட்பட்ட பளு தூக்கல் போட்டியில், இலங்கையைச் சேர்ந்த அசினி சுராங்கி இரண்டாம் இடத்தைப் பெற்றதன் மூலம் வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.

இதன் அடிப்படையில் 11 தங்கம், 27 வெள்ளி, 23 வெண்கல பதக்கங்களுடன் மொத்தமாக 61 பதக்கங்களை பெற்றுள்ள இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது.

53 தங்கம், 20 வெள்ளி, 06 வெணகல பதக்கங்களுடன் மொத்தமாக 79 பதக்கங்கள் பெற் றுள்ள இந்தியா தொடர்ந்தும் முதல் இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆடல் உலகில் எனது சுவடுகள் நூல் வெளியீட்டு விழா சனியன்று

கலைஞர் வேல் ஆனந்தனின் ஆடல் உலகில் எனது சுவடுகள் என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது மண்டப குரு கோபிநாத் திரையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண அமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், இலங்கை நிர்வாக சேவை செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை, வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினம் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யாழ். நாச்சிமார்கோவில் இசைச் சித்தர் கண்ணன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## வீதியில் பயணிக்க முடியவில்லை



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் சந்தியில் இருந்து கடற்கரைக்குச் செல்லும் வீதி பயணிக்க முடியாதவாறு சேதமடைந்து காணப்படுகின்றது.

இவ்வீதி தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர். (இ-5-60)

## திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் நாளை

திருமறைக். கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை அருள் பணி ஜே.பி.அன்ரனிதாஸ் அடிகளார் கலந்துகொண்டு இவ் ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் உட்பட ஏனைய துறைசார்ந்த பிரிவுகளுக்கான பிரதிகளை வழங்கவுள்ளார்.

பிரதிவழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும் இம்முறை புதிதாக இணைந்து பங்குபற்ற விரும்பமுடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 17,18,19,20 ஆம் திகதிகளில் மாலை 6.45 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கிலும், மார்ச் மாதம் 5 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு இளவாலை திருமறைக் கலாமன்ற அரங்கிலும் மேடையேற்றப்படவுள்ளது. (இ-5)

## சமுர்த்தி கொடுப்பனவு முறைகேடு குறித்து உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்

சமுர்த்தி கொடுப்பனவில் உள்ள முறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் உடனடியாகத் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி திணைக்கள பணிப்பாளர்கே.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சில சமுர்த்தி வங்கிகளில் முறைகேடுகள் இடம் பெறுவதாகவும் சில வங்கிகளில் சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்குவதில் கால தாமதம் ஏற்படுவதாகவும் இதனால் சமுர்த்தி பயனாளிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சில சமுர்த்தி வங்கிகளில் ஆளணிப் பற்றாக் குறைகள் காணப்படுகின்றன.

அவை தொடர்பாக விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.மேலும்சமுர்த்திவங்கிகளில் இடம்பெறும் முறைகேடுகள்தொடர்பாக எனக்கு அறியத்தரும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்என அவர்மேலும் தெரிவித்தார். (இ-9)

## வீதி புனரமைக்கப்படவில்லை

யாழ்ப்பாணம் - பலாலிவீதியின் ஊரெழு- கரந்தன் நீர்வேலி செல்லும் பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைப்பின்றி காணப்படுவதாக கரந்தன் வாழ் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 வருடங்களாக புனரமைப்பின்றி காணப்படுகின்ற இவ் வீதியை எந்தவொரு அதிகாரிகளும் இதுவரை கண்டு கொள்ளவில்லை எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செழு, நீர்வேலி, உரும்பிராய், கரந்தன் போன்ற இடங்களில் உள்ள விவசாயிகள் தமது விளை பொருட்களை சந்தைப்படுத்த இவ் வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

குறித்த வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுவதால் அவ்வீதியைப் பயன்படுத்தி வருகின்ற பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்கள் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பாக அப்பிரதேச பொதுமக்களால் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரியப்படுத்தியும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.மழை காலங்களில் மேற்படி வீதியானது மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது.

எனவே குறித்த வீதி தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ- 5)

## அரச வங்கியில் ஆட்சியாளர்களால் 2 ஆயிரம் மில்லியன் ரூபா மோசடி

மகிந்த அரசாங்கத்தின் போது கடுமையாக அரசியல் மயமாக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியில் இடம் பெற்ற முறைகேடுகள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல்வேறு அரசியல்வாதிகளின் அழுத்தங்களுக்கு அமைய வழங்கப்பட்ட பணம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட நிதி குற்றப் புலனாய்வு பிரிவு, தனது விசாரணைகளை நிறைவு செய்து, அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசியல் அழுத்தங்களுக்கு அமைய வழங்கப்பட்டுள்ள கிட்டத்தட்ட 2000 மில்லியன் ரூபா தொடர்பில் விடயங்களை ஆராய்ந்த நிலையில், அங்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதிகளுக்கு அப்பால் சட்டவிரோதமாக வழங்கப்பட்ட அந்தப் பணம் தவறாக பயன்படுத்தியுள்ளமை தொடர்பில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசியல் வாதிகளின் அவசியத்திற்கமைய இவ்வாறு அரசாங்க வங்கி ஒன்று பணம் வழங்குவது கடுமையான குற்றச்சாட்டாகும்.

இதேவேளை, கடன் பணமாக வழங்கப்பட்ட குறித்த பணம் அரசியல்வாதிகளின் அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளமைக்கு ஏற்றுக்கொள்ள கூடிய சாட்சிகள் கிடைத்துள்ளன.

கடன் பணம் உண்மையாக பெற்றுக் கொண்ட விடயத்திற்காக பயன்படுத்தப் பட்டுள்ளதா? என்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அதிகமான பணம் கடனாக பெற்று கொண்டு அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப் பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதற்கமைய அரசாங்க பணத்தை தவறாக பயன்படுத்தியமை தொடர்பில் அந்த பணத்தை பெற்று கொண்ட நபர்கள் மற்றும் கடன் பணமான உரிய முறையின்றி இந்த பணத்தை வழங்கிய அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அரசாங்க பணத்தை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டுகளுக்கு பிணை வழங்கப்படாதென்பது குறிப்பிடத்தக்கது.

நிதி குற்றப் புலனாய்வு பிரிவினரால் வங்கியின் அதிகாரிகள், கடன் பெற்றவர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடம் இது தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வங்கி அதிகாரிகள் சட்டத்திற்கு விரோதமாக கடன் பணம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமை தொடர்பில் இங்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிதிமோசடி தடுப்பு பொலிஸ் விசாரணை அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்தில் சமர்ப்பித்தது.

லங்காபுத்ர வங்கியின் கடன் தொகையில் 2 பில்லியன் ரூபாய்கள் அறிவிடப்படாமை தொடர்பிலான விசாரணை அறிக்கையை நிதி மோசடிகள் தடுப்பு பொலிஸ் பிரிவு சட்டமா அதிபர் திணைக்களத்தில் கையளித்துள்ளது.

இது தொடர்பில் தகவல் அளித்துள்ள லங்காபுத்ர வங்கியின் தலைவர் லசந்த குணவர்த்தன 17 தனியாட்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த தொகையை செலுத்த தவறியுள்ளன என்று தெரிவித்தார்.

விசாரணைகளின்போது குறித்தவர்களுக்கும், நிறுவனங்களுக்கும் முன்னைய அரசாங்க காலத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கடன்கள் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் அடுத்தகட்ட நடவடிக்கையை அறிவிக்கவுள்ளது. (இ)

## இராசி பலன்

09.02.2016

(தை 26, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு, பிரதமை முன்னிரவு 7.48 மணிவரை அவிட்டம் பிற்பகல் 5.14 மணிவரை சுபநேரம் 11.05-12.35 மணிவரை இராகுகாலம் 3.35-5.05 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம், ஆயிலியம் | | |
| சூரி புத | | | குரு ராகு |
| சுக் | சனி | செவ் | |

**மேடம்** பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், எடுத்த காரியங்களை எளிதில் நிறைவேற்றுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**இடபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், செய்தொழில் மேன்மையுண்டு, உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தந்தைவழி உறவினர்களால் நன்மையுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கடகம்** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் கூடும் நாள், வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்கள் கைகூடும், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பகைவர்கள் விலகுவர், ஆரோக்கியமான நாள்.

**துலாம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**விருச்சிகம்** நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உறவினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப் பால் உற்சாகம் அடைவீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவ பெருகும் நாள், பணவரவு திருப் திதரும், வார்த்தைகளில் நிதானம் தேவை, எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப் பிடுவதில் ஆர்வம் காட்டுவீர் கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கூடும் நாள்.

**மீனம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல படியாக அமையும், உறவி னர்களின் அன்புத் தொல் லைக்கு ஆட்பட நேரிடலாம்.

# மரபணுப்பரிசோதனை அறிக்கை நேற்றும் சமர்ப்பிக்கப்படவில்லை


## வித்தியா கொலை வழக்கின் சந்தேகநபர்களுக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியல்

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா கொலை வழக்கின் சந்தேக நபர்கள் பத்துப் பேரையும் எதிர் வரும் பத்தொன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை பதில் நீதவான் இ.சபேசன் உத்தரவிட்டுள்ளார். குறித்த வழக்கு நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் மேற்கண்ட உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

புங்குடுதீவு எட்டாம் வட்டாரத்தை சேர்ந்த வித்தியா எனும் பாடசாலை மாணவி கடந்த வருட முற்பகுதியில் கூட்டு வன்புணர்வின் பின்னர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டிருந்தார். மேற்படி பாடசாலை மாணவியின் கொலை தொடர்பில் சந்தேகத்தில் ஆரம்பத்தில் மூவர் கைது செய்யப்பட்டு, படிப்படியாக பத்துப்பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்று வரும் நிலையில், குறித்த கொலை தொடர்பில் மரபணு பரிசோதனையை மேற்கொள்ளுமாறு ஊர்காவற்றுறை நீதவானாக முன்னர் இருந்த எஸ்.லெனின் குமாரினால் உத்தரவிடப்பட்டிருந்தது. இந்நிலையில் மரபணு பரிசோதனைகளுக்காக சந்தேகநபர்களின் இரத்த மாதிரிகள், கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன்னர் கொழும்புக்கு அனுப்பப்பட்டது. எனினும் இதுவரை மரபணு பரிசோதனை அறிக்கைகள் எவையும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் சமர்ப்பிக்கப் படவில்லை. இதனால் வழக்கும் நீண்டு கொண்டே செல்கின்றது. நேற்று நடைபெற்ற வழக்கின் போதும் மரபணு பரிசோதனைகள் எவையும் சமர்ப்பிக்கப்படவில்லை.

நேற்றைய வழக்கின் போது இறுதியாக கைது செய்யப்பட்ட பத்தாம் சந்தேக நபரை மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்காது, யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு அவரது சட்டத்தரணியால் பதில் நீதவானிடம் கோரப்பட்டது. எனினும் நீதவான் அதற்கான அனுமதியை மறுத்து விட்டார். இந்த வழக்கின் போது வாதிகள் தரப்பில் சட்டத்தரணிகளான கே.சுகாஸ், பிரியந்த ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (இ)



நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்திற்கு முன்னால் உள்ள நீர்த்தடாகம் கழிவுகள் நிரம்பி அழுக்கடைந்து காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் அமைந்திருக்கும் இத்தடாகத்தை சுத்தப்படுத்தி அழகுபடுத்துவார்களா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# பனை வளர்ப்போர் சங்கத்தில் இணைந்து பயனைப்பெறலாம்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி சபையால் ஆரம்பிக்கப்படவுள்ள பனை வளர்ப்போர் சங்கத்தில் இணைவதன் மூலம்பனைவளத்தை பாதுகாப்பதுடன் சிறந்த பயனை பெற்றுக் கொள்ள முடியும்என பனை அபிவிருத்தி சபையின் தலைவர் மாரிமுத்து கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனைப்பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் பனைவள பயன்பாட்டை மேம்படுத்தல் போன்ற நோக்குடன் இலங்கை பனை அபிவிருத்திச் சபையினால் பனைவளர்ப்போர் சங்கம் எனும் அமைப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

அந்த வகையில் 04 பரப்புக்கு (1/4 ஏக்கர்) மேல் அல்லது 10 பனைமரங்களுக்கு மேல் உள்ள பனங்காணியை உடையவர்கள் அல்லது பனை செய்கையில் ஈடுபடுபவர்கள் இவ்வமைப்பில் அங்கத்தவர்களாக இணைய முடியும்.

இதில் பனந்தோட்டத்தில் இருந்து கிடைக்கும் மூலப் பொருட்களை சரியான முறையில் பயன்படுத்தி வருமானம் ஈட்டக்கூடிய வழிகள் தொடர்பான ஆலோசனைகள், பயிற்சிகள் மற்றும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல், உற்பத்தியாளர்களை அல்லது பயிர்ச்செய்கையாளர்களை இனங்கண்டு கொள்ளல், பனந்தோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி சாத்தியமான தீர்வுகளை ஈட்டுதல், பாவனையின்றி இருக்கும் பனை வளத்தினை உற்பத்தி திறனுடையதாக மாற்றுவதுடன் அதனுடனிணைந்து மக்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தல் போன்ற அனுகூலங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வமைப்பில் இணைய விரும்புபவர்கள் பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட அலுவலர்களில் அல்லது தலைமையலுவலகத்தில் விநியோகிக்கப்படும் அங்கத்தவர் விண்ணப்பப்படிவத்தினை 10 ரூபாய் செலுத்திப் பெற்று பூரணப்படுத்தி நேராகவோ அல்லது தபால் மூலமாகவோ முகாமையாளர் (அபிவிருத்தி), பனை அபிவிருத்தி சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைத்து அங்கத்தவராக இணைந்து கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் 021 222 2034 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# 63 இ.போ.ச. பேருந்துகள் மீது தாக்குதல்

யாழ்.மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 63 பேருந்துகள் கடந்த 2015ஆம்ஆண்டிலிருந்துநடப்பாண்டில் இதுவரையான காலப்பகுதியில் தாக்குதலுக்குள்ளாகி சேதமாக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய முகாமையாளர் (செயலாற்றல்) கே.கேதீசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை போக்குவரத்து சபை ஊடாக பல்வேறு சேவைகளை செய்து வருகிறோம். ஆனால் சட்ட ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தால் இ.போ.சபையினருக்கும், தனியாருக்குமிடையே பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்திலிருந்து புன்னாலைக் கட்டுவன் வரையான சேவையில் ஈடுபடும் இ.போ.சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று ஊரெழு பகுதியில் வைத்து போத்தல் வீசி தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது. அதில் பேருந்து நடத்துநர் காயமடைந்துள்ளார்.

அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் வயாவிளானுக்கும் அற்பச் சந்திக்கும் இடையில் இ.போ. சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றின் மீது கல்வீசித் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இதில் பேருந்தின் கண்ணாடிகள் சேதமடைந்ததுடன் பேருந்து சாரதி காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாம் தொடர்ச்சியாக இத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் தெரிவித்து வருகின்றோம். ஆனால் இதுவரை சரியான தீர்வை அவர்கள் எடுக்க முன்வரவில்லை. எனவே இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

நாம் பாடசாலைப் பிள்ளைகளுக்கு பேருந்துச் சேவையை வழங்கி வருகின்றோம். எமக்கு சரியான தீர்வை பெற்றுத்தந்தால் மாத்திரமே சிறந்த சேவையை ஒழுங்காக மக்களுக்கு வழங்க முடியும். மேலும் முறையான அனுமதிப் பத்திரம் வழங்கப்படாத காரணத்தால் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தால் எம்மால் சீரான சேவைகளை மக்களுக்கு வழங்க முடியாமல் போய் விடும். எனவே உரிய அதிகாரிகள் எமக்கு சரியான தீர்வை வெகுவிரைவில் பெற்றுத்தர வேண்டும் என்றும் சட்ட நடைமுறைகளை ஒழுங்காக கடைப்பிடித்து நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மாதா சொரூபம் திருடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ தேவாலயத்திற்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த மாதா சொரூபம் ஒன்று திருடப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பவம் வடமராட்சி-சக்கோட்டை ஜே/398 கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெற்றது.

கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த மேற்படி மாதா சொரூபம் கண்ணாடிப் பெட்டி உடைத்து திருடப்பட்டுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-60)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சண்டிலிப்பாய் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சி.தவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்வி பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் பா.மகாலிங்கசிவம் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி பாட ஆசிரிய ஆலோசகர் ந.கஜேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## எழில் பூக்கள் அறிமுகவிழா

அவுஸ்திரேலியக் கவிஞர் தம்பிப்பிள்ளை நந்திவர்மன் வழங்கும் எழில் பூக்கள் என்ற கவிதை நூல், இசைக்குறுந்தகடு அறிமுக விழா எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-5)






விளையாட்டுப் பயிற்சியின் போது மயக்கம் ஏற்பட்டு உயிரிழந்த வடமராட்சி கிழக்கு அ.மி.த.க பாடசாலை மாணவியின் இறுதிச் சடங்கு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது... (படம்:-கரணவாய் செய்தியாளர்)

## மஹாகும்பாபிஷேகம்

காரைநகர், வாரி வளவு ஶ்ரீ கற்பக விநாயகர் ஆலய பிரதிஸ்டா மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறவுள்ளது. (இ-5)

# சுஹத கம்லத்தை சட்டமா அதிபராக நியமிக்க அரசாங்கம் அஞ்சுகின்றது

## உதய கம்மன்பில கூறுகிறார்

அரசியல்வாதிகள் முன்னால் மண்டியி டாத அதிகாரி என்பதன் காரணமாக அரசாங் கம் சொலிசிட்டர் ஜெனரல் சுஹத கம்லத்தை சட்டமா அதிபராக நியமிக்க அஞ்சுவதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித் தார்.

சட்டமா அதிபர் கடந்த ஜனவரி 25 ஆம் திகதி ஓய்வுபெற்றார். வெற்றிடமாக இருக்கும் அந்த பதவிக்கு இதுவரை எவரும் நியமிக் கப்படவில்லை.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணிப் புரியும் சிரேஷ்ட அதிகாரி சுஹத கம்லத் அர சியல்வாதிகளின் முன்னால் அடிபணியா தவர் என்பதால், அரசாங்கம் அவரை சட்டமா அதிபராக நியமிக்க அஞ்சுகிறதா?

தற்போது உயர்நீதிமன்றத்தில் நடந்து வரும் அடிப்படை உரிமை மீறல்கள் வழக்கு கள் சட்டவிரோதமானவை. இதனால், உடனடியாக சட்டமா அதிபர் நியமிக்கப்பட வேண்டும்.

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மூலம் ஏற்படுத்தப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் போலியானவையாக தெரிவிக்கின்றன.

ஹிருணிகா மற்றும் யோஷித ராஜபக்ஷ விவகாரங்களில் பொலிஸார் இரண்டு விதமாக நடந்து கொண்டமை இதற்கு சிறந்த உதாரணமாகும் எனவும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ)




# கூகுள் பலூன் செயற்றிட்டம் வெகுவிரைவில் இலங்கையில்

## ஹரின் பெர்னாண்டோ தகவல்

அதிவேக இணைய சேவைகளை வழங் குவதற்காக கூகுள் பலூன் செயற்றிட்டம், இலங் கையில் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்பட வுள்ளதாக, தொலைத் தொடர்பு மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்ச ருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதிவேக இணைய சேவைகள் தொடர் பாக, அமைச்சரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி, இணைய சேவைகள் குறித்து, கூகுள் நிறுவனத்துடன் ஒப்பந்தமொன் றையும் செய்துள்ளோம். இத்திட்டத்தின் பிரகாரம், நாட்டின் பலபாகங்களிலும் பாரிய ஹிலியம் பலூன்கள் பறக்கவிடப்பட்டு, சோதனைகள் நடத்தப்படவுள்ளன.

இதன் முதலாவது சோதனை, இம்மாத இறுதியில் இரத்மலானையில் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இக்கூட்டுச் செயற்றிட்டத்தில் 25 சதவீத பங்குகளை நாம் கொண்டிருக்கின் றோம். இந்த அதி நவீன திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம்,உலக நாடுகளின் கவனம்,எமது நாட்டின் மீது திரும்பியு ள்ளது.அத்துடன், தகவல் தொடர்பாடல் துறை யிலுள்ள உலகின் மிகச் சிறந்த வல்லுநர்கள் பங்கேற்கும் டிஜிற்றல் மகாநாடு ஜூன் மாதத்தில், எமது நாட்டில் நடைபெறவுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொடர்பான பெரும்பா லான வேலைத்திட்டங்கள், இவ் வருடத்து டன் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்ப ட்டிருக்கின்றது. இதன் மூலம், அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்வது மிகவும் இலகுவானதாக அமையும்.கூகுள் பலூன்கள் விமானங்கள் பறக்கும் உயரத்தை விட இரு மடங்கு உயரத்தில் பறக்கவிடப்படும். இந்த பலூன்களின் ஆயுட்காலம் ஆறு மாதங்கள் . எனவும், ஆனால் அவற்றை மீள் சுழற்சிக் கும் உட்படுத்தலாம்.

இந்த பலூன் செயற்றிட்டமானது, எமது நாட்டின் பாதுகாப்புக்கு எந்தவகையிலும் அச்சுறுத்தல்களாக அமையாது.

உலகின் பிரதான கோடீஸ்வரர்களில் ஒருவரான கூகுள் நிறுவனத்தின் இணைய ஸ்தாபகர் சேர்ஜிபிரின் போன்றவர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வ தற்கும் விருப்பம் தெரிவித்துள்ளமை எமது நாட்டிற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி யாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ)

# அரச துறையில் பட்டதாரிகளுக்கான 17 ஆயிரம் வெற்றிடங்கள் உள்ளன

(கொழும்பு)

அரச துறையில் பட்டதாரிகளுக்கான 17ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுவதாக வேலையற்ற பட்டதாரிகளுக்கு தகுதியான வேலைவாய்ப்பை பெற்று கொள்வது தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழுவினூடாக முன்னெடுக்கப்பட்ட புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித் துள்ளதாக பொருளாதார நடவடிக்கை மற்றும் கிராமிய வளங்கள் இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவி த்தார்.

இந்த விடயம் தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறியு ள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சி னையை தீர்ப்பதற்காக இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேராவின் தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட் டுள்ளது.

இந்த குழுவில் அரச அலுவல்கள் மற்றும் நிர்வாக அமைச்சு, கல்வி, நிதி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் பிரதிநிதிக ளும் அங்கம் வகித்துள்ளனர்.

இந்த குழுவினூடாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் பலசுற்று பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக் கப்பட்டுள்ளது.

எனினும் தங்களின் பிரச்சினை க்கு இதுவரை எவ்விதமான உரிய தீர்வுக ளும் முன்வைக்கப்படவில்லை என வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் தம்பிக்க ரணசிங்க சுட்டிக் காட்டியுள்ளார். (இ)


**யாரிடம் பேசுவது?**

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

தினந்தோறும் காலை 9.00 முதல் பி.ப 1.00 மணிவரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored by Enlightenment Circle , UK
(C-3712)


# நெற்றியில் வெட்டுகாயத்துடன் ஆணொருவரின் சடலம் மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு கடற்கரையில் இனந் தெரியாத ஆணொருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் அச்சடலத்தின் நெற்றியில் வெட்டுக்காயம் இருப்பதாகவும் அவருக்கு சுமார் 45 வயதாக இருக்கலாம் என்றும் தெரிவித்தனர். (இ)


**யா/புற்றளை மகா வித்தியாலயம் - புலோலி**

அழைப்பிதழ்....

புதிய வகுப்பறைத் திறப்பு விழா

காலம் : 10.02.2016, புதன்கிழமை மு.ப.11.மணி
தலைவர்: திரு.ஆ.சிவநாதன் ( அதிபர் )



உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்
(சி-3721)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 56 செவ் 1 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:BIT/ அரசதொழில்<br>தொ.இ: B/3851 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 17சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4372 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 16 சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:BSc QS/ பொறியியளாளர்<br>தொ.இ: B/3857 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 32 செவ் 8 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ஆசிரியர்<br>தொ.இ: G/4396 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 13<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்BSc/பொறியியளாளர்<br>தொ.இ: B/3859 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 48<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்:BFA/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4399 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 16<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:O/Lகனடா<br>தொ.இ: B/3861 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 23<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/கனடா PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4402 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# வவு.விளையாட்டுக் கழகங்களுக்கு தலா 30ஆயிரம் ரூபா காசோலை



(குருமன்காடு)


வவுனியா மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 19 விளையாட்டுக் கழகங்களின் அபிவிருத்திக்காக நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

வவுனியா மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 19 விளையாட்டுக் கழகங்களின் அபிவிருத்தி, மீள்கட்டமைப்பு நடவடிக்கைக்காக தலா முப்பதாயிரம் ரூபாய் வீதம் 5 இலட்சத்து 70ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகளாக வழங்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் யாப்பும் இதன்போது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், சட்டத்தரணியும் முல்லைத்தீவு மாவட்ட பதில் நிதிபதியுமாகிய கெங்காதரன், சட்டத்தரணி இளங்குமரன், மாவட்ட விளையாட்டு அதிகாரி பர்சூர், விளையாட்டுத்துறை மாவட்ட இணைப்பாளர் தனுராஜ், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் மரியநாயகம், செட்டிகுளம் மகா வித்தியாலய அதிபர் தர்மரட்ணம், விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள், துடுப்பாட்ட சங்க உறுப்பினர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (3-250)



**மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்ட துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் மாணவர்களுக்கான கேடயத்தை வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.**

**(படம்:-மல்லாவி செய்தியாளர், பனிக்கன் குளம் செய்தியாளர்)**




# அருகிலுள்ள பாடசாலை சிறந்தது எனும் திட்டத்தில் துணுக்காய் வலயத்தில் 6 பாடசாலைகள் தெரிவு

(மல்லாவி)

புதிய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ''அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை'' எனும் திட்டத்தின் கீழ் ஒரு பிரதேச செயலகப் பிரிவிலிருந்து இரண்டு பாடசாலைகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு சகல வசதிகளையும் அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து 8 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் 6 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கடந்த மாதம் 25ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மாங்குளம் மகாவித்தியாலயம், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலிருந்து மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் மகாவித்தியாலயம், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளுமே அருகி லுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டது. (3-15)

# புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் அனைவரும் கௌரவிப்பு



வவுனியா, நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் சு.அமிர்தலிங்கத்தின் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில், வடமாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராசா, ம.தியாகராசா, எம்.பி.நடராஜா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தனர்.

இந் நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தியடைந்த 27 மாணவர்களும் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் அனைவரும் சிறப்புப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (3-250)

# பூநகரி பிரதேச சபையின் அலுவலக மாடி கட்டடத்திற்கு

## ஒரு கோடியே 20 இலட்சம் நிதி ஒதுக்கீடு

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் பூநகரி பிரதேச சபையின் அலுவலகத்திற்கான புதிய மாடி கட்டடம் அமைப்பதற்காக ஒரு கோடியே 20இலட்சம்ரூபா நெல்சிப் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச சபையின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டடத்திற்கான வேலைகள் எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டு 6மாதங்களுக்குள் பூர்த் தியாக்கப்பட்டு அலுவலகம் திறந்து வைக்கப்படும் என பிரதேச சபையின்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-15)

# இறங்குதுறைக்கான இடத்தெரிவில் முல்லைத்தீவு மீனவர் சமாசம் அதிருப்தி

(மாமூலை)

முல்லைத்தீவுசாளை எனும் இடத்தில் இறங்கு துறை அமைப்பது தொடர்பாக முல்லைத்தீவு மீனவர் சமாசத்தலைவர் அ.மரியதாஸ் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அண்மையில் முல் லைத்தீவுக்கு விஜயம் செய்த மீன் பிடித்துறைஅமைச்சுடன் தொடர்புடைய குழுவினர், முல்லைத்தீவில் இறங்குதுறை ஒன்றை அமைத்துத் தருவதாகவும் அதுவும் தாம் தெரிவு செய்யும் இடத்திலேயே இறங்குதுறையை அமைக்க முடியுமெனவும் கூறியுள்ளனர்.


இதன்பிரகாரம்யாழ்ப்பாணத்திற்கும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட சாளை எனுமிடத்தில் இறங்குதுயை அமைக்க அவர்கள் தெரிவு செய்துள்ளனர்.

இங்குஇறங்குதுறைஅமைப்பதானது பொருத்தமற்றதாகும்.முல்லைத்தீவு நகரை அண்டிய கடற்பகுதியில் இறங்குதுறையை அமைத்தால் தான் எல்லா மீனவர்களும் நன்மையடைய முடியும். இறங்குதுறை அமைப்பதற்கு ஏதுவாக இரண்டு முனைகள் அங்கு காணப்படுகின்றன. மீன்பிடி இறங்குதுறை மீனவர்களின்நன்மைகருதி அமைக்கப்பட வேண்டும். அதனை விடுத்து மக்கள் குடியிருப்பு அற்ற இடத்தில் இறங்குதுறையை அமைப்பதானது அதன் பயன்பாடு எவ்வளவு தூரம் சாத்தியப்பாடு உடையது என்பது கேள்விக்குறியாக உள்ளது. மீன்பிடியில் முல்லைத்தீவு மாவட்டம் ஒரு முக்கியமான பிரதேச மாகும். 74 கிலோமீற்றர் நீள கடற்பரப்பைக் கொண்டுள்ள இப் பிரதேசத்தில் 20இற்கு மேற்பட்ட மீனவர் சங்கங்கள் உள்ளன. ஆனால்அண்மைக் காலமாக மீன்பிடியில் வீழ்ச்சி யடைந்து காணப்படுகிறது. ஏனெனில் ஏனைய மாவட்ட ங்களுக்கு அரசாங்கம் கொடுத்துள்ள முக்கியத்துவம் முல்லைத்தீவுப் பிரதேசத்திற்கு வழங்கப்படவில்லை.

முல்லைத்தீவில் மீனவர்களுக்கான இறங்குதுறை வெளிச்சவீடு மற்றும் ஏனைய இடங்களைப் போன்ற வசதிகள் எதுவும் அற்ற நிலையில் சாதாரண முறையில் மீன்பிடித்தொழில் இடம் பெறுகிறது.

ஏனைய பிரதேசங்களில் மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்திக்.கொடுக்கப் பட்டுள்ளதுடன் முல்லைத்தீவில் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலைமை காணப்படுகிறது.அதிகாரிகள் பலரிடம் முறையிட்டும் எதுவித பலனும் இதுவரை கிடைக்கவில்லை.

இந்தநிலையில் குடியிருப்புக்கள் இல்லாத சாளை எனும் இடத்தில் இறங்குதுறையைஅமைப்பதன் நோக்கம் ஏன் என்று தெரியவில்லை. இறங்குதுறை மீனவர்களின் பயன்பாட்டுக்கு ஏற்ற பிரதேசத்தில்அமைக்கப்படவேண்டும் என மீனவ சமாசத் தலைவர் வலியுறுத்தியுள்ளார். (3-30)







வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி வித்தியாலயத்தின் அதிபர் சிவராஜா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்,வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஜி.ரி.லிங்கநாதன்,தியாகராசா,எம்.பி நடராஜா,பிரதிக் கல்விப் பணிப்பாளர் வாகீசன்,நெடுங்கேணி கோட்டக்கல்வி பணிப்பாளர் கிருபானந்தன்,வடக்கு வலயம் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் இராஜேஸ்வரன்,கனகராயன்குளம் பொலிஸ் அத்தியட்சகர்,ஞானம் பவுண்டேசன் வடமாகாண இணைப்பாளர் யோகேஸ்,பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள்,பாடசாலை சமூகத்தினர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# புதிய அரசியலமைப்பில் வடக்கும் கிழக்கும் இணைந்த மாநில அரசுகள் உருவாக்கப்பட வேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட செயலக அமர்வில் பொதுமக்கள், அமைப்புக்கள் வலியுறுத்தல்

- பிரிந்து செல்வதற்கான உரிமை
- பொதுமக்களின் பாதுகாப்பு மாநில அரசுகளுக்கு
- அரசியலமைப்பு நீதிமன்றம் உருவாக்கல்
- மாநில அரசுகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள்
- மத்தியில் கூட்டாட்சி நீதிமன்றம்

அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்கான மக்கள் பிரதிநிதிகள் குழுவினர் நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் பொது மக்களின் கருத்துக் களை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கேட்டறிந்தனர். காலை நேரத்தில் பெருமள வான பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக் களின் பிரதிநிதிகள் வருகை தந்து தமது கருத் துக்களை முன்வைத்தனர்.

இதன்போது வடக்கும் கிழக்கும் இணைக் கப்பட வேண்டும். ஒன்றிணைக்கப்பட்ட மாநில அரசுகள் உருவாக்கப்பட வேண்டும். பாராளு மன்ற முறைமை சார்ந்த ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட வேண்டும். நீதித்துறை சுதந்தி ரமாக இயக்கப்பட வேண்டும். மொழியுரிமை யும் மத உரிமையும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அரசியலமைப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படவேண்டும். மாநில அரசுகளுக்கு காணி, பொலிஸ் கல்வி உட்பட அனைத்து அதி காரங்களும் வழங்கப்பட வேண்டும். மத்தி யில் கூட்டாட்சி நீதிமன்றம் அமைக் கப்படுவ துடன் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் உயர் நீதி மன்றம் அமைக்கப்பட வேண்டும் எனவும் வலி யுறுத்தப்பட்டது.

மேலும் உள்ளூராட்சிஅமைப்புகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் அரசியலில் சகல மட்டங்களிலும் பெண்க ளுக்கு 25 சதவீதமேனும் ஒதுக்கப்பட வேண் டும் எனவும் சுயாதீன ஆணைக்குழுக்கள் சுதந்திரமாகவும் நீதியாகவும் செயற்படுவது டன் ஆணைக்குழுக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. மேலும் பொது மக்கள் பாதுகாப்பு மாநில அரசுகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன் வீதாசார முறைமை யும் தொகுதி வாரி முறையும் கலந்து தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனவும் மாநிலங்கள் தமது அபிவிருத்திக்காக வெளிநாட்டு அரசுகள் சர்வதேச அமைப்புக்கள், புலம்பெயர் உறவுகளிடமிருந்து நன் கொடை களையும் முதலீடுகளையும் பெற்றுக் கொள் வதற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட மத்திய மாநில உள்ளூராட்சி பிரதிநிதிகள் தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற் றத் தவறுமிடத்தும் ஜனநாயக விரோத செயற் பாடுகளைப் புரியுமிடத்தும் பாரிய ஊழலில் ஈடுபடுமிடத்தும் அப்பிரதிநிதிகளை திருப்பியழை க்கும் மீட்புரிமை வாக்காளருக்கு வழங்கப் பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. மேலும் வடகிழக்கிலுள்ளதமிழ்மக்கள்தாம்பிரிந்து செல்ல விரும்பின் புதிய அரசியல் அமைப்பில் பிரிந்து செல்வதற்கான உரிமை உள்ளடக்கப்பட வேண் டும் எனவும் தமதுகருத்துக்களைமுன் வைத்தனர். இன்றும் மேற்படி கருத்தறியும் அமர்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி அரசியலமைப்பு சீர்த்திருத்தக் குழுவில் கலாநிதி எஸ்.விஜேசந்திரன், வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா, எஸ்.சீ.சீ.இளங்கோவன், செல்வி கே.வள்ளி யம்மா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

பிரதேச செயலர் தலைமையில் நடை பெற்ற இந்த அமர்வில் நூற்றுக்கு மேற்பட்ட பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக் களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (3-254-277)

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கலாசார விழா இன்று

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கலாசார விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி. ப.ஜெயராணி தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப் பாளர் வனஜா செல்வரட்ணமும் மாவட்ட கலா சார உத்தியோகத்தர் மா. அரிச்சந்திரனும் கல ந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் 'பசுந்துளிர்' எனும் நூல் வெளியீடும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (3-19)



முல்லைத்தீவு அரிமா கழக அங்குரார்ப்பண நிகழ்வில் கணவன்மாரை இழந்த 5 பெண்களுக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

## வவு. மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(மல்லாவி)

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு என வடமாகாண சுகாதார அமைச்சி னால் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள வைகறை சிகிச்சை நிலையத்தில் தங்கி சிகி ச்சை பெற்று வந்த பெண்ணொருவர் உரிய வகையில் கவனிக்கப்படவில்லை என்று தெரி வித்து முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 9 பேர் வவுனியா மனிதவுரிமைகள் ஆணைக்குழு வில் முறைப்பாடு செய்திருந்தனர். இந்தமுறைப் பாட்டிற்கு அமைவாக மாகாண சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தற்போது விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விசா ரணை அறிக்கையின் பின்னர் மேற்படி குற்றச் சாட்டுத் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுக் கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (3-250)

## வவுனியாவில் சட்டமாணி நுழைவு பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் புதிய கல்வியாண்டிற்கான சட்டமாணி பட்டப் படிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு புதிய மாணவர் களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை நாடாளாவிய ரீதியில் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி திறந்த பல்கலைக்கழக பிராந்தியக் கற்கை நிலைய பரீட்சை நிலையங்களில் நடை பெறவுள்ளது.




மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் தமிழ் மொழிமூல மாணவர்களின் நலன் கருதி கொழும்பு கண்டி, நகரங்களில் நடத்தப்பட்ட வழிகாட்டல் கருத்தரங்கு தொடரின் இறுதிக் கருத்தரங்கு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப 4 மணி வரை இலக்கம் 103 மன்னார் வீதி, வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் கலந்து கொள்வதன் மூலம் நுழைவுப் பரீட்சை தொடர்பான வழி காட்டல்களை பெற விரும்புவோர் 077 074 6588 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள் ளுமாறு ஏற்பாட்டாளர் கேட்டுக்கொள்கின் றார். (3)

## வற்றாப்பளையில் நாளை சிவாச்சார்ய அபிஷேகம்

சிவாச்சாரிய அபிஷேக வைபவம் முள் ளியவளை வற்றாப்பளை கண்ணகை அம் மன் கோவில் மண்டபத்தில் நாளை புதன் கிழமை காலை 7 மணிமுதல் 8.30 மணி வரை நடைபெறவுள்ளது. பிரம்மஸ்ரீ கந்ததாசக் குருக்கள் கஜேந்திர சர்மா சிவாச்சர்ய குருவாக பட்டாபிஷேகம் செய்யப்படவுள்ளார்.

இணுவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் தேவஸ் தான குருக்களான பிரம்மஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள், பிரம்மஸ்ரீ மகாதேவ ஸ்ரீவத்ஸாங்க குருக்கள் ஆகியோர் அபிஷேகம் செய்யவுள் ளனர். (3)

## சிறுவர் நன்னடத்தை பிரிவில் முறைப்பாடு

சிறுவர் நன்னடத்தை பிரிவினரிடம் செய் யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக ஒட்டு சுட்டான் பகுதி பாடசாலை ஒன்றின் ஆசிரியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பிரஸ்தாப ஆசிரியர் முல்லைத்தீவு மேலதிக நீதவான் முன்னி லையில் ஆஜர்செய்யப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப ஆசிரியரை வவுனியா சிறைச் சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (3-301)



மன்னார் கௌரியம்பாள் அ.த.க.பாடசாலையில் பாடசாலை அதிபர் கே.சசிதரன் தலைமையில் இடம்பெற்ற இல்லமெய்வல்லுநர் போட்டியில் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.எஸ். செபஸ்ரியன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.எம்.கூஞ்ஞ ஆகியோர் வெற்றி பெற்ற வீரர்களுக்கு சான்றிதழ் வழங்குவதை படங்களில் காணலாம்.

# அனுமதிப்பத்திரம் இல்லாத பேருந்துகளுக்கு இரண்டு இலட்சம் ரூபா வரை தண்டப் பணம்

## போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை

(கொழும்பு)

**போக்குவரத்து அனுமதிப்பத்திரம் இன்றி சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு எதிரான தண்டப்பணத்தினை இரண்டு இலட்சம் ரூபா வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

பேருந்துகளின் ஊடாக பெறப்படும் வருமானத்திற்கு ஏற்ப நடைமுறையிலுள்ள 10ஆயிரம் ரூபா தண்டப்பணம் போதுமானதல்ல என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.பீ. ஹேமச்சந்திர தெரிவித்தார்.

நடைமுறையிலுள்ள சட்டத்திற்கமைய போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணம் அல்லது ஒரு வருட சிறைத்தண்டனையே அமுலிலுள்ளது.

எனினும் போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் சில பேருந்துகளின் வருமானத்துடன் ஒப்பிடும் போது இந்த தண்டப்பணம் போதுமானதல்ல எனவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக விதிக்கப்படும் தண்டப்பணத்தினை இரண்டு இலட்சம் ரூபாவாகவும், சிறைத்தண்டனை காலத்தினை 10 வருடங்களாகவும் அதிகரிப்பதற்கான சட்டத்திருத்திற்கு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு பூராகாவும் அதிகளவான பேருந்துகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி மாகாணங்களுக்குள்ளும், வெளியிடங்களுக்கும் சேவையிலீடுபடுவதாக அவர் தெரிவித்தார்.

போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி சேவையிலீடுபடும் பேருந்துகளை அடையாளம் காண்பதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. (இ)

### உசன் சந்தியை அண்மித்த ஏ-9 வீதியில்

# மதுபான நிலையம் அமைப்பதை தடுத்து நிறுத்தக் கோரி மகஜர்

### ஜனாதிபதி, முதலமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைப்பு



உசன்சந்தியைஅண்மித்த ஏ-9 வீதியில் மதுபான நிலையம் அமைப்பதை தடுத்து நிறுத்தும் பொருட்டு மிருசுவில் பகுதியை சேர்ந்த 22 கிராம மட்ட அமைப்புக்களை உசன் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் ஒன்றிணைத்து அவர்களுடன் கலந்துரையாடியதன் பிரகாரம் அனைவரதும் கையொப்பத்துடன் ஜனாதிபதி வடக்கு முதலமைச்சர் மற்றும் உயர் மட்ட அரச அதிகாரிகளுக்கும் அமைச்சர்கள், அரசியல்பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கும் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏ-9 வீதியில் பழைய வாய்க்கால் சந்தி எனப்படும் அமைவிடத்தில் ஒரு காணியை இட அமைவுச் சிபாரிசு பெற்றுக் கொள்ளும் பொருட்டு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ் அமைவிடத்துக்கு அண்மையில் அரச பாடசாலை, உள்ளூராட்சி மன்ற பொது நூலகம், சமூக அச்சாணிகளான மதஸ்தலங்கள், அரச அலுவலகங்கள், அரச ஆயுர்வேத சிகிச்சை நிலையம் மற்றும் வரலாற்றையும் தேச வழமையையும் கொண்ட பகுதி வாழ் மக்கள் உள்ளனர்.

இவ்விடத்தில் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கு ப்குதி வாழ் மக்களாகிய நாம் மிகவும் பலமான எதிர்ப்பைப் பதிவு செய்வதுடன் இவ் விடயத்தால் விரக்தியுற்ற மன நிலையிலும் உள்ளோம்.

போதைப் பொருட்கள் பற்றியும் இவ்விடயம் தொடர்பான பாதக நிலைகளையும் நாம் உங்களுக்கு எடுத்து இயம்ப வேண்டிய தேவைகள் இல்லை. இது விடயங்கள் தொடர்பில் பாரிய சமூகப் பொறுப்புடன் பல்வேறு செயற்றிட்டங்களையும் நற்பணிகளையும் இன்றைய எதிர்கால மானிட குலத்திற்காக முன்னெடுக்கும் உங்களுக்கு ஆலோசனைகளை எடுத்து இயம்பும் பக்குவம் எமக்கும் இல்லை. தங்களிடம் தாங்கள் தயவுடன் வேண்டி நிற்பது எமது பிரதேசத்தில் மட்டுமல்ல தங்களது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வளமான கண்ணியம் மிக்க சமூகங்கள் மத்தியில் இவ்வாறான மனித குலத்திற்கே எதிரான பீடைத்தளங்கள் அமைவதை தடுக்க வேண்டும் என்பதே.

இவ்விடயம் தொடர்பாக நீங்களும் எதிர்கால சந்ததியையும் அரச நிர்வாக சூத்திரத்திற்கு அமைவாகவும் அணுகி எமது வேண்டுதலை யதார்த்தத்தின் பால் சாதகமாக பரிசீலித்து முடிவெடுத்து பதிப்பு மூலமான உறுதிப்படுத்தல்களை எமக்கும் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உள்ளோம் என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

## தே.அ.அட்டைக்கான புதிய சட்டமூலம் நாளை பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டையைப் பெறுதல் மற்றும் இந்த நோக்கத்திற்கான படப்பிடிப்பாளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பான புதிய சட்ட மூலம் ஒன்று இவ்வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

படப்பிடிப்பாளர்கள் ஏற்கனவே பதிவு செய்திருந்தாலும் புதிய நடை முறை அமுலாகும்பொழுது ஆட்பதிவுதிணைக்களத்தில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

பதிவுக் கட்டணமாக 10 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும். ஒவ்வொருவருடமும் புதுப்பித்தல் கட்டணமாக 2 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும். மேலும் அடையாள அட்டைக்குரிய படங்கள் 35 மில்லிமீற்றர் அகலமும், 45 மில்லிமீற்றர் உயரமும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

மேற்படி அளவுள்ள படங்கள் கலர்ப்படங்களாக இருப்பதுடன் ஆட் பதிவுத் திணைக்களத்தினால் அறிவுறுத்தப்படும் கணனி மென்பொருள் வடிவமைப்பாகஇருத்தல்வேண்டும்.

உள்நாட்டிலுள்ள அமைச்சர் எஸ்.பி.நாவின்னவினால் இந்தச் சட்ட மூலம் நாளை புதன்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

16 வயதைப் பூர்த்தி செய்துள்ள அனைவரும்தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் புதிய அடையாள அட்டையின் இலக்கங்கள் 12 ஆக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## கிழக்கில் எரிபொருளுக்கான கேள்வி அதிகரிப்பு-அனோமா

(கொழும்பு)

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது கிழக்கு மாகாணத்தில் எரிபொருளுக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக பெற்றோலிய வளத்துறைபிரதிஅமைச்சர்அனோமா கமகே தெரிவித்துள்ளார்.

அதற்காக எரிபொருள் களஞ்சிய வசதிகள் கிழக்கு மாகாணத்தில் போதியளவு இல்லை என்றும் இந்த நிலைமையில் புதிதாக எரிபொருள் களஞ்சிய வசதிகள் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## பிரித்தானியாவுக்கான புதிய உயர்ஸ்தானிகர் பதவிக்காக அமரி விஜேயவர்த்தன பரிந்துரை

பிரித்தானியாவுக்கான புதிய உயர்ஸ்தானிகராக அமரி விஜேயவர்த்தன பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

இவர் வத்தளையில் அமைந்துள்ள சுவாடெஸி இன்டஸ்ரியல் வேக்ஸ் ( ஆயுர்வேத உற்பத்தி நிறுவனம்) நிறுவனத்தின் தலைவி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் அவரின் பெயர் ஒப்புதலுக்காக உயர் பதவிகளுக்கான நாடாளுமன்ற குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி கிறிஸ் நோனிஸ் கடந்த 2014ஆம் ஆண்டு பதவி விலகியமையில் இருந்து பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பதவி வெற்றிடமாகவே இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# செய்தித்துளிகள்

## மனைவியின் கழுத்தை அறுத்து படுகொலை செய்தார் கணவன்

குருநாகல் - வாரியபொல பிரதேசத்தில் பெண்ணொருவரை கொலைசெய்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாரியபொல, ஈதனவத்தை பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறுகொலைசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொலை செய்த நபர் அந்த பெண்ணின் கணவன் என பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேக நபர் கடந்த 2ஆம் திகதி வீட்டிற்குள் வைத்து பெண்ணின் கழுத்தை அறுத்து கொலை செய்துள்ளார்.

சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வந்த வாரியபொல பொலிஸார் சந்தேக நபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் 70 வயதானவர் எனவும் அவரை வாரியபொல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## தடியால் தாக்கப்பட்ட ஒருவர் பலி

இரத்தினபுரி, மாவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை தடியால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான நபர் படுகாயங்களுடன் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவத்தை, பலாபத்தல என்ற பிரதேசத்தைச் சேர்ந்த 81 வயதான முதியவர் ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## தேநீர் விசமானதால் ஆறுபேர் வைத்தியசாலையில் அனுமதி

ரத்தோட்டை, ஹாலேகொட்டுவ வத்த பகுதியில் தேநீர் விஷமானத்தில் 13 வயது சிறுவன் மற்றும் பெண்ணொருவர் உட்பட அறுவர், நேற்று முன்தனம் ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுகவீனமுற்றவர்கள், ரத்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்தாகவும் பின்னர், மேலதிக சிகிச்சைக்கென தற்போது மாத்தளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ரத்தோட்டைப் பொலிஸார், இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## வத்தளையில் தீ விபத்து

வத்தளை - எட்டம்பொல வத்த பிரதேசத்தில் நிறப்பூச்சு தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்டுள்ளது.

எனினும் தீயால் எவருக்கும் பாதிப்பில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தொழிற்சாலையில் நிறப்பூச்சு உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் இரசாயன எதிர்வினைகளால் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## ஆற்றிலிருந்து பெண் சிசுவின் சடலம் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

நுவரெலியா - இராகலை மேற்பிரிவு தோட்டத்தில் உள்ள ஆற்றிலிருந்து பெண் சிசுவின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

அப் பகுதிக்கு சென்ற சிலர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் சிசுவின் சடலத்தை கண்டெடுத்துள்ளனர்.

சிசுவை பிரசவித்தவுடேனே இவ்வாறு ஆற்றில் வீசியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அத்தோடு சந்தேகநபரான தாயை கைதுசெய்ய நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.


இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## நாடாளுமன்றில் பகல் நேரக் காப்பகம்

பகல் நேரக் காப்பகமொன்றை எதிர்காலத்திலும் நாடாளுமன்றத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று, சிறுவர்கள் மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்தார்.

பொலன்னறுவை புதிய நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள பகல் நேரக் காப்பகத்தைத் திறந்துவைத்ததன் பின்னர், அங்கு நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# மஞ்சள் காமாலை



'மஞ்சள் காமாலைக்கு நாட்டு மருந்துதான் சிறந்தது. அலோபதியில் மருந்தே இல்லையாம்' என, பத்தியச் சாப்பாட்டையும் கீழாநெல்லியையும் எடுத்துக் கொள்பவர்கள்தான் பெரும்பாலானோர். ஆங்கில மருத்துவம் மஞ்சள் காமாலையை ஒரு நோயாகவே கருதுவது இல்லை, 'நோயின் அறிகுறி' என்கிறது. எதன் காரணமாக மஞ்சள் காமாலை வரு கிறது எனக் கண்டறிந்து, அதற்குச் சிகிச்சை எடுப்பதன் மூலம், மஞ்சள் காமாலையைக் குணப்படுத்த முடியும்.

மஞ்சள் காமாலை என்பது இரத்தத்தில் பிளிருபின் அளவு அதிகமாக இருப்பதே. இதற்கு முக்கியமாக ஏழு காரணங்கள் உள்ளன. அவை என்னென்ன, மஞ்சள் காமாலையிலிருந்து எப்படி விடுபட, வராமல் தடுப்பது எப்படி என்பது தொடர்பாக பார்க்கலாம்.

**பிளிருபின் (Bilirubin)**

நம் உடலில் உள்ள இரத்த சிவப்பு அணுக்களின் ஆயுள் சுமார் 120 நாட்கள். அதன் ஆயுள் முடியும்போது மண்ணீரலில் சிதைக்கப்படும். அப்போது சிவப்பணுவில் உள்ள ஈமோகுளோபின், ஹீம் மற்றும் குளோபின் எனத் தனித்தனியாகப் பிரிக்கப்படுகின்றன. ஹீமில் உள்ள இரும்புச் சத்து உடலுக்குள்ளே மறுசுழற்சிக்கு எடுத்துக் கொள்ளப்படும். மீதம் உள்ள கழிவு (பிளிருபின்)வெளியேற வேண்டும்.

மண்ணீரலில் இருந்து இந்த பிளிருபின் கல்லீரலுக்கு செல்லும். இந்த பிளிருபின் நீரில் கரையாத தன்மையில் (Unconjugated/ Indirect) இருக்கும். இதை கல்லீரல் உள்வாங்கி, கரையும் (Conjugated) தன்மையுள்ளதாக மாற்றி, பித்தநீர் வழியாக பிதத்பையில் சேகரிக்கும். உணவு செரிமானத்தின்போது, பித்தப்பையில் இருந்து, பித்தநீரோடு பிளிருபின் சிறுகுடல் வழியாக வெளியே சென்றுவிடும்.

பிளிருபின் ஓர் கழிவு மட்டுமே என்பதால், அது மலம் வழியாக வெளியேறும். சிறிதளவு பிளிருபின் உறிஞ்சப்பட்டு மறுசுழற்சியில் சிறுநீர் வழியாகவும் வெளியேறும்.

பிளிருபின் உடலில் இருந்து வெளியேறுவதில் ஏதாவது பிரச்சினை ஏற்படும்போது , அது நம் உடலில் தேங்கிவிடும். பிளிருபின் மஞ்சள் நிறமி என்பதால், நம் உடலில் மஞ்சள் காமாலை ஏற்படுகிறது..

**சுகாதாரச் சீர்கேடு**

சுகாதாரமற்ற உணவுகளைச் உட்கொள்ளும்போது, ஹெபடைட்டிஸ் ஏ, இ போன்ற வைரஸ்கள் உடலுக்குள் சென்று கல்லீரலைப் பாதித்து, மஞ்சள் காமாலையை ஏற்படுத்துகின்றன.

பீகல் (Fecal) ஓரல் வைரஸ் மூலமாக ஹெபடைட்டிஸ் ஏ வைரஸ் பரவும். ஒருவர் மலம் கழித்து விட்டு, கையைச் சரியாகக் கழு வாமல் உணவைத் தொடும் போது, உணவு வழியாக இந்த வைரஸ் பரவும்.

பொதுவாக, சுகாதாரமற்ற இடத்தில் சாப்பிடுபவர்களுக்கு இந்த வகை மஞ்சள் காமாலை வரும் வாய்ப்பு அதிகம்.

ஹெபடைட்டிஸ் ஏ வைரஸ்'க்குத் தடுப்பூசி உள்ளது. ஹெபடைட்டிஸ் இற்கு தடுப்பூசி இல்லை.

ஹெபடைட்டிஸ் ஏ, இ வைரஸ் காரணமாக மஞ்சள் காமாலை வருபவர்களுக்கு, பசி குறையும், உணவைப் பார்த்தாலே வெறுப்பு ஏற்பட்டு, குமட்டல் வரும். கண்கள் மஞ்சளாக இருக்கும், சிறுநீர் மஞ்சளாகப் பிரியும், இரத்தப் பரிசோதனை செய்தால் எந்த வைரஸ் தொற்று என்பதைக். கண்டுபிடிக்கலாம்.

சூடு வைப்பது, பச்சிலை வைத்துக் கட்டுவது போன்றவற்றால் நோய் சரியாகிவிடும் எனும் தவறான நம்பிக்கைகள் உள்ளன. இதனால், நோயின் வீரியம் அதிகரிக்கவே வாய்ப்பு உள்ளதே தவிர, குணமாகாது.

மஞ்சள் காமாலை நான்கைந்து நாட்கள் முதல் ஓரிரு வாரம் உடலில் இருந்துவிட்டு பின்னர் போய்விடும். இவர்கள் எளிதில் செரிமானமாகும் உணவைச் சாப்பிட்டு, மருத்துவர் சொல்லும் அறிவுரைகளைக் கடைப்பிடித்தால் போதும், குணமாகிவிடும்.

**ஹெபடைட்டிஸ் பி,சி வைரஸ**

ஹெபடைட்டிஸ் பி, சி வைரஸ் இரத்தம் மூலமாகப் பரவும். சுகாதாரமற்ற ஊசிகளைக்கொண்டு பச்சை குத்துதல், காதுகுத்துதல், ஒருவர் பயன்படுத்திய ஊசி, பிரஷ், ஷேவிங் பிளேடு போன்றவற்றை மற்றவர்கள் பயன்படுத்துதல் போன்றவற்றால் இந்த வைரஸ் பரவும். ஹெபடைட்டிஸ் பி-யைத் தடுக்க இப்போது தடுப்பூசி இருக்கிறது. ஆனால், சி வைரஸ்'க்கு தடுப்பூசி இல்லை. இந்த வைரஸ் காரணமாக வரும் மஞ்சள் காமாலையை நவீன உயர் சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும்.

**மருந்து**

நாம் உட்கொள்ளும் உணவு, மருந்து என அனைத்தும் செரிமானம் ஆகி, கிரகிக்கப்பட்டு கல்லீரலுக்குத்தான் செல்லும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருள் ஒவ்வாமையாக இருக்கும்.

சாதாரணமாக, சளிக்குச் சாப்பிடும் மருந்துகள் முதல் உயர் சிகிச்சை மருந்துகள், உணவுகள், மூலிகைகள் என எதன் காரணமாக வேண்டுமானாலும் ஒவ்வாமை ஏற்பட்டு, மஞ்சள் காமாலை ஏற்படலாம். புதிதாய் ஏதாவது ஒன்றைச் சாப்பிட்ட பின்னர், மஞ்சள் காமாலை வந்தால், எந்த உணவு அல்லது மருந்து என்பதைக் கண்டுபிடித்து அதை நிறுத்தினாலே, மஞ்சள் காமாலை குணமாகிவிடும.

குறிப்பிட்ட மருந்து சாப்பிட்டே ஆகவேண்டிய நிலையில் இருப்பவர்கள் மருத்துவர் பரிந்துரைப்படி மருந்தை மாற்றிக்கொள்ளலாம்.

**ஆல்கஹால்**

மதுவின் காரணமாக மஞ்சள் காமாலை ஏற்பட்டு மருத்துவமனைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

ஆல்கஹால் காரணமாக கல்லீரல் பாதிக்கப்படுவது ஆரம்பத்தில் தெரியாது. கல்லீரல் 80 சதவிகிதம் பாதிக்கப்பட்ட பின்னர்தான் அறிகுறிகளே தெரியும். கல்லீரல் சுருக்க நோய் வந்த பின்னர் பிளிருபின் சரியாக வெளியேற்றப்படாமல் மஞ்சள் காமாலை வந்தால், காப்பாற்றுவது கடினம். கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சை தீர்வு என்றாலும்கூட கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சைக்கான செலவு, அதன் பிறகு எடுத்துக்கொள்ள வேண்டிய மருந்தின் பக்கவிளைவு மிக அதிகம். எனவே, மதுவை அறவே நிறுத்துவதுதான் ஒரே சிறந்த தீர்வு.

**கில்பர்ட் சிண்ட்ரோம்**

வீடுகளில் குப்பையைத் தின

**Health Care — மருத்துவ உலகம் — உங்கள் நலம் உங்கள் கைகளில்**

ந்தோறும் அகற்றிவிடுவோம். ஒரு சிலர், நான்கைந்து நாட்கள் சேர்த்துவைத்து, பின்னர் வெளியேற்றுவார்கள். அதுபோல வெகு சிலருக்கு கல்லீரல் சோம்பலாகச் செயல்படுவதைத்தான் 'கில்பர்ட் சிண்ட்ரோம்' என்கிறோம். நம் நாட்டில் ஆண்களில் 100-இல் 3 பேருக்கும், பெண்களில் இரண்டு பேருக்கும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இவர்களுக்கு இரத்தத்தில் பிளிருபின் கொஞ்சம் அதிகமாக இருக்கும். ஆனால், கல்லீரல் பரிசோதனை செய்யும்போது கரையும் பிளிருபின் வகை குறைவாகவும், கரையாத பிளிருபின் வகை அதிகமாகவும் இருக்கும்.

சளி, காய்ச்சல் என ஏதாவது நோய் இருக்கும் சமயங்களில் மட்டும் மஞ்சள் காமாலை ஓரிரு நாட்கள் அதிகமாக இருக்கும், பின்னர் தானாகவே சரியாகிவிடும்.

கில்பர்ட் சிண்ட்ரோம் இருப்பின் மஞ்சள் காமாலையால் உடல் பாதிக்கப்படுமோ என அஞ்ச வேண டாம். இவர்களுக்கு எந்த வித சிகிச்சையும் தேவைப்படாது. உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

**பித்தக்குழாய் அடைப்பு (Obstructive Jaundice)**

பித்தப்பையில் உருவாகும் கற்கள் சிலநேரம் உருண்டு இறங்கி பித்த நாளத்தில் அடைப்பை ஏற்படுத்தினால், மஞ்சள் காமாலை ஏற்படும்.இவர்களுக்குக் குளிர் காய்ச்சல் வரும், வாந்தி வரும், வயிறு வலிக்கும். இரத்தத்தில் பிளிருபின் அளவு மிக அதிகமாக இருக்கும். சிறப்பு எண்டோஸ்கோப்பி (E.R.C.P) சிகிச்சை மூலம் பித்தக்குழாயில் இருக்கும் கற்களை அகற்றினால், மஞ்சள் காமாலை மறைந்துவிடும்.

பித்தக்குழாய் சிறுகுடலில் சேரும் இடத்தில் கணையம் இருக்கிறது. கணையத்தின் தலைப்பகுதியில் அழற்சி, கட்டிகள் உருவானாலும் பித்தக்குழாயில் இருந்து பிளிருபின் வெளியேற்றம் பாதிக்கப்பட்டு மஞ்சள் காமாலை வரும்.

இவர்களுக்கு ஆரம்பத்தில் வலி இருக்காது, உடல் எடை குறையும், பசியின்மை இருக்கும். உடனடியாகக் கல்லீரல் பரிசோதனை செய்து கணைய நோயைக் கவனித்து, பித்த நாளத்தை பைபாஸ் செய்வதன் மூலம் பாதிப்பில் இருந்து தப்பலாம்.

**அதீத சிவப்பணு அழிவு (Increased Hemolysis)**

ஒரு நாளைக்குக் குறிப்பிட்ட அளவு சிவப்பணுக்கள் மட்டுமே உடைய வேண்டும். மாறாக, அளவுக்கு மீறி சிவப்பணுக்கள் உடைந்தால், இரத்தத்தில் பிளிருபின் அளவு அதிகரித்துவிடும். இதனால் மஞ்சள் காமாலை வரக்கூடும். இந்த பிளிருபின் கரையாத வகையாகும். இரத்த சோகை உள்ளவர்கள் அதற்குரிய சிகிச்சை கொடுத்தால் தானாகவே மஞ்சள் காமாலை போய்விடும்.

இவை தவிர, உடலில் இரு ம்பு, தாமிரச்சத்து அதிகமாக இருப்பவர்கள், நோய் எதிர்ப்புச் சக்தி பிறழ்வு (Autoimmune Hepatitis) உள்ளவர்களுக்கு அரிதாக மஞ்சள் காமாலை ஏற்படலாம்

**என்ன பரிசோதனை?**

சிலர், பிளிருபின் பரிசோதனை மட்டும் செய்துகொண்டு சுய சிகிச்சை எடுக்கிறார்கள். இது தவறு. கல்லீரல் செயற்பாட்டுக்கான முழுப் பரிசோதனை (LFT) செய்ய வேண்டும். ஆண்டுக்கு ஒரு முறை மாஸ்டர் ஹெல்த் செக் அப் செய்யும்போது, கல்லீரல் முழுமையாகச் சோதனை செய்யப்படும். இதனால், பாதிப்புகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்த முடியும்.

**மஞ்சள் காமாலை வந்தால் மரணமா?**

மஞ்சள் காமாலை வந்தால் மரணம்தான் என முடிவுகட்ட வேண்டியது இல்லை. எதனால் மஞ்சள் காமாலை வருகிறது என்பதை அறிந்து, அதற்குரிய சிகிச்சை அளித்தால், கண்டிப்பாகக் குணப்படுத்த முடியும். முன்னெச்சரிக்கை, முறையான பரிசோதனை, முழுமையான சிகிச்சை இவை மூன்றும் இருந்தால், மஞ்சள் காமாலை நோயை விரட்ட முடியும்.

**அறிகுறிகள்**

மஞ்சள் காமாலை முதலில் கண்ணில்தான் வெளிப்படுகிறது. கண்களில் மிகவும் மெல்லிய வெள்ளை நிறப் பகுதி ஸ்க்லீரா. பிளிருபின் அதிகமாக இருந்தால் ஸ்க்லீரா பாதிக்கப்பட்டு மஞ்சள் நிறத்துக்கு மாறும்.

கண்ணில் மஞ்சள் காமாலை வந்திருப்பதைக் கண்டறிய பாதிக்கப்பட்டவரை இயற்கை வெளிச்சத்தில் வைத்துப் பரிசோதிப்பதே சிறந்த முறை. செயற்கை விளக்கொளியில் கண்டறிவதில் தாமதம் ஏற்படும்.

நாக்கு, மேல் அன்னம், உள் உதடு, கைகள் போன்றவற்றில் மஞ்சள் நிறப் புள்ளிகள் தோன்றும். பித்தநீர் சரியாக வெளியேறாது. எனவே, பித்த உப்பு உடலில் தங்கிவிடும். பிளிருபின், பிதத உப்புடன் சேர்ந்தால், தோலில் அரிப்பு ஏற்படும்.


பசியின்மை, உணவைப் பார்ததாலோ, உணவு வாசனையை நுகர்ந்தாலோ கூட குமட்டல் உணர்வு இருக்கும். இந்த அறிகுறிகள் தென்பட்டால், மஞ்சள் காமாலை இருக்கலாம்.


**மஞ்சள் காமாலையைத் தடுக்க ஈஸி டிப்ஸ்**

மது அருந்துவதை நிறுத்த வேண்டும்.எந்த ஓர் உணவுப் பொருளைச் சாப்பிடுவதற்கு முன்பாகவும் சாப்பிட்ட பின்னரும் கண்டிப்பாகச் சுத்தமாகக் கை கழுவ வேண்டும், வீதியோரங்கள்,சாக்கடை ஓரங்களில் உள்ள கடைகளில் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்,காய்கறி, பழங்கள் போன்ற எதையும் சுத்தமாகக் கழுவிய பிறகுதான் வெட்ட வேண்டும்,கழிவறைக்கு அருகில் சமையல் பொருட்களை வைக்கக் கூடாது, சமைக்கவும் கூடாது. கழிவறையை அவ்வப்போது சுத்தம் செய்வது அவசியம்,கழிவறையைப் பயன்படுத்திய பின், சிறுநீர் கழித்த பின், கைகளை நன்றாக கிருமி நாசினியை பயன்படுத்தி கழுவ வேண்டும்,நகம் வளர்க்கக் கூடாது, நகம் கடிக்கக் கூடாது, நேரத்துக்குச் சாப்பிட வேண்டும், குறிப்பாக, காலை உணவைத் தவிர்க்கக் கூடாது.

நண்பர்கள், உறவினர்கள் என யாருடைய பிரஷ், ஷேவிங் செட் போன்றவற்றையும் பயன்படுத்தக் கூடாது,

ஒருமுறை பயன்படுத்தக்கூடிய ஊசியையே பயன்படுத்த வேண்டும்.





யாழ்.சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா கலந்து கொண்டிருந்தார்.

# அனுமதியின்றி பிரவேசிக்கும் வெளிநாட்டு படையினர்

# சவப்பெட்டியில் திரும்ப நேரிடும்

## சிரிய வெளிவிவகார அமைச்சர் எச்சரிக்கை

(டமாஸ்கஸ்)

**சிரிய அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் அந்நாட்டுக்குள் பிரவேசிக்கும் வெளிநாட்டுப் படைவீரர்கள் சவப் பெட்டிகளில் திரும்ப நேரிடும் என சிரிய வெளிவிவகார அமைச்சர் வாலித் அல் முயல்லம் எச்சரித்துள்ளார்.**



கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையில் சவுதி அரேபியாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான மோதலில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டமைப்பு நாடுகளின் படைகளும் கிளர்ச்சிக் குழுக்களும் அனுமதியளித்தால் தான் சிரியாவுக்கு தனது தரைப்படையை அனுப்பத் தயாராக இருப்பதாக சவுதி அரேபியா அறிவித்தமைக்கு இரு நாட்களிலேயே சிரிய வெளிவிவகார அமைச்சரின் இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

"சிரிய அரசாங்கத்தின் அனுமதியின்றி தரை வழியாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு தலையீடும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே கருதப்படும். அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் சவப்பெட்டியிலேயே தமது நாடுகளுக்குத் திரும்ப நேரிடும் என்பதை நான் இங்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## 530 கிராம் எடையில் பிறந்த குழந்தை



ஸ்பெயினில் இருந்து டுபாயில் புலம்பெயர்ந்து வாழும் சுசி மற்றும் கிறிஸ்டோபர் சக்ரமென்டோ தம்பதிக்கு, கடந்த ஒக்டோபர் மாதம் டுபாயில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் அழகான ஆண் குழந்தை பிறந்தது. 14 வாரங்கள் முன்கூட்டியே அதாவது குறை பிரசவமாக பிறந்த இந்த குழந்தை வெறும் 530 கிராம் எடையில் இருந்தது.

ஒரு 'ஜபாடின்' எடையை விட குறைவான (பொதுவாக ஒரு ஜபாடு 600 கிராம் எடை கொண்டது) எடையில் இருந்த இந்த குழந்தையை டாக்டர்கள் தீவிர சிகிச்சைப்பிரிவில் வைத்து கண்காணித்தனர். இதற்காக அமைக்கப்பட்டு இருந்த டாக்டர்கள் குழுவில், இந்திய டாக்டர் ஒருவரும் இடம் பெற்றிருந்தார்.

நிக்கோலஸ் என பெயரிடப்பட்ட அந்த குழந்தைக்கு அல்லும் பகலும் கண்ணும், கருத்துமாக டாக்டர்கள் ஊட்டச்சத்து மற்றும் சிகிச்சை அளித்தனர். இதனால் குழந்தையின் எடை வேகமாக அதிகரித்தது. சுமார் 110 நாட்கள் கண்காணிப்புக்குப்பின், நேற்று முன்தினம்தனது பெற்றோருடன் குழந்தை வீடு திரும்பியது. குழந்தையின் தற்போதைய எடை 1.90 கிலோகிராம் ஆகும்.

குறை பிரசவத்தில் பிறந்தாலும், தங்கள் குழந்தையை உயிருடன் மீட்டு தந்த டாக்டர்கள் குழுவுக்கு பெற்றோர் பாராட்டு தெரிவித்தனர். (இ)

## ஈராக்கில் சிக்கிய 39 இந்தியர்களின் குடும்பங்களைச் சந்தித்தார் சுஷ்மா

ஈராக்கில் சிக்கி தவித்து வரும் 39 இந்தியர்களின் குடும்பங்களை சேர்ந்தவர்கள் மத்திய, வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்தித்துள்ளனர்.

கடந்த 2014 ஜூன் மாதம், ஈராக்கின் மொசூல் நகரில் 39 இந்தியர்கள் ஐ.எஸ்.பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டனர்.

அவர்களின் நிலை குறித்து தெளிவான தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.


பின்னர், ஈராக்கில் மாயமான 39 இந்தியர்களும் பாதுகாப்பாகவுள்ளதாக பாலஸ்தீன அதிகாரிகள் கடந்த மாதம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தீவிரவாதிகள் பிடியில் உள்ள இந்தியர்களின் குடும்பத்தினர் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்தித்து பேசியுள்ளனர்.

சுஷ்மா சுவராஜ் இது குறித்து கூறுகையில், 39 இந்தியர்களையும் விரைவில் விடுதலை செய்ய முயற்சிப்பதாக ஒட்டுமொத்த அரபு நாடுகளும் உறுதியளித்துள்ளன.

தற்போது வரை, தகவல்களை மறைமுகமாகவே பெற்று கொண்டிருந்தோம், ஆனால் பஹ்ரேய்ன் சென்ற போது, நேரடியாக தகவல்களை பெற்றேன் என மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## வீதியில் திடீரென ஏற்பட்ட பள்ளம் வாகனத்துடன் சிக்கிய குடும்பம்



பெரு நாட்டில் திடீரென வீதியில் ஏற்பட்ட பள்ளத்தில் வாகனம் ஒன்று சிக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தென் அமெரிக்க நாடான பெருவின் Trujillo பகுதியில் உள்ள வீதியில் வாகனங்கள் தொடர்ந்து சென்று கொண்டிருந்தன.

அப்போது அந்த வீதியில் திடீரென்று பெரும் பள்ளம் ஒன்று ஏற்பட்டு அந்த நேரத்தில் கடந்து சென்ற வாகனம் ஒன்று அதில் சிக்கியுள்ளது. 16 அடி கொண்ட அந்த பள்ளத்தில் விழுந்த வாகனத்தில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கையில் அப்பகுதி மக்கள் ஈடுபட்டனர். பள்ளத்தில் விழுந்த அந்த வாகனத்தில் இருந்து 2 வயது சிறுமி உள்ளிட்ட 3 நபர்களை அப்பகுதி மக்கள் மீட்டுள்ளனர்.

பள்ளத்தில் விழுந்த வாகனத்தில் சிக்குண்ட ஓர்லாண்டோ சில்வா தெரிவிக்கையில், அப்பகுதியில் உள்ள மக்கள் உடனடியாக வந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர், ஆனாலும் எங்களுக்கு கொஞ்சம் பயமாகவே இருந்தது என்றார்.

கடந்த வாரம் அப்பகுதியில் அடித்த கன மழை காரணமாக வீதியில் திடீரென்று பள்ளம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. பள்ளத்தில் வாகனத்துடன் சிக்கிய குடும்பத்தினரை அப்பகுதி மக்கள் பத்திரமாக மீட்டுள்ளனர். வாகனத்தை மீட்கும் பொருட்டு அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு ள்ளதாக கூறப்படுகிறது. (இ)


## மீட்புப்பணி மும்முரம்



தாய்வான் நிலநடுக்கத்தில் கட்டடங்களில் சிக்கி இருப்பவர்களை மீட்கும் பணி போர்க்கால அடிப்படையில் நடக்கிறது. தாய்வானில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் தாய்வான் நகரில் உள்ள 17 மாடி குடியிருப்பு கட்டடம் முற்றிலும் இடிந்து விழுந்தது. இதில் பச்சிளம் குழந்தை உட்பட 24 பேர் பலியாகினர். நூற்றுக்கணக்கானவர்களை காணவில்லை.

இடிபாடுகளில் இருந்து இதுவரை 171 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும், அதில் 90 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு உள்ளனர் என்றும் தாய்வான் அவசரகால மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது. இங்கு இடிந்த 17 மாடி கட்டடத்தின் அடியில் மேலும் 124 பேர் இருக்கலாம் என்று கருதப்படுவதால், அவர்களை மீட்க போர்க்கால அடிப்படையில் வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (இ)

## ஷார்ஜாவில் உலக சாதனை முயற்சியாக 5 ஆயிரம் பேர் யோகாவில் பங்கேற்பு





ஷார்ஜாவில் ஸ்கைலைன் பல்கலைக்கழக வளாகத்தில் உலக சாதனை முயற்சியாக 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற யோகா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியைடுபாய்இந்தியதுணை தூதரகம், ஷார்ஜா இந்தியன் அஸோசியேசன், ஸ்கைலைன் பல்கலைக் கழகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. முதலில் யோகா நிகழ்ச்சியும் அதனை தொடர்ந்து நடையோட்டமும் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு இந்திய துணை தூதர் அனுராக் பூஷன் தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக பின்னணி பாடகர் கே.ஜே.யேசுதாஸ் கலந்து கொண்டார். மது மற்றும் போதைக்கு எதிரான விழிப்புணர்வு உரைகளும் இதில் இடம்பெற்றிருந்தன. ஸ்கைலன் பல்கலைக் கழக நிறுவன தலைவர் கமல் பூரி, நிர்வாகக் குழு இயக்குநர் நிதின் ஆனந்த், ஷார்ஜா இந்திய சங்க தலைவர் வை.ஏ ரஹீம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ)

# சிறைச்சாலையில் 100 குழந்தைகள்

## பிரிட்டன் பிரதமர் கவலை



பிரித்தானியாவில் உள்ள சிறைகளில் கடந்த 2015 ஆம் ஆண்டில் 100 குழந்தைகள் வாழ்ந்துள்ளனர் என்று பிரதமர் டேவிட் கமரூன் கவலை தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய பிரதமர் கமரூன் சிறைகொள்கை தொடர்பாக ஆற்றிய உரையில், குற்றங்களை புரிந்துவிட்டு சிறைக்கு வரும் கர்ப்பிணி பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள் சிறையில் வாழ்வது மிகவும் கொடூரமான ஒன்றாகும்.

பிறக்கும் சில மாதங்களுக்கு முன்னரும், பிறந்து சில மாதங்கள் வரையிலும், சில குழந்தைகள் ஒரு ஆண்டு வரையிலும் சிறையில் வாழ்வதை எண்ணி துயரப்படுகிறேன்.

குழந்தை பெற்றெடுத்த தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு இனிமையான சூழல் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒலிகள், வண்ணங்கள் போன்றவற்றை உணர்வதற்கு ஏற்றவகையான சில பிரிவுகள் சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பிறந்த குழந்தைகளை பராமரிப்பதற்காக சில பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிறந்த குழந்தைகள் 18 மாதங்கள் வரையில் சிறையில் அனுமதிக்கப்படுகின்றனர், கடந்த 2015 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 100 குழந்தைகள் வரை சிறையில் தங்கியதாக கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது. (இ)

# பாதுகாப்புப் பொலிஸாரின் மீது போராட்டக்காரர்கள் தாக்குதல்

பிரான்ஸ் நாட்டில் உள்ள முகாம்களில் தங்கியுள்ள அகதிகளை பாதுகாக்க வந்த பொலிஸாரை சுமார் 150 பேர் கொண்ட போராட்டககாரர்கள் சரமாரியாக தாக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்த பிரான்ஸில் உள்ள கெலைஸ் என்ற பகுதியில் 2 அகதிகள் முகாம்கள் அமைந்துள்ளன. இங்கு சுமார் 3ஆயிரத்து 700 அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். லொறிகள் மற்றும் ரயில்களில் ஏறி பிரித்தானியா நாடடிற்கு தப்பி செல்லும் சம்பவங்கள் அடிக்கடி அரங்கேறும்.

இந்நிலையில், கெலைஸ் பகுதியில் இருந்து ஒட்டுமொத்த அகதிகளையும் வெளியேற்றும் வகையில், இஸ்லாமியர்களுக்கு எதிரான பெகிடா இயக்கத்தினர் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

ஆனால், பிரான்ஸ் உள்துறை அமைச்சரான Bernard Cazeneuve 'போராட்டத்தை எப்படியாவது தடுத்து நிறுத்தி அகதிகளுக்கு பாதுகாப்பு வழங்குமாறு' பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கெலைஸ் பகுதியில் சுமார் 150 போராட்டக்காரர்கள் குவிந்த நிலையில், அவர்களை தடுத்து நிறுத்த பொலிஸார் விரைந்துள்ளனர்.

அப்போது இரு தரப்பினருக்கும் இடையே கடுமையாக தாக்குதல் நடந்துள்ளது. இதில் சில பொலிஸாருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது.

எனினும், போராட்டத்தை தடுத்து நிறுத்திய பொலிஸார் பெகிடாவை சேர்ந்த 10 போராட்டக்காரர்களை கைது செய்துள்ளனர்.

முன்னதாக, கெலைஸ் பகுதியில் உள்ள முகாம்களில் பாதுகாப்பும் சுகாதாரமும் இல்லாமல் இருப்பதால், அங்குள்ள குழந்தைகள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும், இதற்கு பிரான்ஸ் அரசு உடனடி தீர்வு காண வேண்டும் என்று அகதிகளுக்கான ஐ.நா உயர்மட்ட ஆணையம் வலியுறுத்தியுள்ள்து குறிப்பிடத்தக்கது. (இ)

# ஸ்பெயின் பொலிஸார் அதிரடி நடவடிக்கை

(காபூல்)

ஸ்பெயின் நாட்டில் ஐ.எஸ். அமைப்பில் தொடர்புடைய 7 நபர்கள் மீது அந்த நாட்டு பொலிஸார் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டில் ஐ.எஸ். அமைப்பு மற்றும் ஜபத் அல் நுஸ்ரா அமைப்புகளில் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் 7 நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

Valencia and Alicante மாகாணத்தில் இருந்து செயறபட்டு வந்த 6 நபர்களை அப்பகுதியில் சோதனை மேற்கொண்ட பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தீவிரவாததுடன் தொடர்புடைய நபர்களை கைது செய்துள்ளதாக உள் விவகாரத்துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. ஆனால் போதிய விளககங்களை தர அமைச்சகம் மறுத துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் ஈராக் மற்றும் சிரியா நாடுகளில் செயற்பட்டுவரும் தீவிரவாத அமைபபுகளுக்கு ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டு உருவாக்கும் பொருட்களை அனுப்பி வந்ததாக உள்விவகாரத்துறை அமைச்சர் Jorge Fernandez Diaz தெரிவித்துள்ளார்.


குழுவின் தலைவனாக கருதப்படும் நபர். கப்பல்களில் பொருட்களை அனுப்பும் தொழிலில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது.

கடந்த 2014 ஆம் ஆண்டில் இருந்தே இந்த நபர்கள் குறித்து பொலிஸார் விசாரிக்கவும் தொடர்ந்து கண்காணித்தும் வந்துள்ளனர்.

போதிய ஆதாரங்கள் சிக்கியதும் அவர்களை கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ள ஸ்பெயின் பொலிஸார, அவர்களில் 4 பேர் ஸ்பானிய குடிமக்கள் என்றனர்.

தீவிரவாத அச்சுறுத்தலை முறியடிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதலில் பாதுகாப்புப் படைவீரர்கள் 15பேர் பலி



(பக்தாத்)

ஈராக்கில் அரசுப்படைக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இடையேயான சண்டை தீவிரம் அடைந்து வருகிறது. ஐ.எஸ். தீவிரவாதிகள் வசம் இருந்த ரமாடி நகரை அரசுப்படை மீட்டது, ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு பெரும் பின்னடைவாக கருதப்பட்டது. ஆனால் அங்கு தற்போது ஐ.எஸ். தீவிரவாதிகளின் கை மீண்டும் ஓங்க தொடங்கியுள்ளது.

அன்பார் மாகாணத்தில் உள்ள எயின் அல் ஆசாத் விமான தளத்தை நோக்கி பாதுகாப்பு படை வீரர்கள் பலர் இராணுவ வாகனங்களில் நேற்று முன்தினம் அணிவகுத்து சென்று கொண்டிருந்தனர்.

அப்போது வெடிகுண்டுகள் நிரப்பிய காரை ஓட்டி வந்த ஐ.எஸ். தீவிரவாதி ஒருவன் அதை, இராணுவ வாகனங்கள் மீது மோதி வெடிக்கச் செய்தான். இதில் 3 இராணுவ வாகனங்கள் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறின.

இந்த சம்பவத்தில் பாதுகாப்பு படை வீரர்கள் 9 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 16 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதற்கிடையில், ரமாடி நகரின் கிழக்கு பகுதியில் உள்ள சவுபியா மாவட்டத்தில் பாதுகாப்பு வீரர்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தபோது தீவிரவாதிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் வெடித்து சிதறின. இதில் சிக்கி 6 பாதுகாப்பு படை வீரர்கள் பலியாகினர். 5 பேர் காயம் அடைந்தனர்.

முன்னதாக அமெரிக்கக் கூட்டுப்படை நடத்திய வான் தாக்குதலில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் 3 ஆயுதம் தாங்கிய வாகனங்கள் அழிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது. (இ)

# பிரித்தானியப் பிரதமர் கமரூன் இராஜினாமா?

(லண்டன்)

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுவது தொடர்பான விவகாரத்தில் பிரதமர் க்மரூன் தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக எதிர்க்கட்சி உறுப்பினர் வெளியிட்டுள்ள தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுவது தொடர்பிலான பொதுமக்கள் வாக்கெடுப்பு இன்னும் சில மாதங்களில் நடக்கவுள்ளது.

இந்நிலையில், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான டோபி பெர்கின்ஸ் ஒரு பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய விவகாரத்தில் பிரதமர் கமரூனிற்கு சாதகமான முடிவுகள் ஏற்படாவிட்டால், அவர் தனது பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்கு வாய்ப்புள்ளது.

இதனால், கன்சர்வேட்டிவ் கடசியின் புதிய தலைவராக பதவி ஏற்கும்போது, நாடாளுமன்ற உறுபபினர்களில் 3 இல் 2 சதவிகிதத்தினர் உடனடி பொது தேர்தலை நடத்த வேண்டும் என வலியுறுத்தினால் அதனை தவிர்க்க முடியாது.

இவ்வாறு ஒரு சூழல் ஏற்பட்டால், இந்த ஆண்டு இறுதிக்குள் கூட பொது தேர்தல் நடக்க வாய்பபுள்ளதாகவும், அதனை எதிர்கொள்ள தொழிலாளர் கட்சியின் தலைவரான ஜெரிமி கொர்பைன் உள்ளிட்ட அனைவரும் தயாராக இருக்க வேணடும் என டோபி பெர்கின்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

எனினும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரின் இந்த தகவலுக்கு கன்சர்வேட்டிவ் கட்சியினர் எந்த பதிலும் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# அகதிகளுக்கு எதிராக மாபெரும் பேரணி நடத்திய இஸ்லாமிய எதிர்ப்புக்குழுவினர்

ஐரோப்பாவில் அதிகளவில் தஞ்சமடைந்து வரும் இஸ்லாமிய அகதிகளுக்கு எதிராக நேற்று முன்தினம் பெகிடா அமைப்பு மாபெரும் பேரணியை நடத்தியது.

உள்நாட்டு போர் காரணமாக ஆசியா மற்றும் ஆபிரிக்காவை சேர்ந்த ஏராளமானோர் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் அவ்வாறு தஞ்சமடையும் இஸ்லாமியர்களால் ஐரோப்பாவில் இஸ்லாமிய பழக்கவழக்கங்கள் அதிகரித்து வருவதாக பலரும் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் ஐரோப்பாவில் இஸ்லாமிய அகதிகளுக்கு அடைக்கலம் வழங்கக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து ஜேர்மனியின் டிரஸ்டென் பகுதியில் பெகிடா (PEGIDA) அமைப்பு மாபெரும் எதிர்ப்பு பேரணியை நடத்தியது.

இதில் கலந்துகொண்டோர், ஜேர்மனியின் சான்சலர் ஏஞ்சலா மேர்கல்லை கண்டிக்கும் விதமான பதாகைகளை ஏந்தி பேரணி சென்றனர்.

மேலும் அகதிகளுக்கு எதிராகவும், அவர்கள் கோஷங்களை எழுப்பினர். சுமார் ஆயிரம் பொலிஸார்வரை பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டிருந்தனர்.

ஜேர்மனியில் மட்டுமல்லாது பிரான்ஸின் காலேஸ், பராகுவே, ஆம்ஸ்டர்டாம், டப்ளின் போன்ற நகரங்களிலும் பெகிடா அமைப்பினர் எதிர்ப்பு ஊர்வலம் சென்றனர். (இ)

# அழகிய புன்னகையால் மக்கள் மனதில் இடம் பிடித்த குட்டி இளவரசி



பிரித்தானிய மக்கள் மனதில் இடம் பிடித்தவர்கள் குறித்து நடத்திய கணக்கெடுப்பில் பிரித்தானிய குட்டி இளவரசி சார்லோட் முதல் இடம் பிடித்துள்ளார்.

Tatler என்ற நாளிதழ், "மக்கள மனதில் இடம்பிடித்தவர்கள் யார்?" என்ற கணக்கெடுப்பினை நடத்தியதில், பிறந்து 8 மாதங்களே ஆன சார்லோட் எலிசபெத் டயானா முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

பேச்சு பருவம், எட்டெடுத்து வைக்கும் நடை போன்றவற்றை கூட எட்டாத நிலையில், த்னது அழகிய புன்னகையில் மக்களின் மனதில் இடம்பிடித்துள்ளார். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-08.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.03 | 146.04 |
| பவுண்ட் | பிரிட்டன் | 205.31 | 212.57 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 157.22 | 163.46 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.02 | 147.92 |
| டொலர் | கனடா | 101.56 | 105.69 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 99.70 | 104.41 |
| டொலர் | சிங்கப்பூர் | 100.52 | 104.37 |
| ரூபா | இந்தியா | 2.1214 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6086 |
| குவைத் | டினார் | 479.4423 |
| ஓமான் | ரியால் | 373.7442 |
| கட்டார் | ரியால் | 39.5190 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3694 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1780 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 90 | 80 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 50 | 70 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 220 | 250 | 200 |
| தக்காளி | 50 | 60 | 50 | 50 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 80 | 80 | 100 | 80 |
| கரட் | 250 | 250 | 180 | 300 | 300 | 200 |
| பூசணி | 100 | 80 | 60 | 100 | 120 | 60 |
| புடோல் | 80 | 60 | 40 | 70 | 80 | 70 |
| வாழைக்காய் | 80 | 70 | 45 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 80 | 80 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 50 | 80 | 60 | 70 |
| பாகற்காய் | 120 | 100 | 80 | 80 | 200 | 100 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 80 | 80-100 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 200 | 150 | 120 | 120 | 140 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 120 | 120 | 80 |
| பீற்றூட் | 80 | 100 | 80 | 80 | 120 | 100 |
| கறிமிளகாய் | 200 | 250 | 180 | 240 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 1000 | 700 | 400 | 800 | 600 | 1000 |
| போஞ்சி | 80 | 100 | 60 | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 70 | – | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 15 | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 60 | 50 | 80 | 50 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 120 | 100 | 90 | 180 | 140 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 50-80 | 70 | 40 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 40 | 40 | 80 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | – | – | 120 | – |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## முன்னாள் தமிழ் எம்.பிக்கள் சுட்டுக்கொலை 100

டி.ராசலிங்கம், துரைரத்தினம் கதி என்ன ஆனது என்பது தெரியவில்லை. அவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கருதப்பட்டது.

### ஆலால சுந்தரம்

சுட்டுக்கொல்லப்பட்ட ஆலால சுந்தரத்துக்கு 50 வயது. தொழிற்சங்கத்தலைவர்; அமிர்தலிங்கம் கட்சியின் நிர்வாக செயலாளராக இருந்து வந்தார். 1972 ஆம் ஆண்டு முதல் எம்.பி.யாக இருந்து வந்தார்.

அவர், கோப்பே தொகுதியில் இருந்து பாராளுமன்றத்துக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டவர். தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்காகப் பாடுபட்டு வந்தார்.

### தர்மலிங்கம்

62 வயதான தர்மலிங்கம் மானிப்பாய் தொகுதியில் இருந்து பாராளுமன்றத்துக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்.

சுன்னாகத்திலும்- யாழ்ப்பாணத்திலும் படித்துப்பட்டம் பெற்றார். வக்கீல் தொழிலை உதறி விட்டு அரசியலில் குதித்தார்.

1961 ஆம் ஆண்டு நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார். 25 ஆண்டுகளாக மானிப்பாய் தொகுதி உறுப்பினராக இருந்து வந்தார்.

அவரது மகன் சித்தார்த்தன் சமீபத்தில் திம்புவில் நடந்த சமரசப் பேச்சுவார்த்தையில் உமா மகேஸ்வரன் தலைமையிலான பிளாட் இயக்கம் சார்பில் கலந்துகொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தர்மலிங்கம் சமாதான இயக்கத் தலைவர்களில் ஒருவர். இலங்கையில் உள்ள ரஷ்ய இலங்கை நட்புறவு சங்கத் துணைத்தலைவராக இருந்தார்.

### ராசலிங்கம்

கடத்திச் செல்லப்பட்ட துரை ரத்தினத்துக்கு 58 வயது. பள்ளி ஆசிரியராக இருந்தவர். 1956 முதல் 1983 வரை பருத்தித்துறை தொகுதி எம்.பி.யாக இருந்தார்.

ராசலிங்கம் (52) சென்னையில் படித்தவர். இலங்கை திரும்பிய பிறகு சில காலம் ஆசிரியராகவும் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றினார்.

உடுப்படாய் தொகுதியில் இருந்து பாராளுமன்றத்துக்குப் போட்டியிடுவதற்காகக் கல்வி அதிகாரி வேலையை ராஜினாமா செய்துவிட்டார். தாழ்த்தப்பட்டோருக்காகப் பாடு பட்டு வந்தார்.

### அதிர்ச்சி

கடத்திச் செல்லப்பட்ட முன்னாள் எம்.பி.ராசலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டதாக முதலில் வந்த செய்திகள் தெரிவித்தன. ஆனால் ராசலிங்கமும் கடத்தப்பட்ட இன்னொரு முன்னாள் எம்.பியான துரைரத்தினமும் உயிருடன் இருப்பதாகப் புதிய தகவல்கள் வெளியாயின. அவர்கள் இருவரும் வீட்டில் பத்திரமாக இருப்பதாகவும் சென்னையில் உள்ள சிலருடன் டெலிபோனில் பேசியதாகவும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி நிர்வாகிகள் சென்னையில் தெரிவித்தனர்.



தர்மலிங்கம்



ஆலாலசுந்தரம்

இலங்கைத் தமிழ் முன்னாள் எம்.பி.க்கள் ஆலால சுந்தரம், வி.தர்மலிங்கம் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி, இலங்கைத் தமிழர்கள் உட்பட உலகத்தில் வாழும் அனைத்துத் தமிழர்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

2 முன்னாள் எம்.பிக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு இந்திய அரசு அதிர்ச்சியையும் ஆழ்ந்த துயரத்தையும் வெளியிட்டது. இது குறித்து வெளிநாட்டு இலாகா அதிகாரி ஒருவர் கூறுகையில், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அமைதி வழியில் அரசியல் தீர்வு காணும் முயற்சியை இது கெடுத்துவிடும் என்று கருத்து தெரிவித்தார்.


### விடுதலைப்புலிகள் மறுப்பு

இலங்கை முன்னாள் தமிழ் எம்.பிக்கள் ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் ஆகியோர் மர்மமான முறையில் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டதற்கு யார் காரணம் என்பது தெரியவில்லை.

ஆனால், இதற்கு விடுதலைப்புலிகள் தான் பொறுப்பு என்று இலங்கை அரசு குற்றம் சாட்டியது. இதற்கு விடுதலைப்புலிகள் மறுப்பு தெரிவித்து ஒரு அறிக்கை வெளியிட்டனர்.

அதில் அவர்கள் கூறியிருந்ததாவது:-

இலங்கையில் 2 முன்னாள் தமிழ் எம்.பிக்களை விடுதலைப்புலிகள்தான் கடத்திச் சென்று சுட்டுக்கொன்றதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சாட்டி இருக்கிறது.



(தொடரும்)

# ஈழஅகதிகள் ஒருஇலட்சம் பேரும் தாயகம் திரும்ப இந்தியா உதவும்

## சுஷ்மா உறுதியளித்ததாக சந்திரஹாசன் தகவல்

(கொழும்பு)

**இந்தியாவில் உள்ள சுமார் ஒரு இலட்சம் இலங்கை அகதிகள் நாடு திரும்பி மீள்குடியேறுவதற்கு இந்தியா உதவும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், உறுதி மொழியளித்துள்ளதாக சென்னையை தளமாகக் கொண்ட ஈழம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் தலைவர் எஸ்.சி.சந்திர ஹாசனிடம் தெரிவித்துள்ளார்.**





இதன்படி இந்தியா, அகதிகளின் போக்குவரத்துக்கு உதவுவதுடன் வாழ்வாதார முன்னேற்றங்களுக்கும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து உதவும் என்று சுவராஜ் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்திய-இலங்கை கூட்டு ஆணைக்குழு கலந்துரையாடலின்போதே இந்த கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

இலங்கைக்கு அனைத்து அகதிகளையும் விமானங்கள் மூலம் அழைத்து வருவது சாத்தியமில்லை என்பதால், கப்பல்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்தநிலையில் இலங்கைக்கு திரும்பிச் செல்லும் அகதிகளுக்கு வாழ்வாதார உதவிகள் அவசியம் என்று குறிப்பிட்டுள்ள சந்திர ஹாசன்,

ஏற்கனவே விமானங்கள் மூலம் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரத்தின் ஊடாக இலங்கை திரும்பிய அகதிகள் வாழ்வாதாரம் இல்லையென்று கூறி மீண்டும் இந்தியாவுக்குச் சென்று விட்டதாக சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# இலங்கை அகதிகள் 43 பேர் இன்று நாடு திரும்பவுள்ளனர்

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தகவல்



(கொழும்பு)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய (UNHCR)வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் 43 அகதிகள் தமிழ் நாடு இந்தியாவிலிருந்து இன்று 9 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இவர்கள் திருச்சியிலிருந்து இலங்கை விமானசேவை(ul132) இனுடாக மு.ப. 10.20 மணியளவிலும் சென்னையிலிருந்து மிகின் லங்கா விமான சேவை (mj 130) இனுடாக பி.ப. 12.20 மணியளவிலும் மதுரையிலிருந்து மிகின் லங்கா விமான சேவை (mj 308) இனுடாக மு.ப. 10.20 மணியளவிலும் வருகை தரவுள்ளனர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடி யேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் முயற்சியால் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சும் இலங்கை விமான சேவை நிறுவன மும் அவர்களது பயணப் பொதியின் அளவை 40 கிலோகிராமிலிருந்து 60 கிலோகிராமிற்கு அதிகரித்துள்ளது.

இவ் அகதிகள் 43 பேரில் 24ஆண்களும் 19 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக வருகை தருகின்றனர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலங்கையை வந்தடைவதற்கு இலவசமாக விமான பயணச்சீட்டு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங்கப்படும்.

அத்துடன் மீள் சமூக ஒருங்கிணைப் பிற்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 75 அமெரிக்க டொலர்களும், போக்குவரத்து நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 19 அமெரிக்க டொலர்களும், உணவு அல்லாத பண நன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 75 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படுகின்றன.

2011 ஆம் ஆண்டிலிருந்து மொத்தமாக 4 ஆயிரத்து 589 தமிழ் அகதிகள் (ஆயிரத்து 651 குடும்பங்கள்) தமிழ்நாட்டி லிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

மேலும் இந் தியாவில் 64 ஆயிரம் பேர் இந்தியாவிலுள்ள 109 முகாம்களில் இருக்கின்றனர்.

மொத்தமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் இந்தியாவில் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

தற்பொழுது தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் விரிவான கருத்திட்ட முன்மொழிகளை அனுமதிப்பது தொடர்பான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

மேலும் மீள்குடியமரும் மக்களுக்கு 6 மாதகாலத்திற்கு உலர் உணவுகளை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இவ் அமைச்சானது, வீடுகள் மற்றும் தமது உறவினர்களை இழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நஷ்டஈடுகளை வழங்குமாறு, ஆட்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபைக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது. வீடுகளை இழந்தவர் களுக்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்படுமெனவும் சிவஞான சோதி தெரிவித்தார்.

அரசாங்கமானது இந்தியாவிலிருந்து கட்டம் கட்டமாக சுயவிருப்பில் இலங்கைக்கு அகதிகளை அழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன் அதிகரித்த அகதிகளின் வருகையானது நிரந்தர சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான சமிக்ஞையாக காணப்படுவதாகஅமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ)

# இன்று ஒரு தகவல்

## நம்முடைய எதிரிகளைச் சமாளிப்பது எப்படி?

முடிந்த அளவிற்கு,நாம் விரோதிகளை வளர்த்துக் கொள்ளக் கூடாது. அப்படி வளர்த்துக் கொண்டால் நம் மன நிம்மதி கெடும். அவர்களுடன் போராடிப் போராடியே நம் காலம் வீணாகிவிடும். முன்னேற்றம் என்பது கானல் நீர் கண்ட கலைமானின் கதையாகி விடும்.

நம்முடைய எதிரிகளைச் சமாளிக்கத்தக்க தற்காப்புக் கலைகளைக் கற்றுக் கொள்ளுங்கள் என்பது ஒரு கோணம்.

மனதளவில் அவர்களைச் சமாளிப்பது எப்படி என்பது இரண்டாவது கோணம்.

இங்கு நான் எடுத்துக் கொள்ளப் போவது இரண்டாவதைத்தான்.

எதிரிகள் நமக்கு எந்த விதத்தில் தொல்லை கொடுக்கலாம்என்றுதருணம்பார்த்துக் கொண்டே இருப்பார்கள். சிலர் தம் உள்ளத்தை, உடைமைகளைப் பாதிக்கும் செயல்களில் இறங்கலாம். அல்லது உடலுக்கே தீங்கு விளைவிக்கும் செயலிலும் இறங்கக் கூடும். இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் நாமும் இறங்கி விடக்கூடாது. அது சேற்றில் அழுந்தி விட்ட முதல் காலை எடுக்கிறேன் என்று இன்னொரு காலையும் சேற் ஊன்றுவது போலாகும்.

எதிரி நமக்கு இழைக்கும் சட்டத்திற்கு அப்பாற்பட்ட குற்றங்களைச் சட்டமும் பொலிஸாரும் பார்த்துக் கொள்ளும் சாதாரண தீங்குகளை (கோள் மூட்டுதல்; ஒன்றுக்கு இரண்டாகச் சொல்லி பத்தி வைத்தல் போன்றவற்றை) நாம் பொறுத்துக் கொள்வது தான்புத்திசாலித்தனமான செயலாகும்.

ஆக, எதிரிகளை நாம் உருவாக்கிக் கொள்ளக் கூடாது. எதிரிகளின் நடவடிக்கைகளுக்கு எதிர் நடவடிக்கைகளிலும் இறங்கக்கூடாது.

மாறாக, அவர்களது சூழ்ச்சிகளை வெல்வது எப்படி. அவற்றை சமாளிப்பது எப்படி? என்று தான் சிந்திக்க வேண்டும்.

நம்முடைய பலவீனங்களைக் கொண்டு தான் எதிரி நம்மை கசக்கிப் பிழிந்து விடப் பார்க்கி றான் அல்லவா? இத்தகைய பலவீனங்களை நம்மிடமிருந்து விரட்டுவதோ அதை அவன் அறியாதவாறு நடந்து கொள்ளவோ வேண்டும்.

எதிரி நமக்குத் தீமை விளைவிப்பானோ என்ற அச்சத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டுவிட வேண்டும். இவ் விழிப்புணர்ச்சி எதிரியை மட்டுமல்ல,வாழ்க்கையில் ஏற்படும் எந்தப் பிரச்சினையையும் சமாளிக்க உதவும்.

எதிரி நம்மை விட உயர்ந்தவனாக இருந்தால் அவனை விடவோ குறைந்த பட்சமாக அவனைச் சமாளிக்கும் அளவிற்கோ நாமும் எல்லாத் தகுதி யிலும் உயர்ந்து விட வேண்டும். இதற்கு முயற்சியும் உழைப்பும் தேவை.

இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டால்–

எதிரிகளைச் சமாளிப்பது என்பது எளிய செயலே!

லேனா தமிழ்வாணன்

# ஐ.தே.க.தேங்காய் அணியை தோற்கடித்து விட்டோம்

## மகிந்த தேங்காய் அணி பெருமிதம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தேங்காய் அணியை தாம் தோற்கடித்து விட்டதாக மகிந்த ராஜபக்ஷவின் தேங்காய் அணி தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நிதிமோசடி விசாரணைப் பிரிவை கலைக்கக் கோரி, மகிந்த தரப்பு கூட்டு எதிர்க் கட்சியினர் நேற்று முன்தினம்சீனிகம விகாரையில்தேங்காய் உடைத்து போராட்டத்தை நடத்தினர். எனினும் நிதிமோசடி பிரிவு தொடர்ந்தும் இயங்க வேண்டும்என்று வேண்டி ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேங்காய் உடைப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்திருந்தது.

இந்த நிலையில் தமது அணியினர் போராட்டத்தில் ஈடுபட்டவுடன் ஐக்கிய தேசியக் கட்சியினர் தமது போராட்டத்தை கைவிட்டு விட்டதாக தினேஷ் குணவர்த்தன, தமது டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (இ)



# சிறுவர் அரங்கம்

1355

## மலையரசன்!



வியட்நாம் நாட்டில் "டான் கின்" என்று ஒரு பிரதேசம். மலைப்பாங்கான இடம் அது. அங்கு இரு சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர். அவர் களுடைய தாயாரும், தந்தை யும் அடுத்தடுத்துக் காலமா னார்கள். ஆகவே, சகோ தரர்கள் இருவரும், பெற் றோரின் உடைமைகளைப பங்கு போட்டுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று.

தம்பி தன் தாய், தந்தையரை அடக்கம் செய்யப் போயிருந்தான். அண்ணன்காரன் வீட்டிலி ருந்த விலையுயர்ந்த பொருள்களையெல்லாம் ஒளித்து வைத்துவிட்டான்.

சவ அடக்கம் முடிந்து, வீடு திரும்பிய தம்பிக்கு வியப்பான வியப்பாக இருந்தது.

"அண்ணா நம் பெற்றோ ரின் உடைமைகள் எல்லாம் எங்கே? இங்கே ஒன்றையும் காணவில்லையே?" என்றான்.

"இங்கு என்ன இருக்கி றதோ அவை தான் நம் பெற் றோர் விட்டுச் சென்றவை. வெறும் காலி வீடு. எனக்கு மனைவியும், குழந்தைகளும் இருப்பதினால் இந்தக் காலி வீட்டை நான் எடுத்துக் கொள்கி றேன்," என்று கூறி, அந்த வீட்டை யும் தனதாக்கிக் கொண்டான்.

அண்ணன் தம்பியை வஞ்சி த்துக் குடும்பச் சொத்து முழுவ தையும் நெல்வயல், மாடு, கன்று கள் சகலத்தையும் த்னதாக்கிக் கொண்டான். தம்பிக்கு மலை யடிவாரத்தில் சோளம் பயிரிட ஒரு துண்டு நிலத்தையும், ஒரு கிழட்டு நாயையும், ஒரு பூனை யையும் கொடுத்தான்.

தம்பி எதுவும் பேசவில்லை. அண்ணனின் பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டுக் குனிந்த தலையோடு வெளி யேறினான். நாயும், பூனையும் தொடர, மலையடிவாரத்து வறண்ட நிலத்தை நோக்கிச் சென்றான். சோளம் பயிரிட அங்கு போனதும், இந்தத் தரிசு நிலத்தை எப்படி உழுது பயிர் செய்வது என்ற கவலை ஏற்பட்டது. அவனிடமோ எருதுகள் இல்லை. குதிரை யில்லை. கிழட்டு நாயும், பூனையும் களையிழந்து வாடிய அவன் முகத்தைப் பார்த்தபடி நின்றிருந்தன.

தம்பி தலையைச் சொறிந்து கொண்டு ஒரு முடிவுக்கு வந்தான். நுகத் தடியில் நாயையும், பூனை யையும் பூட்டினான். வேறு வழி? ஓட்டினான்?

நாய் குரைத்தது. பூனை முனகிற்று. உழவு முனையோ கரடுமுரடான காய்ந்த பூமி யில் கிரீச்சிட்டது. இந்த விநோதமான காட்சியை நெடுதுயர்ந்த மலை பார்த் துக் கொண்டிருந்தது. அந்த அப்பாவித் தம்பியின் பொறுமை மலையரசனின் மனத்தை இளக்கியது. தன் உடலை சிலிர்த்துக் கொண்டது மலை. தன் புருவத்தை உயர்த்தி யது. தன் பெரிய வாயைத் திறந் தது. பிரம்மாண்டமான தன் வாயால் "அடாடா!" என்று சப்புக் கொட்டியது.

மலை தன் வாயைத் திறந்து சப்புக் கொட்டினால் எப்படி இருக் கும்? கற்பனை செய்து பாருங் கள்! மலைமீதுள்ள பாறைகள் உருண்டு புரண்டன. அந்த கிடுகிடு சத்தத்தினால் கதி கலங்கிப் போனான் தம்பி. மலை அரசனின் குகை போன்ற வாய் திறந்திருப்பதையும், அதன் உள்ளிருந்து ஒளி வீசுவதையும் கண்டு முதலில் பயந்து நடுங் கினாலும், பிறகு தெளிவு பெற்று, அந்தக் குகையை நோக்கி ஒளியை நோக்கி ஓடினான். பாறைகளைப் பற்றியவாறு தட்டுத் தடுமாறி ஏறினான் மலைமீது. மலை அரசனின் பாறைக்கழுத்து, முகவாய், உதடு இப்படி அடுத்தடுத்து ஏறி, மேல் வாய்க்குள் புகுந்தான். அங்கே...

பொன்னும், வெள்ளியும், வைர, வைடூரியங்களும் குவிய லாக குவிந்து கிடந்தன. அவற் றின் ஒளிதான் அப்படிக் கண் களை கூச வைத்தன. இடையி லுள்ள கந்தல் ஆடையை அவிழ்த்தான். அதை மடித்துப் போட்டான். மேலாடையையும் பரப்பினான். அவை இரண்டும் தாங்கும் அளவுக்கு செல்வங் களை அள்ளி மூட்டை கட்டிய வாறு மலை அரசனின் வாய்க் குகையிலிருந்து வெளியேறி னான். அவன் வெளியே வந்த தும் மலை அரசன் "படார்" என்று தன் பெரிய குகை வாயை மூடிக் கொண்டான்.

தனக்கு வந்த அதிர்ஷ்ட த்தை அவனால் நம்பவே முடிய வில்லை. புதையலோடு கிராமம் திரும்பியவன், மலையடி வாரத் தில் தன் நிலத்தில் எளிமை யான ஒரு வீடு கட்டிக் கொண் டான். உழவு மாடுகளையும், நெல வயல்களையும் வாங்கினான். நெல் பயிரிட்டான், உழைத் தான். தன் நாய், பூனையோடு நிம்மதியாக வாழலானான்.

தம்பிக்கு வந்த அதிர்ஷ்டம் பற்றி அண்ணனுக்கு தெரியா மல் இருக்குமா? பேராசையும், பெறாமையும் கொழுந்துவிட்டு எரியலாயிற்று அவன் மனதில்.

ஒருநாள் தம்பியை அழை த்து உபசாரம் செய்து, எப்படி அவனுக்கு இவ்வளவு செல் வம் வந்தது என்று கேட்டான். அண்ணனிடம் மதிப்பும், மரி யாதையும் கொண்ட தம்பி எதையும் மறைக்காமல் எல் லாவற்றையும் கூறினான்.

அடுத்த நாளே, பேராசைக் கார அண்ணன் தன் மனைவி, கொழு கொழு நாய், பூனை யோடு மலையை நோக்கிக் கிளம்பிவிட்டான். கூடவே காளைகள் பூட்டிய இரண்டு பெரிய வண்டிகளையும் கொண்டு சென்றான் மலை யரசனின் புதையல்களை அள்ளிக் கொண்டு வர.

மலையடிவாரத்துக்கு வந்ததும் சோளக் கொல்லை யில் தன் நாயையும், பூனை யும் உழவில் பூட்டி விரட்டி னான் அண்ணன். தின்று கொழுந்த நாயும், பூனையும் அவன் சவுக்கடி தாளாமல் கதறின. இந்தக் காட்சியைக் கண்ட மலையரசன் வயிறு குலுங்க சிரிக்கலானான். மலை மீதிருந்த மரங்களும், பாறைகளும் சரிந்து உருண் டன. மலையரசனின் புருவ மும், மூக்கும் சுருங்க பெரிய வாய் "ஆ" வென்று திறந்தது. வாய்க்குள் இருக்கும் புதைய லின் ஒளி பளிச்சிட்டது. அண் ணன்காரன் உழவை அப்படியே விட்டு விட்டு, மனைவியை இழுத்தபடி ஓடினான். மலையர சனின் திறந்த வாயை நோக்கி. கையோடு கொண்டு வந்திரு ந்த சாக்குப் பைகளில் புதையல் குவியல்களை அள்ளி, அள்ளி நிரப்பிக் கொண்டான். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பத்து என்று சாக்குப் பைகளை நிரப்பியபடி மலை அரசனின் வாய்க்கு உள்ளே, உள்ளே ஏ... ஏ... ஏ... போய்விட்டான்.

மலையரசனின் நகைப்பு, வெறுப்பாக, கோபமாக மாறி யது. அந்த மனிதனின் பேரா சையைக் கண்டு இடி முழக் கம் போல தன் பிரம்மாண்ட மான வாயை மூடிக் கொண் டான் மலையரசன். பேராசை க்கார அண்ணனும், அவன் மனைவியும் மலை அரசனின் வயிற்றுக்குள் சமாதியாயினர்.

மறுநாள் காலை அண்ண னைத் தேடி மலையடிவாரத்து க்கு வந்தான் தம்பி. அங்கே கொழு கொழு நாயும், பூனை யும் காலியான இரு வண்டி களும் மட்டுமே நின்றிருந்தன. வேறு எதுவுமே இல்லை. இப்போதும் தம்பி ஒரு வார்த் தையும் பேசவில்லை. நிமிர் ந்து நெடுதுயர்ந்து நிற்கும் மலையைப் பார்த்தான். மௌனமாக மலையரசன் அந்த நல்ல இதயம் படைத்த தம்பியைப் பார்த்து கண் சிமிட் டினார்.

**பேராசை பெருநஷ்டம் என்பது இதுதான்!**



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1822 - ஹெயிட்டி புதிதாக அமைக்கப்பட்ட டொமினிக்கன் குடியரசை முற்றுகையிட்டது.
- 1885 - முதலாவது ஜப்பானியர் ஹவாய் தீவை வந்தடைந்தனர்.
- 1895 - வில்லியம் மோர்கன் volleyball ஐக் கண்டுபிடித்தார்.
- 1897 - பெனின் மீது பிரித்தானியர் தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1900 - இலங்கையிலும், இந்தியாவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1900 - டேவிஸ் கோப்பை டென்னிஸ் பந்தயம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1904 - போர்ட் ஆர்தர் சமர் ஆரம்பித்தது.
- 1942 - ஐக்கிய அமெரிக்காவில் பகலொளி சேமிப்பு நேரம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1962 - பொதுநலவாய அமைப்பினுள் ஜமெய்க்கா விடுதலை பெற்றது.
- 1965 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்க தாக்குதல் படைப்பிரிவு முதற்தடவையாக தென் வியட்நாமிற்கு அனுப்பப்பட்டது.
- 1969 - போயிங் 747 விமானத்தின் முதற் சோதனைப் பறப்பு மேற்கொள்ளப்பட்டது.
- 1971 - கலிபோர்னியாவில் 6.4 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 1971 - அப்பல்லோ 14 விண்கலம் மூன்று அமெரிக்கர்களுடன் பூமி திரும்பியது.
- 1975 - சோயூஸ் 17 விண்கலம் பூமி திரும்பியது.
- 1986 - ஹேலியின் வால்மீன் சூரியனுக்கு அண்மையில் எட்டரைக் கோடி கி.மீ தூரத்தில் வந்தது.
- 1991 - லித்துவேனியாவில் விடுதலைக்கு ஆதரவாக மக்கள் வாக்களித்தார்கள்.
- 1996 - ஐரிஷ் குடியரசு இராணுவம் தனது 18 மாத யுத்த நிறுத்த உடன்பாட்டினை முறித்துக் கொண்ட சில மணி நேரத்தில் லண்டனில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1737 - தோமஸ் பெய்ன், ஆங்கிலேயெ-அமெரிக்க எழுத்தாளர் (இ. 1809)
- 1773 - வில்லியம் ஹென்றி ஹாரிசன், ஐக்கிய அமெரிக்காவின் 9 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1841)
- 1873 - பம்மல் சம்பந்த முதலியார், தமிழ் நாடகத் தந்தை (இ. 1967
- 1910 - ஜாக்குவஸ் மோனாட், நோபல் பரிசு பெற்ற பிஞ்சு மருத்துவர் (இ. 1976)
(இ. 1986)
- 1940 - ஜே. எம். கோட்ஸி, நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்க எழுத்தாளர்
- 1950 - ஆதி குமணன், மலேசிய எழுத்தாளர் (இ. 2005)
- 1989 - சரண்யா மோகன், இந்தியத் திரைப்பட நடிகை.


### இறப்புகள்

- 1881 - பியோதர் தஸ்தயெவ்ஸ்கி, உருசிய புதின எழுத்தாளர் (பி. 1821)
- 1966 - மு. செல்லையா, ஈழத்துக் கவிஞர் (பி. 1906)
- 1977 - ஜி. ஜி. பொன்னம்பலம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் (பி. 1901)
- 1987 - லூயிஸ் ஹாம்மெட், அமெரிக்க வேதியியலாளர் (பி. 1894)
- 2008 - பாபா ஆம்தே, இந்திய சமூக சேவகர் (பி. 1914)
- 2010 - செல்லையா மெற்றாஸ்மயில், ஈழத்து நாட்டுக் கூத்துக் கலைஞர்
- 2011 - வ. விஜயபாஸ்கரன், எழுத்தாளர்
- 2011 - எஸ். வி. ராமகிருஷ்ணன், எழுத்தாளர்
- 2012 - ஹெப்சிபா ஜேசுதாசன், புதின எழுத்தாளர். (பி. 1925)
- 2013 - அஃப்சல் குரு, இந்தியத் தீவிரவாதி
- 2013 - மலர் மன்னன், பத்திரிகையாளர், எழுத்தாளர்

# யோஷித உள்ளிட்டோர் மீது மேலும் ஐந்து கடும் பிரிவுகளில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பணச்சலவை குற்றச்சாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யோஷித ராஜபக்ஷ உள்ளிட்டோர் மீது மேலும் ஐந்து கடுமையான பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.**



இது தொடர்பான அறிவித்தலை சட்டம், ஒழுங்கு மற்றும் தென் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிவிப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட சீ.எஸ்.என். தொலைக்காட்சி நிர்வாகத்தினர் பணச்சலவை போன்ற குற்றங்களில் மட்டும் தொடர்புபட்டிருக்கவில்லை.

போலி ஆவணங்கள் தயாரித்தல், நம்பிக்கை மோசடி, பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம், சுங்க விதிகள் மீறல் உள்ளிட்ட குற்றங்களிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான குற்றப் பத்திரிகை விரைவில் தாக்கல் செய்யப்படும் என்றும் அமைச்சர் சாகல ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

நாளை மறுதினம் 11ஆம் திகதி யோஷித உள்ளிட்டோர் பிணையில் விடுவிக்கப்படும் சாத்தியம் குறித்து தகவல்கள் பரவியிருந்த நிலையில், அமைச்சர் சாகலவின் அறிவிப்பு அவர்களுக்கு பிணை வழங்கப்படும் சாத்தியத்தை நிராகரிப்பதாக அமைந்துள்ளது. (இ)

## யோஷித விடயத்தில்

# சட்டஒழுங்கை மீறிய கடற்படைத் தளபதி

கடற்படை லெப்டினட் யோஷித ராஜபக்ஷ 70 முறை வெளிநாடு சென்றிருந்த போதிலும் 27 பயணங்களுக்கு மாத்திரமே கடற்படையிடம் அனுமதியை பெற்றிருப்பதாக தெரியவந்துள்ளது.

யோஷித ராஜபக்ஷ கடற்படையின் சட்ட ஒழுங்கை மீறியுள்ள நிலையில், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காத கடற்படை தளபதியும் கடற்படையின் ஒழுக்கத்தை மீறியிருப்பதாக கடற்படையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னாள் கடற்படை தளபதி ராஜபக்ஷவினருக்கு ஆதரவான நபர் என்பதால், யோஷித ராஜபக்ஷவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவில்லை என்றபோதிலும் தற்போதைய ஜனாதிபதி நியமித்துள்ள கடற்படைத் தளபதி ரவிந்திர விஜேகுணவர்தனவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காததால், அவரும் கடற்படை ஒழுக்கத்தை மீறியுள்ளார்.

முன்னாள் மற்றும் இந்நாள் கடற்படை தளபதிகளுக்கு கடற்படையை விட ராஜபக்ஷவினரை காப்பாற்றுவதே முக்கியமானதாக இருப்பதாக கடற்படை அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (இ)

# "சிங்க லே" அமைப்பினை ஏற்றுக்கொள்ள முடியாது

## கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

சிங்க லே அமைப்பினை ஏற்றுக் கொள்ள முடியாது என கொழும்பு ஆயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தலைமையிலான அமைச்சின் அதிகாரிகள் அண்மையில் கர்தினாலை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களை ஒன்றிணைக்க முழுக்கவனம் செலுத்தப்பட வேண்டிய தருணத்தில் மக்களை பிளவடையச்செய்யும் சிங்க லே போன்ற அமைப்புக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

மக்களை பிளவடையச் செய்யும் இந்த நடவடிக்கையை நல்ல நட்வடிக்கையாக ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்க வேண்டியது அவசியமானது.

இலங்கை அடையாளத்தை உறுதி செய்ய வேண்டுமே தவிர, இன சமூகங்களின் அடையாளத்தை உறுதி செய்ய முயற்சிக்கக் கூடாது.

சிங்க லே அமைப்பு 1950 ஆம் ஆண்டுகளில் ஶ்ரீ குழப்பத்தையே நினைவுபடுத்துகின்றது.

வாகனங்களில் ஶ்ரீ என்ற இலக்கம் பயன்படுத்தப்படுவதற்கு வடக்கு தமிழ் மக்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

மூன்று மொழிகளையும் பாடசாலைகளில் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

ஒரு மொழியில் பாடங்களை கற்பிப்பதுடன் ஏனைய இரண்டு மொழிகளையும் கற்க வேண்டியது கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

இந்த நடவடிக்கையானது தேசிய கொள்கையாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

அனைத்து இன மற்றும் சமய மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 627

சுபத்ரா




வர்மலன்




பாலா சர்மா




துளசி




நிஷா




ஜினோ




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# போர்க்கப்பல் இராஜதந்திரமும் இலங்கையின் பாதுகாப்பு மீதான இந்தியாவின் கட்டுப்பாடும்



சீனா தொடர்பான இலங்கை அரசாங்கத்தினதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தீர்மானத்தையும் அறிவிப்பையும் இந்தியா முதலிலேயே எதிர்பார்த்ததன் காரணமாகவே தனது போர்க் கப்பலை கொழும்பிற்கு அனுப்பியிருக்கலாம்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் பாதுகாப்புக் கடப்பாடுகள் மீது கேள்வி களை எழுப்பி, கொழும்பில்' இருந்து வெளியாகும், 'தி ஐலன்ட்' நாளிதழில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் சிங்கள ஆய்வாளரான ரஜீய ஜயவீர. இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.

போர்க்கப்பல் இராஜதந்திரம் என்பது விக்கிபீடியாவில் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

'அனைத்துலக அரசியலில் அல்லது அமெரிக்க வரலாற்றில் 'போர்க் கப்பல் இராஜதந்திரம்' என்பது, ஒரு நாடு தனது நாட்டின் கடற்படை எவ்வளவு பலத்தைக் கொண்டுள்ளது என்பதைக் காண்பிப்பதற்கான நேரடியாக அல்லது மறைமுகமாக பிற நாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தனது போர்க்கப்பல்களை பிறநாடுகளின் கடற்பிராந்தியத்தில் தரித்து நிறுத்துகின்ற செயலாகும்'

1987 ஜூலை 29 அன்று இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது, இந்தியா தனது இரண்டு போர்க் கப்பல்களை கொழும்புக் கடற்பிரதேசத்தில் நிறுத்தியிருந்தது. இலங்கையில் இடம்பெற்ற கலகங்களின் போது இந்தியக் குடிமக்கள் மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஆணையகப் பணியாளர்களைக் காப்பாற்றுவதற்காகவே இவ்விரு போர்க் கப்பல்களும் கொழும்புக் கரையில் தரித்து நிறுத்தப்பட்டுள்ளதாக அப்போது இந்தியா அறிவித்திருந்தது. ஆனாலும் இந்தியாவின் இந்த நகர்வானது உண்மையில் போர்க் கப்பல் இராஜதந்திரமாகும்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்திய - இலங்கை உடன்பாட்டில் கைச்சாத்திட மறுத்திருந்த நிலையில், இலங்கைக்கு அச்சுறுத்தலை விடுக்கும் முகமாகவே இந்தியா தனது இரண்டு போர்க் கப்பல்களையும் கொழும்புக் கடற்பிரதேசத்தில் தரித்து நிறுத்தியிருந்தமை வெளிச்சத்திற்கு வந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியக் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 45,400 தொன் வானூர்தித் தாங்கிக் கப்பலான 'ஐ.என்.எஸ்.விக்ரமாதித்யா' அண்மையில் தனது கன்னிப் பயணத்தை மேற்கொண்டு இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. இது இலங்கையை வந்தடைந்த போது ஜனாதிபதி அதனை வரவேற்று மதிப்பளித்திருந்தார்.

இன்றைய நிலையில் நோக்கும் போது இது ஒரு போர்க்கப்பல் இராஜதந்திரமாக இருக்காவிட்டாலும் கூட, உண்மையில் இந்தியப் போர்க்கப்பலான ஐ.என்.எஸ்.விக்ரமாதித்யாவின் கொழும்பு வருகை இந்தியாவின் போர்க் கப்பல் இராஜதந்திரமே ஆகும்.

குறிப்பாக, ஒக்ரோபர் 2014 இல் சீனாவின் இரண்டு அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததன் பின்னர் அண்மையில் மூன்று சீனப் போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்றுள்ள நிலையில், இந்தியாவின் போர்க் கப்பலும் இலங்கைக்கான தனது கன்னிப் பயணத்தை மேற்கொண்டதானது இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மைத்திரி இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் பின்னர் கூட, சீனக் கப்பல்கள் கொழும்பில் தரித்து நிற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதற்கு இந்தியா தனது அச்சுறுத்தலைக் காண்பிக்கும் முகமாகவே தனது ஐ.என்.எஸ். விக்ரமாதித்யாவைக் கொழும்பிற்கு அனுப்பியதா? இதன்மூலம் இந்தியா தனது நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கத்திற்கும் தனது ஏனைய அயல்நாடுகளுக்கும் வெளிப்படுத்தியுள்ளதா?

இந்தியப் போர்க்கப்பலின் இலங்கைக்கான பயணமானது முன்னர் திட்டமிடப்பட்ட ஒன்றாக இருந்தாலும் கூட, கடந்தவாரம் ரணில் விக்கிரமசிங்க டாவோசில் வைத்து இந்தியாவால் எதிர்க்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத் திட்டமானது தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவது தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானத்தை அறிவித்திருந்ததுடன் தொடர்புபடுத்தினாலும் கூட ஆச்சரியப்பட முடியாது.

ஏனெனில் இலங்கையின் புதிய அரசாங்கமும் சீனாவிற்கும் சீன நிறுவனங்களுக்கும் தனது நாட்டில் முதலீடு செய்வதற்காக வாய்ப்பளித்தால் இது இந்தியாவின் அதிருப்தியைச் சம்பாதிக்கும். ஆகவே இந்நிலையிலேயே இலங்கை அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இந்தியாவும் தனது போர்க்கப்பல் இராஜதந்திரத்தை நகர்த்தியுள்ளது. சீனா தொடர்பான இலங்கை அரசாங்கத்தினதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தீர்மானத்தையும் அறிவிப்பையும் இந்தியா முதலிலேயே எதிர்பார்த்ததன் காரணமாகவே தனது போர்க் கப்பலை கொழும்பிற்கு அனுப்பியிருக்கலாம்.

இதுமட்டுமல்லாது, பாகிஸ்தானிடமிருந்து இலங்கையால் ஜே.எப்-17 போர் விமானங்கள் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தியாவின் இராஜதந்திர நகர்த்தலே பாகிஸ்தானுடன் போர் விமான உடன்பாட்டை மேற்கொள்ளாது இலங்கை இழுத்தடிப்பதற்குக் காரணமாகும்.

ஜனவரி 26 அன்று இந்தியா தனது 67 ஆவது குடியரசு தினத்தைக் கொண்டாடிய போது, இலங்கையிலுள்ள இந்திய உயர் ஆணையகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பில் இந்தியாவின் கடப்பாடு தொடர்பாக உயர் ஆணையாளர் குறிப்பிட்டிருந்தார். 'இந்தியாவும் இலங்கையும் தொடர்ந்தும் இரு நாட்டு இராணுவ வீரர்களுக்கான தொடர்பாடல் மற்றும் பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்ட பலமான பாதுகாப்பு நடவடிக் கைகளில் ஈடுபடு கின்றன' என இந்திய உயர் ஆணையாளர் தனது உரையில் குறிப் பிட்டிருந்தார்.

அதாவது இலங்கையிலுள்ள இந்திய உயர் ஆணையாளர் பிராந்திய இறையாண்மை தொடர்பில் கவனம் செலுத்துவதாக குறிப்பிட்டதானது இந்தியா, இலங்கையிடமிருந்து எதனை எதிர்பார்க்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

எனினும், இவர் இதனைத் தனது உயர் ஆணையகத்திற்கு அப்பால் இலங்கையின் வேறெந்த இடத்தில் தெரிவித் திருந்தாலும் தர்ம சங்கடமான நிலை உருவாகியிருக்கும்.

1970 களிலிருந்து வரலாற்றை நோக்குமிடத்து இலங்கையின் பாதுகாப்பில் இந்தியா தனது கடப்பாட்டை நிறைவேற்றத் தவறியுள்ளதற்கு பல்வேறு எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. இதற்கு நீண்ட விளக்கம் தேவையில்லை.

வடமராட்சி நடவடிக்கை என அறியப்படும் 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் கைவிட வேண்டும் என இந்தியா வற்புறுத்தியதன் காரணமாக, இலங்கையின் உள்நாட்டு யுத்தம் 22 ஆண்டுகள் மேலும் தொடர்ந்தது. ஆகவே இந்த இடத்தில் இலங்கையின் பாதுகாப்பு மீதான இந்தியாவின் ஈடுபாடு எங்கே போனது?

# சட்டமேதை ஜீ.ஜீயின் 39வது சிராத்ததினம்

இன்று தமிழ்த் தேசிய இனம் சொல்லொணா எதிர்பாராத துயரங்க ளுக்குள்ளும் நெருக்கடிகளுக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அமரர் ஜீ.ஜீயின் திறமையையும் வல்லமையையும் அவரது 39ஆவது நினைவு தினத்தில் நன்றிக்கடனாக எடுத்துரைப்பது எமது கடனாகும்.

1970இற்கும் 1976இற்கு மிடையே இலங்கையின் அரசியல் அரங்கில் பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்தன. 1972 இல் குடியரசு அரசியலமைப்பின் அறிமுகம், அரச அடக்குமுறைக்கான எதிர்ச் செயற்பாடாக மாணவர் இயக்கம் தோன்றியமை, பாராளுமன்றத்தின் பதவிக்காலம் வழமைக்கு மாறாக மேலும் இரண்டு வருடங்களால் நீடிக்கப்பட்டமை, தமிழரசுக் கட்சியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் பாராளுமன்றஉறுப்பினர்களானஏ.அமிர்தலிங்கம், எம்.சிவசிதம்பரம் ஆகியோரும் குடியரசு தின வைபவங்களில் பொது மக்கள் கலந்து கொள்வதைத் தடை செய்யும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 1976 மே மாதம் 21 ஆம் திகதி யாழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை என்பன அவற்றுள் முக்கியமானவையாகும்.

அவற்றுள் இரண்டு, அவசர கால விதிகளை மீறி நடந்தமை (அரசிற்கெதிராகச் சதி செய்தமை) என விபரிக்கப்பட்டிருந்தன. அவர்களுக்கெதிராக “ ட்றையால் அற்பார்” வழக்குத் தொடுக் கப்பட்டது. பொது அரங்கில் தனது இறுதிப் பாடலைப்பாட இச்சம்பவம் அவரைக் கொண்டு வந்தது.

தமிழ் மக்களின் விவகாரத்திற்காக முன்னெடுக்கப்படும் போராட்டமொன்றில் பாராட்டுக்குரிய இறுதி வழக்கு ஒன்றில் பதிலளிக்க வேண்டுமென்று அவருக்கிருந்த விருப்பத்துடன் பிணைந்திருந்த இக்கடமைமீதான பொன்னம்பலத்தின் பக்தியானது, பிரயத்தனமின்றி வாதம் புரியுமாறு அவரது சிங்கள நண்பர்கள் சிலர் அவருக்குக் கூறிய முன்யோசனைகள் மீதும் கூட மேலாதிக்கம் செய்து விஞ்சி நின்றது.

1976 செப்டெம்பர் 10ஆம் திகதி அட்பார் மேல் நீதிமன்றமானது அவசரகால விதிமுறைகளின் செல்லுபடித்தன்மை குறித்துப் பிரதிவாதிகள் தரப்பு எழுப்பிய ஆட்சேபனைக்கு ஆதரவளித்ததுடன் த.வி.கூவின் செயலாளர் நாயகமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் அரசுக்கெதிராக துண்டுப்பிரசுரங்களைத் தயாரித்து விநியோகித்த குற்றச்சாட்டிலிருந்து விடுதலையானார்.

வழக்கின் முதலாவது எதிரியான அமிர்தலிங்கம் வழக்கின் முடிவில் விடுதலையான போது, பொன்னம் பலத்தின் ஆற்றலுக்கு மரியாதை செலுத்துகையில், பின்வருமாறு கூறினார்.

வழக்கின்போது, அவசர கால நிலை பிரகடனம் செய்யப்பட்ட விதத்தை நாம் எதிர்க்க வேண்டும் என்பது குறித்து ஜீ.ஜீ. பொன்னம்பலம் எம்மைத் தெளிவுபடுத் தினார். சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் எரிச்சலூட்டிய அவசர காலநிலை வெகுவாக வெறுக்கப் பட்டது. அதன் செல்லுபடித்தன்மைக் கெதி ராக நாம் வாதிட்ட போது எமது விவகாரத்திற்குச் சிங்கள மக்களின் அனுதாபத்தையும் வென்றெடுப்போம் என்ற நம்பிக்கை எமக்கிருந்தது. ஏனெனில் அவர்களுக்காகவும் நாம் போராடிக் கொண்டிருந்தோம்.



அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 39ஆவது சிராத்ததினம் இன்றாகும்.இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

வழக்கை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதியின் மூவரும் 67 பக்கங்களில் ஏகமனதாக வழங்கிய தீர்ப்பில் வழக்கில் குற்றஞ்சாட்டப் பட்டிருப்போரை விசாரிப்பதில் சட்டவாட்சியைத் தம்மால் தொடர்ந்து பிரயோகிக்க முடியாதிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

எவ்விதியின் மூலமாகக் குறித்த நீதிமன்றமானது உருவாக்கப்பட்டதோ,1976 மே மாதம் வர்த்தமானி மூலம் வெளி யிடப்பட்டிருந்த 59 ஆம் இலக்க அவசரகால விதியானது சட்டத்தில் அங்கீ காரத்தையோ அல்லது செல்லுபடித்தன்மையையோ கொண்டிருக்க முடியாது என்றும் அதில் தெரிவித்திருந்தனர்.

அவ்வழக்கை நடத்தி தீர்ப்பை பெற்றபின் 1977 ஆம் ஆண்டு பெப்ரவரி 9ஆம் திகதி பொன்னம்பலம் உயிர் நீத்தார்.

மேலும் முக்கியமான சரித்திர வரலாற்றிலே நடை பெற்ற செயலிலே செய்துகாட்டிய ஆறுமுகநாவலர் பெருமானின் செயல், நாவலரைப் போல் செய்து காட்டிய அவர் வழியிலே செய்கையிலே செய்துகாட்டிய ஒரேயொரு அரசியல் தலைவர் அமரர் ஜீ.ஜீ. பொன்னம் பலமே தான்.

**கிழக்கிலங்கையின் வேளாண்மைப் பணிக்கு நாவலர் பெருமானின் பங்களிப்பு**

வடக்கையும்கிழக்கையும்இணைப்பதோடு தன்னிறைவுப் பொருளாதாரம் உருவாக வேண்டும் என்பதிலும் நாவலர் பெருமான் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டார்.

**நாவலரின் செயலில் தான் வட கிழக்கின் பொருளாதாரத்தையும் இணைப்பையும் இணைத்து அமரர் ஜீ.ஜீ.செயற்பட்டார்**

யாழ்ப்பாணத்தில் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை , கிளிநொச்சியில் இரசாயனத் தொழிற்சாலை, திரு கோணமலை மாவட்டத்தில்புல்மோட்டையில் இல்மனைச் தொழிற்சாலை, வாழைச்சேனையில் காகிதத் தொழிற்சாலை மற்றும் கந்தளாயில் சீனித் தொழிற்சாலை ஆகியவற்றை ஜீ.ஜீ. பொன்னம்பலம் அறுபது வருடங்களுக்கு முன்னர் நிறுவி செயற்பட்டதை தமிழ்பேசும் இனம் என்றும் மறக்க முடியாது.

க.மு.தர்மராசா
பிரசித்த நொத்தாரிசு
சட்ட உதவியாளர்

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நலன்களுக்காகவும் இறுதி வரை உழைத்த மாபெரும் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 39ஆவது சிராத்ததினம் (09.02. 2016) இன்றாகும்.

இங்கிலாந்தில் சட்டப்படிப்பை பூர்த்தி செய்து பட்டம் பெற்று இலங்கை திரும்பிய ஜீ.ஜீ பொன்னம்பலம் சட்டத்துறையில் மிகவும் பிரபல்யம் பெற்ற சட்டத்தரணியாக விளங்கினார். சட்டத்துறையுடன் நின்று விடாது அரசியலிலும் பிரவேசித்து தமிழர்களின் சமுதாய அரசியல் ஏற்றத்துக்காகவும் கடுமையாக உழைத்தவர். 1927 ஆம் ஆண்டு அளவில் இலங்கை உயர்நீதிமன்ற அப்புக்காத்தாக தன்னைப் பதிவு செய்து கொண்ட அவர் அப்போதே அரசியலிலும் ஈடுபட்டார்.

அக்காலத்தில் டொனமூர் கமிஷன் சிபாரிசுகள் இந்நாட்டில் வெளியிடப்பட்டிருந்தன. இச்சிபாரிசுகளை அப்போதைய பெரும் தலைவர் சேர். பொன்.இராமநாதன் ஆட்சேபிப்பதற்காக லண்டன் பயணமானார்.

1929 ஆம் ஆண்டு கொழு ம்பில் சில தமிழ் பிரமுகர்கள் இச் சிபாரிசுகளை ஏற்கும் பொருட்டுத் தீர்மானம் எடுப்பதற்காக கொழும்பில் கூட்டம் கூடினார்கள். அக்கூட்டத்திற்கு வந்திருந்த இளை ஞரான ஜீ.ஜீ பொன்னம்பலம் அக் கமிஷனின் சிபாரிசுகளால் ஏற்பட இருக்கும் தீமைகளை கூட்டிக் காட்டி சிபாரிசுகளை ஏற்கக்கூடாதென்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறிற்று. அன்று தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜீ.ஜீ. பொன்னம்பலம் ,சேர் பொன் இராமநாதன் மறைவிற்குப் பின்பு தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தார். இந்நாடு சிங்கள நாடு என்றும் அது சிங்களவருக்கே சொந்தமென்றும் ஓர் எண்ணம் வலுப்பெற்றிருந்த நிலையில் சிங்கள மகாசபையை பண்டார நாயக்கா தோற்றுவித்தார்.

சிறுபான்மையினரை ஒதுக்கும் திட்டமிட்ட சூழ்ச்சியை உணர்ந்த ஜீ.ஜீ பொன்னம்பலம் தமிழர்களின் குரலாக இருக்கும் பொருட்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸை 29.08.1944 இல் நிறுவினார். அக்கட்சி அன்று தொட்டு தமிழர்களின் பாதுகாவலனாக இருந்து வந்தது. ஜீ.ஜீயின் மறைவின் பின் அவரது தனயன் மாமனிதர் குமார் பொன்னம்பலம் கட்சியின் தலைமையை ஏற்று தமிழினத்திற்காக அருந்தொண்டு ஆற்றிவந்தார்.

அமரர் ஜீ.ஜீ 1939 இல் அரச சபையில் சமநிலைப் பிரதிநிதித்துவம் பற்றிய தமது உரையில் கூறியதாவது,தமிழ்ச் சமூகத்தின் நிலைப்பாடு என்ன? எமது நிலைப்பாடு இது தான் என நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். இந்நாட்டின் பூர்வீகக் குடிகளாக நாம் இங்கு வாழ்ந்து வந்திருக்கின்றோம். தமிழ் சமூகத்தின் ஒரு கிளையினர் சிங்களவர்களை விட நீண்டகாலம் இங்கு வாழ்ந்து இருக்கின்றனர்.

இதுவே எமது தாயகம். அரசியல் ரீதியாகவும் வேறு வகையிலும் நிரந்தர உரித்துக்களை கோருவதற்கு சிங்கள மக்களுக்கு உள்ள அதே உரிமை எமக்கும் உண்டு. நாம் வேண்டப்படாத அந்நியர்களாக நடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாம், மத்திய ஐரோப்பாவின் நாசி நாடுகளில் யூதர்களைப் போன்று “கெட் டோக்கலில்” பிரித்து நடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

1945 இல் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் ஜீ.ஜீ பொன்னம்பலம் சோல்பரிக் கமிஷனர் முன் தோன்றி சிறுபான்மை மக்களின் நிலையை விளக்கியதோடு சமபிரதிநிதித்துவக் கோட்பாட்டை முன்வைத்தார்.

சிங்களவருக்கும் ஏனைய சிறுபான்மை இனத்தவருக்கும் பாராளுமன்றத்தில் சமபலம் இருக்க வேண்டும் என்பதே இக்கோட்பாடாகும். தமிழர்களுக்கு வரப் போகும் இடர்களை முன்கூட்டியே அறிந்த படியால் அவை வராமல் தடுப்பதற்காக இக்கோட்பாட்டை முன்வைத்தார்.

மிகத் திறமையான குற்ற வியல் சட்டத்தரணியாக திகழ்ந்த இவர் றஞ்சனி டக்ஸிகப் வழக்கில் இங்கிலாந்தில் இருந்து வருகை தந்து சாட்சியமளித்த கைவிரல் அடையாள நிபுணரை குறுக்கு விசாரணை செய்ததைத் தொடர்ந்து கைவிரல் அடையாளம் பற்றிய சட்டமே திருத்தியமைக் கப்பட்டது.

தற்போதைய அரசாங்கம் புதிய அரசியல் சாசன மொனறை அறிமுகம் செய்வது பற்றி சிந்திக்கும் இவ் வேளையில் ஜீ.ஜீ பொன்னம்பலம் சோல்பரி கமிஷன் முன் தோன்றி ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருக்கும் சிபாரிசுகளையும் கருத்திலெடுத்து ஆராய்வது தமிழ் பேசும் மக்களது நலன் சார்ந்த மிகவும் ஆரோக்கியமான விடயமாக இருக்குமென்று நான் கருதுகினறேன்.

அப்பாத்துரை விநாயகமூர்த்தி
சிரேஷ்ட சட்டத்தரணி
முன்னாள்தலைவர்-அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

# தமிழ் சினிமா வரலாறு

95

## ஏவி.எம். மின் வேதாள உலகம் லலிதா- பத்மினி நாட்டிய நாடகம்

“நடனம்ஆடினால் போதும்” என்று கூறி, ஒப்பந்தம் செய்து கொண்டார்.

நடனக்கலையில் அகில இந்தியப் புகழ் பெற்ற உதய சங்கரிடம் நடனப்பயிற்சி பெற்று, அவர் எடுத்த “கல்பனா” என்ற நடனப் படத்தில் ஆடியவர்களை லலிதா-பத்மினி. அவர்களுடைய “பாம்பாட்டி நடனம்”, வேதாள உலகத்தில் இடம் பெற்றது.

பாம்பாட்டியாக பத்மினியும், பாம்பாட்டி மனைவியாக லலிதாவும் ஆடினார்கள்.

இத்துடன் “பவளக்கொடி” இசை நாட்டிய நாடகமும் இடம் பெற்றது. இதில் லலிதா- பத்மினியுடன் குமாரி கமலாவும் ஆடினார்.

1948 ஒகஸ்டு மாதம் வேதாள உலகம் வெளி வந்தது. “நாம் இருவர்” போல மகத்தான படம் இல்லையென்றாலும், வெற்றிப் படமே. மாயாயாலக் காட்சிகளும், நாட்டிய நாடகங்களும் ரசிகர்களை கவர்ந்தன.

ஸ்டூடியோவுக்கு சோதனை

ஏவி.எம். படங்களுக்கு கிடைத்த வெற்றியைப் பார்த்தார் தேவகோட்டை ஜமீன்தார். ஸ்டுடியோ வாடகையை உயர்த்தினார். அதுவரை 3 ஆயிரம் வாடகை வாங்கி வந்த அவர், “இனிமாதம் 10 ஆயிரம் கொடுங்கள். இல்லாவிட்டால் காலி செய்யுங்கள்” என்று கூறி விட்டார்.

இதற்கிடையே உலகப்போர் முடிவடைந்து, சென்னையில் மின் சாரம் கிடைக்கக் கூடிய நிலை உருவாகியது.

எனவே, ஸ்டுடியோவை சென்னைக்கு மாற்ற தீர்மானித்தார், ஏவி.எம்.

அவருடைய செயலாளரை சென்னைக்கு அனுப்பி, தகுந்த இடம் பார்க்கச் சொன்னார்.

சென்னையில் ஸ்டுடியோ தொடங்க இருப்பது குறித்து, ஜெமினி அதிபர் எஸ்.எஸ்.வாசனை ஏவி.எம். சந்தித்து, ஆலோசனை கேட்டார்.

அப்போது, தமிழ் “சந்திரலேகா” ரிலீஸ் ஆகியிருந்த நேரம். 3 வருட உழைப்பையும், 30 இலட்சம் ரூபாய் பணத்தையும் வாசன் முதலீடு செய்திருந்தார். வெற்றிப்படமாக அமைந்த போதிலும், லாபம் வருமா என்று சந்தேகப் பட்டார்.

எனவே, சென்னையில் ஸ்டுடியோ ஆரம்பிக்க இருப்பதாக ஏவி.எம். கூறியதும், “ உங்களைப் போன்றவர்கள் எடுத்து நடத்துவதானால், என் ஸ்டூடியோவையே தந்து விடுகிறேன்” என்றார்.

அதற்கு ஏவி.எம். “உங்கள் ஸ்டுடியோ மவுண்ட் ரோட்டில் (அண்ணா சாலை) நல்ல இடத்தில் இருக்கிறது. அதில் இருக்கும் சாமான்கள் ஏராளம். அவ்வளவையும் வாங்க என்னிடத்தில் பணம் இல்லை கமரா ரெக்கோடிங் மெசின் எல்லாம் என்னிடத்தில் இருப்பதால் எனக்கு இப்போது தேவை காலி இடம்தான். இப்படி நீங்கள் என் மீது ஒரு அபிமானம் வைத்து சொன்னதிற்கு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்” என்றார்.



வடபழனியில் 10 ஏக்கர் நிலம்

வடபழனியில், கோவிலுக்கு மேற்கே சுமார் இரண்டு பர்லாங்கு தூரத்தில் 10 ஏக்கர் நிலம் காலியாக இருந்தது.

முஸ்லிம் ஒருவர், தோல் கிடங்கு வைத்திருந்த இடம் அது. இந்தியா- பாகிஸ்தான் பிரிவினையின் போது, அவர் அந்த இடத்தை அப்படியே விட்டு விட்டு பாகிஸ்தானுக்குச் சென்று விட்டார்.

அகதியின் சொத்து என்பதால் அது குறைந்த விலைக்கு கிடைக்கும் என்று ஏவி. எம். முக்கு தகவல் கிடைத்தது. உடனே, 10 ஏக்கர் நிலத்தையும் 37 ஆயிரத்து 500 ரூபாய்க்கு வாங்கினார்.

காரைக்குடியிலிருந்து வந்த ஏவி.எம். ஸ்டுடியோ இந்த இடத்துக்கு மாறியது.

லாபரெட்ரி, பிரிவியூ தியேட்டர் ஆகியவையும் அமைக்கப்பட்டன. நடிகர்- நடிகைகள் தங்குவதற்கும், அலுவலகங்களுக்கும், 20 கீற்றுக் கொட்டகைகள் போடப்பட்டன.

(தொடரும்)

# போர்க்கப்பல் இராஜதந்திரமும்...

(18 ஆம் பக்கத்தில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி....)

...எமது நாட்டு இராணுவ வீரர்களுக்கு யுத்தத்தின் இறுதி சில ஆண்டுகளில் ஆயுதப் பயிற்சிகள் மற்றும் புலனாய்வு ஆதரவை இந்தியா வழங்கிய போதிலும், மூன்று பத்தாண்டுகளாக ‘போர் ஆயுதங்களை’ விற்பனை செய்ய மறுத்ததானது எந்த வகையில் இலங்கையின் பாதுகாப்பில் இந்தியா கரிசனை கொண்டுள்ளது எனக் கருத முடியும்.

2000 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தின் முன்னரங்குகள் போரின் பிடிக்குள் சிக்குண்டிருந்த வேளையில், இதில் அகப்பட்டுத் தவித்த இலங்கைப் படையினரை மீட்டெடுக்க உதவுமாறு சந்திரிக்கா அரசாங்கம் இந்தியாவைக் கோரிய போது, இதற்குப் பதிலாக நிதியுதவியை மட்டும் வழங்குவதாக இந்தியா பதிலளித்தது.

இந்தவேளையில், எல்லா நேரங்களிலும் இலங்கைக்கு உதவுகின்ற பாகிஸ்தான் உதவமுன்வந்தது. தன்னிடமிருந்த பல்குழல் பீரங்கிகளை பாகிஸ்தான் இலங்கைக்கு வழங்கி யாழ்ப்பாண முன்னரங்கில் இடம்பெற்ற யுத்தத்தில் இலங்கைத் தரப்பைப் பாதுகாத்தது. இதற்குப் பின்னரே இந்த ஆயுதங்களுக்கான ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவுகள் போன்றன தீர்வு செய்யப்பட்டன. இது யாழ்ப்பாண முன்னரங்கில் அகப்பட்ட ஆயிரக்கணக்கான இலங்கை இராணுவத்தினரைக் காப்பாற்ற உதவியது.

இதேபோன்று, செக் குடியரசைப் பின்னர் ஆயுத உதவிகளை இலங்கைக்கு வழங்கியிருந்தது. யாழ்ப்பாண நுழைவாயிலை தமிழீழ விடுதலைப் புலிகள் மீளக்கைப்பற்றுவதன் மூலம் வானம் இடிந்து விழாது என சில இந்தியத் தலைவர்கள் தெரிவித்திருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமார துங்கவின் ஆட்சிக் காலத்தில், சீனாவிடமிருந்து முப்பரிமாண ரேடர் கருவியை இலங்கை கொள்வனவு செய்ய விரும்பிய போதும் அதற்கு இந்தியா தடை விதித்தது. இதன்பின்னர், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் சீனாவிடமிருந்து முப்பரிமாண ராடர் கருவி கொள்வனவு செய்யப்பட்டது.

இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பில் இந்தியா எவ்வாறான கடப்பாட்டுடன் நடந்து கொண்டுள்ளது என்பதை இவ்வாறான சில எடுத்துக் காட்டுகள் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

இந்தியாவால் இலங்கைக்கு போதியளவு உதவிகள் வழங்கப்படாததை எண்ணி வருந்துவதாக ஒக்ரோபர் 2014 இல், இலங்கைக்கான முன்னாள் இந்திய உயர் ஆணையாளர் தெரிவித்திருந்தார். இவர் தனது நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இலங்கையை நோக்கி இந்தியாவின் உறுதிப்பாடு மற்றும் நல்லெண்ணத்தை அதிகரிக்க முயற்சித்தார். ஆனால் கெட்ட வாய்ப்பாக, இந்தியாவோ அல்லது அதன் தூதுவர்களோ, கடந்த காலத்திலும் சரி தற்போதும் சரி, இந்தியா தொடர்பான இலங்கையின் பெரும்பான்மை சாதாரண மக்களின் உண்மையான உணர்வுகளை வரவேற்கவும் பாராட்டவும் தவறியுள்ளனர.



இந்தியாவால் இலங்கையில் மேற் கொள்ளப்படும் தொடருந்துப் பாதை மற்றும் வீட்டுத் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் இந்தியாவால் இலங்கைக்கு ஆற்றப்பட்ட அநீதியைப் போக்க முடியாது என இலங்கையர்கள் கருதுகின்றனர். இவ்வாறான ஒரு நிலையில், இலங்கையர்களின் பெரும்பாலானவர்களால் இந்தியா சந்தேகக் கண்ணுடனேயே நோக்கப்படும்.

இந்திய- இலங்கைப் பாலம், முழுமையான பொருளாதார கூட்டு உடன்படிக்கை போன்றன தொடர்பில் இன்றும் பெரும்பாலான இலங்கையர்கள் மத்தியில் அதிருப்தியும் எதிர்ப்பும் காணப்படுகின்றன.

சில இந்திய எழுத்தாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது போன்று, இந்தியா தொடர்பான ஐயப்பாடு பெரும்பாலான சாதாரண இலங்கையர்களால் மட்டுமன்றி, தென்னாசியா முழுவதிலும் பரவலாக எழுப்பப்படும் வினாவாகக் காணப்படுகிறது.

மனிதன் அடையக்கூடிய உயர்ந்த பொருள் அறிவன்று. அறிவுடன் கூடிய அனுதாபமே ஆகும். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தமிழர்களை ஏமாற்றி விடக்கூடாது

ஈழத்தமிழ் மக்களின் அவலங்களை புரிந்து கொள்வதற்கான மனிதங்கள் இன்னமும் எங்களிடம் வந்து போகவில்லை என்று சொல்லும் அளவிலேயே நிலைமை உள்ளது.

உள்நாட்டின் ஆட்சியாளர்கள் சரி, வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சரி யார் எங்களிடம் வந்தாலும் அவர்களை நாம் நம்பும் அளவில் அவர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக-நம்பிக்கை ஊட்டக்கூடியவர்களாக இருக்கவில்லை என்பதே உண்மை.

இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வடபுலத்துக்கு விஜயம் செய்கின்றபோது, எங்கள் மக்கள், தங்களின் வாழ்விடங்களில் குடியிருப்பதற்கு ஆவன செய்யுமாறு; தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு; காணாமல் போனவர்களை கண்டறியுமாறு; கெஞ்சி மன்றாடியும் எந்தப் பிரயோசனமும் இல்லை என்றாயிற்று.

நாம் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக அரசியல் தீர்வு காணப்படும் என்று தேர்தல் காலங்களில் உத்தரவாதம் அளிப்பவர்கள், ஆட்சிப்பீடம் கிடைத்துவிட்டால் தமிழ் மக்களுக்கு வழங்கிய உத்தரவாதங்களை மறந்து விடுவதுதான் முதலில் செய்வதாக உள்ளது.

தேர்தல் காலங்களில் உத்தரவாதம் தருவோர் ஆட்சிப்பீடம் ஏறியதும் எதிர்க்கட்சி அனுமதிக்காது; பௌத்த பீடம் ஏற்றுக் கொள்ளாது என்று கூறுவதெல்லாம் மிகப்பெரும் கபடத்தனம் என்பதை சர்வதேச சமூகம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை மண்ணின் பூர்வீகக் குடிகளாகவும்-ஆட்சிக்குரியவர்களாகவும் இருக்கக்கூடிய தமிழ் மக்களின் உரிமைகளை-அவர்களின் சுதந்திரத்தை பெரும்பான்மை இனம் சார்ந்தவர்கள் தடுப்பது என்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

ஆக, இத்தகைய நிலைமைகளை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளுதல் என்ற விடயத்தில் இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டுப்பிரதிநிதிகள், இலங்கையில் இருக்கக்கூடிய வெளிநாட்டு இராசதந்திரிகளின் புரிதல் என்பது இங்கு முதன்மை பெறுகிறது.

நேற்று முன்தினம் (07.02.2016) யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் ஹுசைன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பில் சர்வதேச கொள்கைகள் இடம் தராது எனக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் அக் கொள்கை ஏற்புடையதாயினும் இலங்கை என்ற நாட்டுக்குள் கடைப்பிடிக்கப்படுகின்ற பொது விடயங்களை வலியுறுத்துவதில் சர்வதேச கொள்கைகளை முன்னிலைப்படுத்த வேண்டிய தேவை இல்லை என்பதே நம் தாழ்மையான கருத்து.

அதாவது இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார்.

ஆக, சரத் பொன்சேகாவுக்கு பொதுமன்னிப்பு வழங்க முடியும் என்றால் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்குவதை வலியுறுத்துவதில் தவறில்லை.

அதேநேரம் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் அரசோடு சேர்ந்து செயற்படுகின்றபோது அவர்கள் மீது எந்தவித சட்ட நடவடிக்கைகளும் எடுக்காமல் விட முடியுமாயின், தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் இலங்கை அரசிடம் கேட்பதில்-வலியுறுத்துவதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை.

ஆக, இலங்கைக்கு-வடபுலத்துக்கு வருகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தமிழ் மக்களை ஏமாற்றுவதாக நடந்து கொள்ளக்கூடாது என்பதே நம் தாழ்மையான கருத்து.

# கம்லத்தை சட்ட மா அதிபராக நியமிக்க அரசாங்கம் அச்சம்!

## ஊடக சந்திப்பில் உதய கம்மன்பில கருத்து

சொலிசிட்டர் ஜெனரல் சுஹத கம்லத்தை சட்டமா அதிபராக நியமிப்பதற்கு அரசாங்கம் அஞ்சுவதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் கடந்த ஜனவரி 25 ஆம் திகதி ஓய்வு பெற்றார். வெற்றிடமாக இருக்கும அந்த பதவிக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணிபுரியும் சிரேஷ்ட அதிகாரி சுஹத கம்லத் அரசியல்வாதிகளின் முன்னால் அடிப்பணியாதவர் என்பதால் அரசாங்கம் அவரை சட்டமா அதிபராக நியமிக்க அஞ்சுகிறதா?என அவர் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போது உயர்நீதிமன்றத்தில் நடந்து வரும் அடிப்படை உரிமை மீறல்கள் வழக்குகள சட்டவிரோதமானவை. இதனால், உடனடியாக சட்டமா அதிபர் நியமிக்கப்பட வேண்டும்.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மூலம் ஏற்படுத்தப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் போலியானவையாக தெரிகின்றன.

ஹிருணிகா மற்றும் யோஷித ராஜபக்ஷ விவகாரங்களில் பொலிசார் இரண்டு விதமாக நடந்து கொண்டமை இதற்கு சிறந்த உதாரணமாகும் எனவும் உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

# இந்தியப் பொலிஸாரின் குற்றச்சாட்டு நிராகரிப்பு

இலங்கையில்சட்ட விரோத சிறுநீரகத் தொகுதி விற்பனையில் ஈடுபட்டிருந்ததாக இந்திய பொலிஸாரால் குற்றம் சுமத்தப்பட்ட ஆறு இலங்கை வைத்தியர்களும் இந்த குற்றச்சாட்டுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் ஆராயும் முகமாக அமைக்கப்பட்ட குழு அமைச்சரிடம தமது அறிக்கையை சமர்ப்பித்தது.

இந்த நிலையில் குறித்து ஆறு பேரில் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்கள் வைத்தியர்கள் அல்லர் என்றும் அவர்களும் சட்டவிரோத சிறுநீரகத் தொகுதி விற்பனையுடன் தொடர்பு கொண்டவர்கள் இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் சிறுநீரக விற்பனையில் ஈடுபட்டதாக இந்திய பொலிஸாரினால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட இலங்கையின் வைத்தியசாலைகள் உண்மையானவை என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ)

# மெய்வல்லுநர் போட்டி

யாழ்.கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு லெவின் ஸ்ரார் மைதானத்தில்நடைபெறவுள்ளது.

அதிபர் ந.கந்தவனச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக மாவட்ட விளையாட்டுப்பயிற்றுநர் காசிநாதன்-சுதாகரன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராகபாடசாலையின் பழைய மாணவன் சிற்றம்பலம் ஸ்ரீஜீவா கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி ரோகினி இராஜதுரை கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

➤ ➤ ➤ ➤ ➤ ➤

யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா கலந்துகொள்வதுடன்கௌரவ விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன்கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில் 10.02.2016 புதன் கிழமை யாழ். பிரதேசத்தில் நாச்சிமார் கோவிலடி, இலந் தைக் காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடிய காடு, அம்பலவாணர் வீதி, உடுவில் பிரதேச செயலக வீதி, சபாபதிப்பிள்ளை வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல் தோட்டம் கிராமம், அறவந்தலாவ, அறவந்த லாவ-02, Track 07, பழையனூர் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல் குளம், சூரியகட்டைக் காடு ஆகிய பிரதேசங்களிலும். மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## பிரகீத் எக்னெலிகொட கடத்தல்

# மேலும் ஒரு புலனாய்வு அதிகாரியும் கைது!

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போகச் செய்யப்பட்டது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இந்த இராணுவ அதிகாரி கெக்கிராவ பகுதியைச் சேர்ந்தவர் என்றும், கிரித்தல இராணுவ முகாமில் பணியாற்றியவர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட இந்த புலனாய்வு அதிகாரி நேற்று முன்தினம் ஹோகம நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

பிரகீத் எக்னெலிகொட கடத்தல் தொடர்பாக, ஏற்கெனவே ஆறு இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மேல் மாகாண சபை அமைச்சராக சுமித் லால் மெண்டிஸ் பதவியேற்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்மேல்மாகாண சபை உறுப்பினர் சுமித் லால் மெண்டிஸ், மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த இவர் சுகாதார அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்.

மேல் மாகாண சுகாதார அமைச்சராக பதவி வகித்த ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் நிஷந்த ஸ்ரீவர்ணசிங்க அமைச்சுக்கான வரவு செலவுத்திட்டம் தோல்வியடைந்ததன் காரணமாக அவர் பதவி இழந்தார்.

இதனிடையே மேல் மாகாணசுகாதார அமைச்சர் பதவி பீல்ட் மார்ஷல் சரத் பொனசேகாவின் ஜனநாயக கட்சியின் மாகாண சபை உறுப்பினரான அருண தீபால் என்பவருக்கு வழங்கப்படவிருப்பதாக முன்னதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பெருந்தொகைப் பணம் பறிமுதல்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்லப்படட பெருந்தொகை வெளிநாட்டு நாணயங்கள் விமான நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. குறித்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

சிங்கப்பூர் சென்ற விமானத்தின் பயணியொருவரை நேற்று அதிகாலை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்ட போது அவர் 30 ஆயிரம் யூரோ நாணயத்தாள்களை பதுக்கி வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, குறித்த யூரோ நாணயத்தாள்களை பறிமுதல் செய்த சுங்கத்துறையினர், சந்தேகநபரையும் கைது செய்துள்ளனர். 55 வயதுடைய குறித்த சந்தேகநபர் ஒரு இலங்கையர் என தெரியவந்துள்ளது. அவரிடமிருந்து பறிமுதல செய்யப்பட்ட யூரோ நாணயங்களின் இலங்கைப் பெறுமதி 50 இலட்சம் ரூபாய் என தெரிவிககப்பட்டுள்ளது. (இ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



மனத்தில் கோபம் பேரலையாகப் பொங்கி எழும்போது நாம் அதை எப்படி அடக்குவது? எதிரான ஓர் அலையை எழுப்புவதன் மூலம்தான் அன்பை நினையுங்கள்.

எப்போதுமே நினைவில் வைத்துக் கொள். முற்றி லும் ஒழுக்க வழியில் நில், தைரியமாக இரு. இதயம் பரிபூரணத் தூய்மையுடன் திகழட்டும். முழுமையாக நீதிவழியில் செல். உயிரே போனாலும் தைரியத்தைக் கைவிடாதே. மதக் கொள்கைகளைப் பற்றியெல்லாம் மூளை யைக் குழப்பிக் கொள்ளாதே.


நாம் துயருறுவதற்கு நாம், நாமேதான் காரணம், வேறு யாரும் அல்ல; நாமே விளைவுகள், நாமே காரணங்கள்.

எதை நினைக்கிறீர்களோ, அதுவாக ஆவீர்கள். உங்களைப் பலவீனர்கள் என்று நினைத்தால் பலவீனர்கள் ஆவீர்கள். வலிமையானவர்களாக நினைத்தால் வலிமை மிக்கவர்கள் ஆவீர்கள். தூய்மையற்றவர்களாக எண்ணினால் தூய்மையற்றவர் ஆவீர்கள். தூய்மையானவர்களாக எண்ணினால் தூயவர் ஆவீர்கள்.

மனத்தூய்மை பிறருக்கு நன்மை செய்வது- இதுவே எல்லா வழிபாடுகளின் சாரமாகும்.

# பொற்பதி இந்துவின் வெற்றிக்கிண்ணம் ஞானம்ஸ் வசம்









பொற்பதி விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்திய 7 பேர் 5 ஓவர்கள் கொண்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி இணுவில் கலைஒளி மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட ஞானம்ஸ் 27 ஓட்டங்களால் வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்துடன் 20 ஆயிரம் ரூபாய் பணப்பரிசிலையும் தனதாக்கியது.

ஆட்டநாயகனாக சுகந்தனும் தொடர் ஆட்ட நாயகனாக ரஜீபனும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

## புத்தூர் ஞானவைரவர் வி. கழக மாவட்ட ரீதியிலான துடுப்பாட்டம்

### இறுதிப்போட்டியில் இளந்தளிர் வி.கழகம்



புத்தூர் ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட யாழ. மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட துடுப்பாட்ட போட்டியில் இளந்தளிர் விளையாட்டுக்கழகம் அணியை 3 இலக்குகளால் வெற்றியடைந்தது.

இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் 8 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 74 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இளந்தளிர் விளையாட்டுக்கழகம் 7.4 ஓவர்களில் 6 விக்கெட்டினை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. (க)

## இருபது- 20 கிரிக்கெட் போட்டி இந்தியா-இலங்கை இன்று பலப்பரீட்சை



சன்டிமால் தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி மூன்று 20 ஓவர் போட்டிகளில் விளையாடுவதற்காக இந்தியா வந்துள்ளது. இந்தியா - இலங்கை அணிகள் மோதும் முதல் 20 ஓவர் ஆட்டம் புனேயில் இன்று (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது.

டோனி தலைமையிலான இந்திய அணி சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று 20 ஓவர் போட்டியிலும் வென்று ஒயிட் வாஷ் செய்தது. இதனால் சொந்த மண்ணில் இலங்கையை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கையில் உள்ளது. ஆசிய கோப்பை மற்றும் உலக கோப்பைக்கு முன்பு இந்த தொடர் நடைபெறுவதால் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அவுஸ்திரேலியாவில் கலக்கிய அதிரடி வீரர் வீராட்கோலிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு பதிலாக புது முக வீரர் நெகி இடம்பெற்றுள்ளார்.

இதே போல் ரகானே, மணீஷ் பாண்டே, புவனேஸ்வர் குமார் ஆகியோரும் அணிக்கு திரும்பி உள்ளனர். இவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 20 ஓவர் போட்டியில் ஆடவில்லை. ரோகித்சர்மா, துடுப்பாட்டத்தில் மிகவும் நல்ல நிலையிலுள்ளார். இதே போல் கப்டன் டோனி, ரெய்னா, யுவராஜ்சிங் போன்ற சிறந்த துடுப்பாட்டக் காரர்களும் உள்ளனர். அவுஸ்திரேலிய பயணத் தில் சிறப்பாக வீசிய ஜஸ்பிரீத் பும்ரா மீது எதிர்பார்ப்பு இருக்கிறது. அஸ்வின், நெக்ரா போன்ற சிறந்த பவுலர்களும் உள்ளனர்.

இலங்கை அணியின் அதிரடி தொடக்க வீரர் தில்சான் நாளைய ஆட்டத்தில் காயம் காரணமாக விளையாடவில்லை. எஞ்சிய போட்டியில் அவர் அணியோடு இணைகிறார். கப்டன், சண்டி மால், கபுகேந்திரா, திசாரா பெனரரா போன்ற முன்னணி வீரர்கள் அந்த அணியில் உள்ளனர். இரு அணிகளும் கடைசியாக 2014 ஆம் ஆண்டு உலக கோப்பை இறுதிப் போட்டியில் (டாக்கா) மோதி இருந்தது. இதில் இலங்கை 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருந்தது.

இரு அணிகளும் இன்று மோத இருப்பது 7 ஆவது போட்டியாகும். இரு அணிகளும் தலா 3 ஆட்டத்தில வெற்றி பெற்று இருந்தது. இன்றைய ஆட்டம் இரவு 7.30 மணிக்கு நடக்கிறது. ஸ்டார்ஸ்போர்ட்ஸ், தூர்தர்சனில் இந்தப் போட்டி நேரடியாக ஒளிப்பரப்பு செய்யப்படுகிறது. (க)



முளளயவளை விததியானநதாக கலலூரியின இலலமெயவலலுநா போடடி அணமையில நடைபெறற போது...

(க-301)

# கச்சதீவு அந்தோனியார் திருவிழா

## பல ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

### பங்குத்தந்தை அன்ரனி ஜெயரஞ்சன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவில் இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ள நிலையில் அவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ் நெடுந்தீவு பங்குத் தந்தை அன்ரனி ஜெயரஞ்சன் தெரிவித்துள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்றையதினம் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பங்குத் தந்தை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் 21-ம் திகதி இடம்பெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் இரண்டு நாடுகளிலிருந்தும் கலந்து கொள்ளவுள்ள பக்தர்களுக்கான உணவு வசதிகள் மற்றும் குடிநீர், சுகாதார வசதிகள் முப்படையினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையிலிருந்து செல்லவுள்ள பக்தர்கள் எதிர்வரும் 20-ம் திகதி சனிக்கிழமை காலை 4 மணி முதல் நண்பகல் 1.30மணி வரை யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து குறிகட்டுவன் வரை பேருந்தில் பயணித்து அங்கிருந்து படகு மூலம் கச்சதீவு நோக்கி பயணிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் வரும் 20-ம் திகதி மாலை 4மணிக்கு கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி 21-ம் திகதி ஞயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலி யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கடற்படையினர், பொலிஸார், பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (செ-9)

## நடத்துநர் - பயணிகள் பேருந்தில் முரண்பாடு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை - கொழும்பு சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தின் நடத்துநருக்கும் பேருந்தில் பயணித்த பயணிகள் சிலருக்கும் இடையில் நேற்றிரவு வாய்த்தர்க்க முரண்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளது.

நேற்றிரவு 8 மணியளவில் மேற்படி சேவையை கொழும்பு நோக்கி ஆரம்பித்த பேருந்தில் வவுனியாவுக்கான பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் சிலர் நெல்லியடியிலிருந்து ஏறியுள்ளனர்.

பயணிகள் இருக்கையில் வவுனியா பயணிப்போர் இருந்திருந்தவேளை கொழும்பு நோக்கி பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் சிலரும் பேருந்தில் ஏறியுள்ளனர்.

அவ்வேளையில் வவுனியா பயணிகளை நடத்துநர் எழுந்து இடமளிக்குமாறு கூற நடத்துநருக்கும் பயணிகளுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

மேற்படி இருக்கை ஆசனங்களை கொழும்பு பயணிப்பவர்கள் முன்பதிவு செய்திராத நிலையில் எப்படி எம்மை நடத்துநர் எழுந்து செல்லுமாறு கூறமுடியும் என வவுனியா பயணிகள் கடிந்து கொண்டதுடன், நடத்துநர் பக்கச்சார்பாக நடப்பதாகவும் குற்றஞ்சாட்டினார்.

தொடர்ந்த பயணத்தில் இருக்கைகளுக்கான வாய்ப்பு கொழும்பு நோக்கிய பயணிகளுக்கும் வவுனியா நோக்கிய பயணிகளுக்கும் கிடைத்த நிலையில் மேற்படி முரண்பாடு முடிவுக்கு வந்திருந்தது. (செ)

# படையினரை போர்க்குற்றவாளிகளாக மாற்றுவதற்கு இடமளிக்கமாட்டோம்

## கூட்டு எதிர்க்கட்சியிலிருந்து பந்துல ஆவேசம்

(கொழும்பு)

நாட்டில் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்து, மக்களுக்கு சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்த படையினரை போர் குற்றவாளிகளாக மாற்ற இடமளிக்க முடியாது என கூட்டு எதிர்க்கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பந்துல இதனை கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசைனின் இலங்கை விஜயத்தையும் அவரை சந்திக்க சந்தர்ப்பம் வழங்காமை ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கொழும்பு ஐநா அலுவலகத்தில் கடிதம் ஒன்றை கையளித்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அடையாளம் தெரியாத நபர்கள் வழங்கும் சாட்சிகளின் அடிப்படையில் படையினர் மீது குற்றம் சுமத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

விடுதலைப் புலிகளை விடுதலை செய்து, இராணுவத்தினரை குற்றவாளிகளாக்கும் செயற்பாடுகளை உண்மையில் எதிர்க்க வேண்டும் எனவும் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் 12 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்ட பந்துல குணவர்தன,

புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப்பட்டவர்களே விடுதலை செய்யப்பட்டதுடன் தவறு செய்தவர்கள் தொடர்ந்தும் சிறைகளில் அடை



க்கப்பட்டதாக கூறியுள்ளார்.

அதேவேளை இங்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம, எமது பிரச்சினைகளை நாம் தீர்த்து கொள்ளலாம் அதற்கு வெளிநாட்டவர்கள் தலையிடக் கூடாது என்றார். (செ-12)

## சர்வதேச பொறி...

உள்ளக பொறிமுறைகளின் மூலம், நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த கூடிய சூழல் உருவாகியுள்ளமையினால் சர்வதேசப் பொறிமுறைகள் இலங்கைக்கு தேவையில்லை என ஐ.நா மனித உரிமை ஆணையாளரிடம், மல்வத்தை பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே சித்தார்த்த ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் நேற்று கண்டிக்குச் சென்று தலதா மாளிகையில் வழிபாடு செய்ததுடன், மல்வத்த பீட மகாநாயக்க தேரரையும் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது, ஐ.நா மனித உரிமை ஆணையாளரிடம், நாட்டில் நல்லிணக்கத்தையும் அமைதியையும் ஏற்படுத்த தற்போதைய அரசாங்கம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய ஏதாவது கவலைகள் உள்ளனவா என்று, மல்வத்த பீட மகாநாயக்க தேரர் கேள்வி எழுப்பினார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தன்னைக் கொலை செய்யத் திட்டமிட்டவருக்கு பொதுமன்னிப்பு அளிக்கின்ற அளவுககு எமது நாட்டு ஜனாதிபதி சென்றிருக்கிறார். ஜனாதிபதியும் பிரதமரும் நியாயமான முறையில் நடந்த கொள்வர் என்று மக்கள் நம்புகின்றனர்.

மைத்திரிபால சிறிசேனவும், ரணில் விக்கிரமசிங்கவும் வடபகுதி மக்களுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடி, அவர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

அவர்கள் தமது கடமைகளை நன்றாக செய்வதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களுக்கு ஐ.நா முழு உதவியையும் வழங்க வேண்டும்.

எமது சொந்த பொறிமுறையின் மூலம், கலந்துரையாடல்களை நடத்தி எல்லாவற்றுக்கும் தீர்வு காண முடியும்.

நாட்டில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த அதிகமான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள், அமைதியாக வாழ்ந்து வருகின்றன என்றும் மகாநாயக்க தேரர் தெரிவித்துள்ளார். (செ-12)

# முப்படைத் தளபதிகளை சந்தித்தார் ஐ.நா மனித உரிமை ஆணையாளர்



இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன் நேற்று இலங்கையின் பாதுகாப்பு உயர் அதிகாரிகளை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கு வந்த ஐ.நா மனித உரிமை ஆணையாளரை, இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி வரவேற்றார்.

அதையடுத்து, இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி தலைமையிலான குழுவினருக்கும், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன் தலைமையிலான அதிகாரிகள் குழுவுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம் பெற்றன.

இந்தச் சந்திப்பில், இலங்கை இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளபதிகள், கூட்டுப்படைகளின் தளபதி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். (செ-12)

## சிகிச்சை பல...

தனியார் பேருந்து மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த 5 வயது பாடசாலைச் சிறுவன் நேற்று இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 3-ம் திகதி யாழ்ப்பாணம் பலாலி வீதி தபால்பெட்டிச் சந்தியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தை அதிவேகத்தில் கடந்து செல்ல முற்பட்ட தனியார் பயணிகள் பேருந்து ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி ஆகியவற்றை மோதித் தள்ளியதில் சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவனான பார்த்தீபன் சுவஸ்திகன் (வயது-5) படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் கடந்த 5 நாட்களாக சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் குறித்த சிறுவன் நேற்றிரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ-11-30)

## சரத் பொன்சேகா...

மிக்கப்படவுள்ளார்.

இதற்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நேற்று அங்கீகாரம் அளித்துள்ளதாக, கட்சியின் உதவிப் பொதுச்செயலர் அகில விராஜ்காரியவசம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் எம்.கே.டி.எஸ் குணவர்த்தன காலமானதால், ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நியமிக்கப்படவுள்ளார்.

இன்று நாடாளுமன்றம் கூடும் போது சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை சரத் பொன்சேகாவுக்கு படையினர் நலன்காக்கும் அமைச்சுப் பதவியும் வழங்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது. (செ-11)

## ஹூசைன்...

காலை கொழும்பில் நடைபெறும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது அரசியல் கைதிகளின் விடுதலை, அரசியல் தீர்வு, ஜெனிவா பிரேரணையின் முழுமையான அமுலாக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஐ.நா ஆணையாளரோடு பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(செ-12)

## தமிழர்களின்...

யான முறையில் இலங்கை அர சாங் கத்திடம் பரிமாறியுள்ளதாக இந்தியா வில் இருந்து வெளியாகும் டெக்கான ஹெரால்ட் வெளியிட்டுள்ளது.

சிறுபான்மை தமிழர்களின் அர சியல் உரிமைகள் குறித்தோ, அல்லது இலங்கையின் புதிய அரசாங்கத்தின் நல்லிணக்க செயல் முறைகள் குறி த்தோ, கொழும்புக்கான தனது பயணத்தின் போது, சுஸ்மா சுவராஜ் பகிரங்கமாக எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

கொழும்புடனான புதுடில்லியின் புதிய அணுகுமுறைக்கு ஏற்ப, வெளிப்படையாக அவர் எந்தக்கருத்தையும் வெளிப்படுத்தவில்லை.

இந்திய வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட, செய்திக்குறிப்பில், நல்லிணக்கச் செயல்முறைகள் குறித்தோ, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் குறித்தோ எந்த விடயங்களும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

எனினும், தமிழர்கள் அதிகமாக வாழும் வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கங்களுக்கு, அதிகாரப் பகிர்வை இலங்கையின் புதிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாக, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரிடம், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் எடுத்துக் கூறியதாக புதுடில்லி வட்டாரங்களை மேற்கோள்காட்டி டெக்கான் ஹெரால்ட் செய்தி வெளியிட்டுள்ளது. (செ-12)

## நாடளாவிய...

பினரையும் ஒருங்கிணைத்து டெங்கு நுளம்பை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை துரிதப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்றையதினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல் தொடர்பாக அவரை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் டெங்குநோயால் பாதிக்கப்பட்ட அதிகளவான நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளார்கள். அதில் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சாவகச்சேரி, கரவெட்டி ஆகிய சுகாதாரவைத்திய அதிகாரிபிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவானநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

டெங்குநுளம்பைகட்டுப்படுத் துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றுசேர்ந்து செயற்பட்டால் மாத்திரமே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும் அந்தவகையில் பிரதேசசெயலகங்கள், பிரதேச சபைகள், மாநகர சபை, சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனை, சுற்றுச்சூழல் அதிகார சபையினர், பொலிஸார், பாதுகாப்புபடையினர், பாடசாலை, தனியார் துறையினர் போன்ற பலரதும் ஒத்துளைப்பும் மிகஅவசியமாகும்.

அந்தவகையில் டெங்குநோயை கட்டுப்படுத்தும் நோக்குடன் தீவிரநடவடிக்கையாக எதிர்வரும் 11,12,13 ஆம் திகதிகளில் அனைத்துதரப்பினரையும் ஒன்றிணைத்துவிசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது தொடர்சியான நடவடிக்கையாக மேற்கொள்ளப்படவுள்ளது.

மக்கள் அதிகமாகவாழும் பகுதிகள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களுக்கு அண்மையில் பயன்படுத்தப்படாமல் உள்ள தனியார் காணிகள் ஒருகிழமைக்குள் துப்புரவு செய்யவேண்டும் அவ்வாறு தவறும் பட்சத்தில் காணிஉரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைஎடுக்கப்படும். அதற்கான அறிவித்தல் பலகைகள் அனைத்துகைவிடப்பட்டநிலையில் இருக்கும் காணிகளிலும் பொருத்தப்படவுள்ளது. மற்றும் பிரதேச சபைகள் ஒவ்வொன்றிலும் கழிவுகள் கொட்டுவதற்கென இடம் தெரிவுசெய்யப்பட்டு அவற்றில் குப்பைகள் சேகரிப்பதற்கானஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும் குறித்துவிசேட வேலைத்திட்டத்தில் அனைத்துதரப்பினரும் துப்புரவுப்பணிகளில் ஈடுபடவேண்டும். அலுவலகங்களில் அங்குபணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இணைந்து சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இவ்வாறு அனைத்து தரப்பினரும் விசேட வேலைத்திடடத்தில் இணைந்துசெயற்படவேண்டும்.

அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட்டால் மாத்திரமே எமதுமாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்தமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## சர்வதேச...

யாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற பயங்கரமான போரை தமது உயிரையும், உடல் அங்கங்களையும் தியாகம் செய்து முடிவுக்கு கொண்டு வந்த எமது படைவீரர்களை இந்த அரசாங்கம் போர்க்குற்ற விசாரணை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல முயற்சிக்கின்றது

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது எமது படைவீரர்களால் எவ்வித குற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் எமது படைவீரர்களை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிறுத்த இந்த அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் அமைப்புகளின் கருத்துக்களுக்கு அடிபணிந்து இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. புலம்பெயர் அமைப்புகளின் பணத்தைக் கொண்டே விடுதலைப் புலிகள் போரை முன்னெடுத்தனர். இவர்களை திருப்திப்படுத்தத்தான் இந்த அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

ஆனால் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமென நாம் நினைக்கவில்லை. இந்த அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகளால் சிங்கள மக்கள் மத்தியில் நாட்டில் என்ன நடக்கின்றது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனால் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை சமூகங்களை ஒன்றிணைக்க முடியும் என நாம் நினைக்கவில்லை.

இந்நாட்டில் நீண்டகாலம் நிலவிய போரை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் மக்கள் மத்தியில் ஐக்கியத்தையும், பொருளாதார அபிவிருத்தியையும் உருவாக்கியவர்கள் நாங்களே. எமது ஆட்சிக்காலத்தில் தான் பெருமளவான மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதுடன், படைவீரர்கள் வசமிருந்த நிலங்களில் எமக்கு தேவையற்ற காணிகள் என கருதப்பட்ட 90 சதவீதமான காணிகள் விடுவிக்கப்பட்டன. ஆனால் இந்த அரசாங்கம் பதவியேற்று ஒருவருடம் பூர்த்தியடைந்த நிலையில் இதுவரை என்ன செய்தது?

விடுதலைப் புலிகளின் கொள்கைகளையே தமிழ் மக்களை பிரதிநிதித்துவ ப்படுத்தும் தமிழ்த் தலைவர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். பிரபாகரனால் தெரிவு செய்யப்பட்ட அவர்கள் இன்றும் இனவாத நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் 2 அல்லது 3 நாட்கள் இங்கு பயணம் செய்து எதை சாதித்துவிடப் போகின்றார். வேறொரு நாட்டில் வாழும் ஒருவர் இந்த நாட்டில் நடந்த விடயங்கள் பற்றி எதனை தெரிந்து கொள்ளப் போகிறார்? இது மிகப்பெரிய நகைச்சுவையாக உள்ளது என செய்தியாளர்களிடம் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## வேண்டாம்...

நடவடிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதலாவதாக கையெழுத்திட்டுள்ளார்.

இதனை முன்னிட்டு புறக்கோட்டை சம்புத்தாலோக விகாரையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் முன்னாள் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க, முருத்தொட்டுவே ஆனந்த தேரர், பெங்கமுவே நாலக தேரர் மற்றும் போரினால் பாதி க்கப்பட்ட படையினர், அவர்களின் உறவினர்கள் எனப் பலர் பங்கேற்றுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அமைக்கப்படவுள்ள விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பரிந்துரை செய்திருந்தார்.

இந்நிலையில், இலங்கைக்கு நான்கு நாள் அதிகாரபூர்வ பயணத்தை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசேன் மேற்கொண் டுள்ள நிலையில், இந்தக் கையெழுத்து பெறும் நடவடிக்கை மகிந்த ராஜபக்ஷ வால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சிங்க லே பேரணி...

ருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த தகவலை வைத்து பொலிஸார் தடை உத்தரவைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (செ-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532






BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

Diploma In English 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

- ★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
- ★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
- ★ Excellent Teacher's Panel & Individual Attention
- ★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

(C-3722)

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
13.02.2016 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

Batches Start On

10.02.2016@10.00am
12.02.2016@ 9.00am
13.02.2016@10.00am
15.02.2016@ 9.00am
17.02.2016@ 9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S) 0777585913, 0777222422 0770365728,0776555677


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.